Vol.1, Issue 5 | Price ₹35 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

அக்டோபர் 2018

Rotary

## பலப்படும் நம்பிக்“கை”



ROTARY SERVICE PROJECTS

# VIDEO CONTEST

2018-19



Calling all **Rotary clubs in Zones 4,5 & 6A** to participate in this contest and win exciting cash prizes.

Club Presidents/Secretaries can submit one video (not more than **three minutes)** of the club's service projects implemented in the year, under The **Rotary Foundation's Six Areas of Focus:**

- **Peace and conflict prevention/ resolution**
- **Disease prevention and treatment**
- **Water and sanitation**
- **Maternal and child health**
- **Basic education and literacy**
- **Economic and community development**

**The contest will be judged by an esteemed panel convened by RID C Basker.**

The **top 3 entries** (from each of the **RI Zones of 4, 5 & 6A** India) will win the following cash awards:

**1st Prize: INR 100,000**

**2nd Prize: INR 50,000**

**3rd Prize: INR 25,000**

Rotary

The last date of submission of videos is **May 31, 2019.**

Video entries may be sent to **rotaryprojectsvideo@gmail.com** or mailed to **Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu.**

Alternatively, clubs can upload the video on **YouTube** and share the URL link to the above mail id.

**Please include the following too:**
Club Name and District, Contact Person and Email Id/Phone number, Name of the Video/Project and the URL Link.

Only Hi-res videos will be accepted. Videos can be in the format: **MOV, MP4 (MPEG4), AVI, WMV, FLV, MKV, VOB.**

# உள்ளே


**12** **கேரளத்துக்கு உதவ முழுமூச்சில் இறங்கிய ரோட்டரி**
உலகம் முழுவதிலிருந்தும் ரோட்டரியினர் கேரளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வருகின்றனர்.

**20** **ரோட்டரி கை கொடுத்து, நம்பிக் “கை” வந்தது!**
ஜம்மு கேஷ்மீரில் ரோட்டரியினர் கை இழந்தோருக்கு செயற்கை கை பொருத்துகின்றனர.

**28** **காச நோய் : ரோட்டரியின் முன் ஒரு சவால்!**
ரோட்டரி தலைவர்கள் இப்போது இந்தியாவில் காசநோயை ஒழிக்க போராட ஆயத்தமாகின்றனர்.

**32** **ரோட்டரியும், ரோட்டராக்ட் இணைந்து செயல்படுவது அவசியம்**
ரோட்டரி தலைவர்கள் தில்லியில் நடைப்பெற்ற ஒரு கூட்டத்தில் DRRகளை உற்சாகப்படுத்தினர்.

**42** **நாஸாவில் சென்னை மாணவர்கள்**
சென்னை மாநகராட்சிப்பள்ளியின் குழந்தைகளின் திறன்களை RC சென்னை கிழக்குச் சங்கம் வெளிக்கொண்டுவந்து அந்த சிறுவர்களுக்கு வெளிநாடுகளை சுற்றி காண்பித்தனர்.

**52** **வடகிழக்கில் ரோட்டரியின் மாயாஜாலப் பணி**
இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ரோட்டரி, TRF உலக நீதி மூலம் நடத்தப்பட்டுள்ள சில திட்டங்கள்.

**62** **கதக் கலாசாரங்களின் சங்கமம்**
கதக் என்னும் ஒரு பழம் பெறும் நாட்டியக்கலையைப் பற்றிய குறிப்பு.

**68** **பார்வையற்றோருக்கும் கல்விக் கண் தரும் பூங்கா!**
மஞ்சேரி ரோட்டரி சங்கத்தில் பார்வை இழந்தோர் கற்றுக்கொள்ள வசதிகளோடு ஒரு பூங்கா.




















**அட்டையில்:** ஜம்மு ஆஸ்தா மற்றும் ஜம்மு மிட்டவுன் நடத்திய முகாமில் செயற்கை கை பொருத்தப்பட்ட வாஷித் கான்.

## நெகிழவைக்கும் நன்கொடை

*ரோட்டரியன் D ரவிசங்கர் ரூபாய் 100 கோடியை TRFக்கு நன்கொடை அளித்த செய்தி வெளியிட்டதற்கு வாழ்த்துக்கள். என்றோ ஒரு முறை ரவிசங்கர் குடும்பத்தினர் போன்றோரை பார்க்கிறோம். அவர்களை ஆண்டவர் ஆரோக்கியமாக, ஆனந்தமாக வைத்திருக்கட்டும். இந்த உன்னத மனிதரையும் அவர் குடும்பத்தினரையும் திரையிட்டு காட்டியதற்கு நன்றிகள்.*

*ராபர்ட் ஃப்ராக்லின் ரெகோ*
*RC பாஜ்பே — D 3181*

*TRFக்கு ரூபாய் 100 கோடி என்ற தலைப்பு என்னை ஈர்த்தது, ரவிசங்கர் அவர்களின் கருத்துகள், வாழ்க்கை தத்துவங்கள் மனதை தொட்டதால், அந்த கட்டுரை நகல்களை என் குழந்தைகள் மற்றும் பேர குழந்தைகளுக்கும் அளித்தேன்.*

*திரிலோசன் சிங், RC தில்லி — D 3011*

*D ரவிசங்கர் அவர்கள் சிறந்த நன் கொடையாளராய் ரோட்டரி உலகை மகிழ்ச்சியில் ஆட வைத்துவிட்டார்.*

*அருண் குமார் டாஷ்*
*RC பாரிபதா — D 3262*

*D ரவிசங்கர் அவர்களின் எளிமைக்காகவும், ரூபாய் 100 கோடி பரிசுக்காகவும் வாழ்த்த வேண்டும். அவரின் இந்த செயல் பல ரோட்டரி மக்களை சங்கத்திற்கு நிதி அளிக்க ஊக்கப்படுத்தும்.*

*S ரங்கராஜன், RC திருநெல்வேலி புறநகர் பகுதி — D 3212*

*நீங்கள் எட்டு பக்கத்தில் சங்கத்திற்கு D ரவிசங்கர் அவர்களின் இணையற்ற கற்பனைக்கு எட்டாத பங்களிப்பை குறிப்பிட்டிருந்தீர்கள். அவர் சொல்கிறார், "நான் சக தொழிலாளி தான் என்னால் தலைவர்களை வழிநடத்த முடியாது''. இது ரோட்டரி மக்களுக்கு பெரிய செய்தி. மேலும்*



*அவர் வடகிழக்கு மற்றும் பாகிஸ்தான் எல்லை போன்ற இடத்தில் உள்ள மக்களிடம் சென்றது அவரது சிறப்பை காண்பிக்கிறது.*

*K தேவராஜன், RC கிழக்கு கோயம்பத்தூர் — D 3201*

*D ரவிசங்கர் அவர்களின் கதை என்னை வீழ செய்தது! ரூபாய் 100 கோடி தொகை மட்டும் அல்ல, அவரது வாழ்க்கை எனக்கு அதிகமான ஊக்கத்தை அளிக்கிறது.*

*அடுல் பிடெ,*
*RC தானே ஹில்ஸ் — D 3142*

*விவரமான கதையால் D ரவிசங்கர் அவர்களின் ஊக்கமூட்டும் நடவடிக்கை தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இந்த கட்டுரை நம்மை தற்போது உள்ள பல விஷயங்களை சிந்திக்க வைத்துள்ளது: ஒரு மனிதனை மிகுதியாக பங்களிக்க செய்வது எது? படிக்க வேண்டிய பாடங்கள் என்ன? மீதமிருக்கும் நாம் என்ன செய்வோம்? இந்த கேள்விகள் என் மனதில் எழுந்தது, பதில்கள் நம்மிடம் உள்ளது என்பதை அறிவேன்.*

*நிலாஞ்சன் டெ, RC கல்கத்தா பவானிபோர் — D 3291*

*ரவிசங்கர் TRFக்கு அளித்த ரூபாய் 100 கோடி நன்கொடை பற்றிய உணர்வுபூர்வமான அற்புதமான கட்டுரையை படிக்க ஆனந்தமாக இருந்தது. உண்மையான ரொடேரியனால் மட்டுமே இது முடியும். இதுபோல் பலர் பின்பற்ற முன்வருவர் என நிச்சயமாய் நம்புகிறேன்.*

*GP டியோதர், RC நாசிக் — D 3030*

*TRFக்கு ரவிசங்கர் அளித்த ரூபாய் 100 கோடி நிதி ஊக்கமளிக்கிறது. தன் சொத்தில் 70 சதவீதத்தை சங்கத்திற்கு நன்கொடை அளித்ததால், தன்னை மீறிய சேவை என்ற ரோட்டரியின் கொள்கையில் வாழ்ந்திருக்கிறார்.*

*TN நசிமுதீன்*
*RC தெல்லிசேரி — D 3202*

## நல்ல கட்டுரை, தனி சிறப்பானது

சக்தி சின்ஹா அடல்ஜியை சொன்ன விதம் பாராட்டிற்குறியாது. RC மதுரை நெக்ஸ்ட் ஜென் வேலை பார்ப்போர் வேலை தேடுவோர் தொடர்பு ஏற்படுத்தும் முயற்சி பயனுள்ளது. பெரிய நகரங்களிக் உள்ள சிறந்த கிளப்கள் பின்பற்றலாம். RC க்ரேட்டர் தேஸ்புரின் குழந்தைகளின் இருதய அறுவை சிகிச்சைக்கான தி கிப்ட் ஆஃப் லைஃப் திட்டம் பாராட்ட வேண்டியதாகும். ஜாதி, மத பேதங்களை தாண்டியது. ஷீலா நம்பியாரின் இஸ் யுவர் டிரைனர் ஃபிட் ஃபார் யூ கவர்ச்சியான ஃப்ட்னஸ்களுக்கான கண் திறப்பு. 150 நாடுகளுக்கு ரோட்டரி நினைவு தபால் தலை வெளியிட்டுள்ளது சிறப்பானது. இந்த இக்கட்டான தருணத்தில் கேரள மக்களுக்கு அளித்த ஆதரவு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

MT பிலிப், திருவனந்தபுரம்
புறநகர் — D 3211

## RIPN சுஷில் குப்தாவுக்கு வேண்டுகோள்

RIPN சுஷில் குப்தாவை சிரமான சூழல்களில் மனித உறவுகள் செல்வதால் ரோட்டரியின் மனிதாபிமான அடிப்படை திட்டங்களை அதிகரிக்க பணிவோடு கேட்டு கொள்கிறேன். ரோட்டரி அன்பை, பாசத்தை, ஒருவருக்கொருவர் மரியாதையை உறுதிபடுத்தும்.

Dr NRUK கர்தா,
திருவனந்தபுரம் புறநகர் — D 3211

RIPN சுஷில் குப்தாவுக்கு வாழ்த்துக்கள். மாநில சந்திப்பில் ஒரு முறை அவரோடு உரையாடி இருக்கிறேன். மனிதர்களிடமும் ரோட்டரையிடமும் மிகவும் பொறுப்பும் அர்ப்பணிப்பும் உடையவர். RI தலைவர் ராஸின் உறுதியான ரோட்டரி கிளப்கள் "அதிக நன்மை'' செய்ய அழைக்கும் நிலையில், கிளப்பில் அதிக அளவில் நபர்கள் தேவை இளைய சமுதாயத்தினர் தேவை. அவர்கள் தான் புத்துணர்வு மற்றும்

ரோட்டரியை உறுதிபடுத்தும் வகையில் பார்வையை விரிவாக்க முடியும். தட்டம்மை மற்றும் ரூபெல்லாவை இந்தியாவிலிருந்து நீக்குவது பற்றிய கட்டுரைகள் தகவல் நிறைந்ததாகவும் ஊக்க மூட்டுவதாகவும் இருந்தது. கிளப் மாட்டர்ஸ்சில் புகைப்படத்துடன் கிளப்பின் செயல்கள் அருமை. அது கிளப் தலைவர்களுக்கு உந்து சக்தியாக இருக்கும்.

PRN சந்திர மௌலி
பெர்ஹாம்புர் மிட்டவுன் — D 3262

சந்தௌசியில் கண் ஆஸ்பத்திரி 60 ஆண்டுகளாக நடத்தும் ரோட்டரிக்கு வாழ்த்துக்கள். தேவையான நிதி இருப்பதால், ஏழைகளிடம் 1000 ரூபாய்க்கு மேல் வசூல் செய்ய கூடாது என்று தோன்றுகிறது. நாங்கள் ஒருவருக்கு ரூபாய் 1200 வீதத்தில் வருடத்தில் 200 நோயாளிகளுக்கு IOL வைக்கிறோம்.

ஷிவ்ராஜ் பார்கவா, RC ஆக்ரா
டாஜ் சிட்டி — D 3110

செப்டம்பர் வெளியீட்டில் பல சுவாரசியங்கள்; 'லீயோவிலிருந்து ரோடெரியன்' 1976ல் நாங்கள் முதல் லியோ கிளப் கொல்கத்தாவில் தொடங்கியதை நினைவுபடுத்துகிறது.

பியூஷ் தோஷி
RC பேலுர் — D 3291

## ரோட்டரி CoL மற்றும் RI மாநாடு

ஏப்ரல் வெளியீட்டில் 'தேடும் பார்வை', பாரி ராசன் என்ன செய்ய விரும்புகிறார் என்று காட்டியது. CoL ரோட்டரியின் சவால்களில் ஒன்று என்று என்கிறார். இன்றைய வேகமான கால கட்டத்தில் மாற்றத்திற்காக ஐந்து வருடம் காத்திருப்பது ஏற்கமுடியாதது. கடந்த CoLல் வரவேற்கபட்ட மாற்றமாக காணொளி காட்சி மூலம் வருடத்தில் எடுக்க வேண்டிய 'தீர்மானங்கள்' பிரிக்கப்பட்டன. முன்னர் செய்தது போல் RI தீர்மானங்களோடு, CoL வருட சந்திப்பாக மாற்றலாம். ஒவ்வொரு வருடமும் சந்தித்து பிரச்சனைகளை தீர்த்து கொண்டால் வேலை பளு குறையும்.

திட்டங்கள்/சட்ட வரைவுகள் மாநில அல்லது மண்டலம்-ரீதியாக வரைமுறை செய்தல், காணொளி மற்றும் தொழில்நுட்பங்களின் உபயோகம் பெரும் அளவில் பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

PDG ராஜ்குமார்
வையாபுரி — D 3201

## உறுப்பினரை தக்கவைக்க வேண்டும்

உறுப்பினர் அந்தஸ்தை செரிவூட்ட, உறுப்பினரை தக்கவைப்பது அவசியம். கிளப்பிலிருந்து வெளியேறும் உறுப்பினர் பற்றி மாநில கமிட்டியிடம் தெரிவிக்க வேண்டும். கிளப் உறுப்பினர் தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாட்டால் செல்கின்றனர். மேலும் உறுப்பினர்களின் துணைவர் சேருவதற்கு 50 சதவீத சலுகை அளிக்க வேண்டும்.

ராக்கேஷ் பாட்டியா
RC பேலுர் — D 3291

## RI டைரக்டரின் சிறப்பு செய்தி

டைரக்டர் C பாஸ்கரின் செய்தி (ஆகஸ்ட் வெளியீடு) சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுப்பினர்களை தக்க வைப்பது அவசியம், மிகவு சரி.

AR பாஸ்கர் ராஜ்
RC மத்திய சிவகாசி — D 3212

தலைவர் பாரி ராசினிடம் ரவிசங்கர் TRFக்கு அளித்த 100 கோடி நிதி செய்தியை டைரக்டர் C பாஸ்கர் அருமையாக சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை தரும் விஷயம் இது.

S மோகன்,
RC மேற்கு மதுரை — D 3000

### திருத்தம்

*செப்டம்பர் இதழில் கட்டுரை, ஜெய்பூர் ரோட்டரியின் ஒற்றுமையை குறிக்கும் கட்டுரையில், பிசியோதெரபி மற்றும் டையாலிசிஸ் சென்டர் செலவு ரூபாய் 2 கோடி என்பதற்கு பதிலாக தவறாக ரூபாய் 2 லட்சம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.*

## புதுமையான திட்டம்

வாட்டர் வீல் தண்ணீரை சுலபமாக கிடைக்க செய்கிறது என்ற கட்டுரை எங்களை ஈர்த்தது.

பரமேஷ் தேவ் சவுத்ரி
RC தெற்கு கவுஹாதி — D 3240

## அருமையான மாநாட்டு கட்டுரை

டொரன்டொ எங்கும் ரோட்டரி (ஆகஸ்ட் வெளியீடு) கட்டுரைக்கு நன்றி, தெளிவான நடையில் எழுதப்பட்டிருந்தது படிக்க அருமையாகவும் இருந்தது. நான் மாநாட்டிற்கு போகவில்லை என்றாலும், எழுத்தாளரோடு நானும் ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ஷிப் மற்றும் ரோட்டரி நட்பை கொண்டாடி ஆனந்தமாக பயனித்தேன். எழுத்தாளரின் வரிகளில், புகழ்பெற்ற பேச்சாளர்களின் உரையை கேட்கும்போது, நம் சிறப்பான மாநாட்டின் வாசம் வீசியது.

கிதி புஜர்பரூவா,
RC தெற்கு கவுஹாத்தி — D 3240

## குறைந்த பாலின விகிதம்

இதழின் நடுப்பக்கத்தில் 40 DGகள் மத்தியில் வெறும் இரண்டு பெண்களை பார்த்தது வருத்தமாக இருந்தது. இந்த குறைந்த பாலின விகிதத்தை சரி செய்ய ரோட்டரி ஏதாவது செய்ய வேண்டும்.

VG தியோதர், RC நாசிக் — D 3030

ஆகஸ்ட் மலரில் தவறான பழக்கத்தை எப்படி விடலாம் கட்டுரை அருமை. மாநில மாநாடுகளில், ரோட்டரி விழாக்களில் மது விநியோகிப்பதை நிறுத்தலாமா? இதை முயற்சி செய்து பதிவு ஏட்டில் ஏற்படும் தாக்கத்தை பார்போம்!

ஸ்ரீநாத், RC வடக்கு
ஷிமோகா — D 3182

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:* rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma — RI Dist 3030
Chair – Governors Council

DG Pinky Patel — RI Dist 3060
Secretary – Governors Council

DG Subhash Jain — RI Dist 3012
Secretary – Executive Committee

DG A Venkatachalapathy — RI Dist 3201
Treasurer – Executive Committee

DG Shashi Sharma — RI Dist 3141
Member – Advisory Committee



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# கேரளத்தில் ரோட்டரி நிகழ்த்திய மனித நேயம்

பெங்களூரைச் சேர்ந்த D ரவிசங்கர், TRFக்கு ரூ.100 கோடி நன்கொடை அறிவித்து ஒரு மாதம் முன்புதான் இன்ப அதிர்ச்சி தந்தார். இது பரபரப்பாகப் பேசப்பட்டது. இப்போது, கேரளத்தில் நூறு ஆண்டுகளாகக் காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு ரோட்டரி சங்கத்தினர் உதவிக் கரம் நீட்டி, நிவாரணப் பணிகளை; சுறுசுறுப்பாக மேற்கண்ட மனிதாபிமானம் நெகிழவைத்துவிட்டது.

எனது ரோட்டரி சகா பி. ஜெயஸ்ரீ வெள்ளம் பாதித்த குட்டநாடு, கோட்டயம், குமரகம், ஆலப்புழை ஆகிய இடங்களில் இரண்டு நாள் சென்று பணிகளைப் பார்வையிட்டார். அவரது பயணத்துக்கு ரோட்டரி 3211 மாவட்டத்தின் ஆளுநர் EK லூக் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப் பட்டோரின் துயரத்தையும் பரிதாபமான நிலையையும் அவர் நேரில் கண்டார். வீடுகள் சேதமடைந்திருந்தன. பல வீடுகள் மண் சரிவினால் கவிழ்ந்திருந்தன. வெள்ளம் வடிந்த பின் தங்களது வீடுகளுக்குத் திரும்பிய மக்களுக்கு வேதனை தரும் வகையில், வெள்ளம் அவர்களது உடைமைகளைச் சூறையாடியிருந்தது.

பொதுவாக நாடு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் கேரள மாநிலத்தின் கழிமுக (backwaters) பகுதிகளுக்கு வந்து, படகுவீடுகளில் தங்கி விடுமுறையை உல்லாசமாகக் கழிப்பது வழக்கம். படகு சவாரியும் மேற்கொள்வர். ஆனால், ஜெய்ஸ்ரீ இந்த முறை மேற்கொண்ட படகு சவாரி அதற்கு முரணானது. வெள்ளம் பாதித்த பல பகுதிகளுக்குச் சென்று அவர் பார்வையிடவும் பாதிக்கப்பட்டோருக்கு உதவும், அவரும் ரோட்டரி அமைப்பினரும் படகுகளில் தான் செல்ல நேர்ந்தது.

ஜெயஸ்ரீயுடன் வெள்ள நிவாரணப் பணிக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டினா ஆன்டனி பல இடங்களுக்குச் சென்றார். மீனவர்கள் தங்களது அன்றாட பிழைப்பே பாதிக்கப்பட்டு படகுகள், வலைகள் சேதமடைந்த நிலையிலும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீதமிருந்த படகுகளின் மூலம் மீட்டு கரை சேர்த்ததை விவரித்தார். அவதியுற்ற சாமானிய மக்கள் பாதுகாப்பாக நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டனர்.

ரோட்டரியின் 3211, 3201 மற்றும் 3202 ஆகிய மாவட்ட அமைப்புகள் துரிதமாக இப்பணியில் ஈடுபட்டன. மக்களைக் காப்பாற்றி, உணவுப் பொட்டலங்கள், குடிநீர் பாட்டில்கள், துணிமணிகளை முதலில் வழங்கியது ரோட்டரி அமைப்புதான். எல்லா இடங்களிலும் ரோட்டரி அமைப்பினர்தான் என்கிறார் டினா. சுத்தப்படுத்தும் பணியாக இருக்கட்டும், துணிமணிகள், சானிடரி நேப்கின்கள், டயபர்கள் வழங்குவதாகட்டும், மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடு செய்வதாகட்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரோட்டரியினர் ஆற்றிய பணிகளின் தடங்களைக் காணலாம்.

சேதமடைந்த வீடுகளுக்கு மாற்று வீடுகளைக் கட்டித் தரவேண்டும். அவற்றைப் பார்வையிட்ட ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி தலைமையில் ஓர் அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது. பானர்ஜி குஜராத்தில் 2001-02 ஆம் ஆண்டில் கட்ச் பகுதியில் நில நடுக்கத்தால் சிதிலமடைந்த வீடுகளை இழந்தவர்களுக்கு குறைந்த செலவில் விரைவாக வீடுகளைக் கட்டித் தரும் சவாலான திட்டத்தில் ஈடுபட்ட அனுபவம் பெற்றவர்.

அப்பகுதியில் குறைந்த செலவில் மூவாயிரம் வீடுகளைக் கட்டித் தரும் பணியை ரோட்டரி ஏற்றுக் கொள்வதற்காக உலகளாவிய மானிய உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று அவர் யோசனை கூறினார்.

ஆண்களுக்குத் தோள் கொடுக்கும் வகையில் ரோட்டரி அமைப்பின் பெண்களும் வரிந்து கட்டிக் கொண்டு துயரமடைந்தவர்களின் கண்ணீரைத் துடைத்தனர். இதன் காரணமாகத் தான், ரோட்டரி அமைப்புகளில் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும் என்று குரல் எழுப்பப்படுகிறது. ஜெய்ஸ்ரீ எழுதிய கேரளத்துக்கு உதவ முழுமூச்சில் இறங்கிய ரோட்டரி என்ற தலைப்பிலான கட்டுரை இந்த இதழின் 12ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. அதைப் படிக்கும்போது ரோட்டரியில் இடம்பெற்றது குறித்து பெருமிதமும் உத்வேகமும் ஏற்படுகின்றன.



ரஷீதா பகத்



# உலக போலியோ தினத்தை கொண்டுவோம்

BE THE INSPIRATION

வியாழக்கிழமைதோறும் எனக்கு உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து (World Health Organisation) போலியோ ஒழிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மின்னஞ்சல் வரும். ஒவ்வொரு நாட்டிலும் எங்கே, எப்படி எத்தனை முறை நோய்த்தடுப்பு பிரசார இயக்கங்கள் நடத்தப்படுகின்றன, எத்தனை குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து போடப்படுகிறது என்பன போன்ற விவரங்கள் இருக்கும். எந்தெந்த இடங்களில் போலியோ கிருமிகள் பரவும் சூழல் உள்ளது என்பதும் குறிப்பிடப்படும். ஆனால், வாரந்தோறும் எனது மின்னஞ்சல் உள்பெட்டியில் மின்னஞ்சல் வரும்போதெல்லாம் சில கணம் இதயமே துடிப்பதற்கு நின்று போவதைப் போல் உணர்வேன். இந்த வாரம் எங்காவது குழந்தைக்கு போலியோ நோய்க்கிருமி தொற்றியிருக்கிறதா இல்லையா என்ற தகவலை அறியும் வரையில் இதயம் துடிக்கும்.

நண்பர்களே, போலியோ ஒழிப்புப் பணியில் நாம் இப்போது இப்படித்தான் இருக்கிறோம். மின்னஞ்சலைத் திறக்கும்போது ஆண்டுதோறும் எத்தனை பேருக்கு போலியோ பாதிப்பு இருப்பதை அறியாமல் இருந்திருக்கிறோம் என்று நினைவுக்கு வராது. மாறாக, புதிதாக எங்காவது, யாருக்காவது போலியோ நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதா, இல்லையா என்ற கேள்வி தான் வியாழக்கிழமை வரும் மின்னஞ்சலைப் பார்த்ததும் தோன்றும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தினந்தோறும் ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ பாதிப்பு இருந்தது. அதற்குப் பிறகு, ஆண்டுதோறும், வாரந்தோறும் நாம் முன்னேறி வருகிறோம். நாட்டுக்கு நாடு, மண்டலத்துக்கு மண்டலம் போலியோ இல்லை என்பது பிரகடனப்படுத்தப்படுவதைக் கொண்டாடி வருகிறோம். நமது இலக்கை மெல்ல மெல்ல எட்டி வருகிறோம். போலியோ பாதிப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது.

போலியோவை முற்றிலும் ஒழிப்பது என்ற இலக்கை நெருங்கி வருகிறோம். அதே சமயம் ஏராளமான பணிகளும் உள்ளன. இந்த மாதம், அக்டோபர் 24ம் தேதி உலக போலியோ ஒழிப்பு தினம் வருகிறது. இது குறித்து விழிப்பு ஏற்படுத்தவும் போதிய நிதி திரட்டவும் உலகம் முழுதும் கடந்த ஆண்டு ஏராளமான ரோட்டரி சங்கங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தின. இந்த ஆண்டு அதை விட மேலும் பல நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அப்படி நிகழ்வுகளை இந்த ஆண்டு நடத்தும் போது, அது குறித்த விவரத்தை *endpolio.org* என்ற இணையவாசலில் பதிவு செய்யுங்கள். அப்போது தான் மேலும் பலர் பங்கேற்பர். அதற்கான யோசனைகளையும் தகவல்களையும் அறிந்து கொள்வதற்காக தயவு செய்து *endpolio.org* என்ற இணைய தளத்தில் நுழையுங்கள். அத்துடன், அதன் மூலம் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான உதவி பெற்றுக் கொள்ளுங்கள்.

போலியோவை ஒழிப்புக்கு ரோட்டரி சங்கங்கள் மேற்கொள்ளும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பணிகளை வெளிப்படுத்துவதற்கு உலக போலியோ ஒழிப்பு தினம் மிகப் பெரிய வாய்ப்பாக அமைகிறது. அத்துடன், பில் மற்றும் மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளையின் சவாலையும் சாதகமாக ஏற்றுச் செயல்படவும் இது சிறந்த வழியாகவும் அமையும். அதாவது போலியோ ஒழிப்புக்கு ரோட்டரி சங்கம் பயன்படுத்தும் ஒவ்வொரு டாலருக்கும் இரு மடங்காக பில் மற்றும் மெலிந்தா அறக்கட்டளை நிதி அளிக்கும்.

அக்டோபர் 24ம் தேதி உலக போலியோ ஒழிப்பு தினத்தில் என்னுடனும் ரோட்டரி சங்கத்தினருடனும் இணையுங்கள் போலியோ இல்லாத உலகம் அமைவதற்குத் தூண்டுகோலாக அமையுங்கள்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# நம் சமூகங்களை மேம்படுத்துவோம்

அன்பார்ந்த ரொட்டரியன்களே,

நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி, வறுமையை ஒழித்து சமூகங்களைப் பலப்படுத்தினால் மட்டுமே உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கமுடியும் என்று அடிக்கடிச் சொன்னார்.

இதை சாதித்துக்காட்டிய, சேத்னா என்ற பெண்ணின் வெற்றிப் பயணத்தை இங்கு உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மும்பையில், சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர், வறட்சி பீடித்த மேற்கு மஹாராஷ்டிராவில் பிரபலமான சமூக ஆர்வலரும் விவசாயியாகவும் இருந்தவரைத் திருமணம் செய்துகொண்டார். வறுமை சூழ்ந்த அப்பகுதியில், உள்ளூர் பெண்கள், திராட்சை வளர்ப்பு அல்லது காய்கறிகள் விற்பனை செய்வது போன்ற சிறு தொழில்களைச் செய்து வறுமையில் உழன்று வருவதைக் கண்டார். நிதித் துறையில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருந்த சேத்னா, அதை செயல்படுத்தத் துவங்கினார். முதல் முயற்சியாக, 1992ம் ஆண்டு, பெண்கள் சுய உதவிக் குழுக்களிலும் சேமிப்புக் குழுக்களிலும் அவர்களை ஒன்று திரட்டினார். இதன் விளைவாக, அப்பெண்கள் தமது தொழிலில் பெற்றிருந்த அறிவை பிறரோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்கள். பொருட்களை மொத்தமாக வாங்குவதன் மூலம் செலவைக் குறைத்து பணத்தை சேமிக்கவும் கற்றுக்கொண்டார்கள்.

ஆனால், இது போதாது வியாபார கடன்கள் அவசியம் என்பதை சேத்னா புரிந்து கொண்டார். அவர்களுடைய குறைந்த வருமானத்தினால், வங்கிகள் அவர்களுக்குக் கடன் அளிக்க மறுத்தன. ஆகையால், 1994 ஆம் ஆண்டு, 500 கிராமப்புற பெண்களின் சார்பாக, வங்கி ஒன்றை நடத்த உரிமம் கேட்டு விண்ணப்பித்தார். ஒரு வங்கியை தொடங்கவேண்டும் என்றால், அதன் இயக்குனர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கவேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அடிப்படை விதி வைத்திருக்கிறது. சேத்னாவைத் தவிர, விண்ணப்பித்த பெண்கள் எவருக்கும் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை. கையொப்பம் கூட இடத்தெரியாமல், கைரேகை வைத்தே அவர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள். ஆகையால், இந்திய ரிசர்வ் வங்கி அவர்களுடைய விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டது.

ஆனால் 40 வயதான சேத்னா இதனால் சோர்ந்து விடவில்லை. அப்பெண்களுக்கு கல்வி அறிவு புகட்டும் வகுப்புகளைத் தொடங்கினார். எழுதப் படிக்கத் தெரிவதற்கும் மேலாக, அசலில் இருந்து வட்டியைக் கணக்கு போடுவது எப்படி என்பதும் அவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. “மூன்று வருடங்களுக்குப் பிறகு, RBI-க்கு மீண்டும் விண்ணப்பித்து உரிமத்தைப் பெற்றோம். ரூபாய் 5,00,000 முதலீட்டோடு, 500 பெண்கள் சேர்ந்து துவங்கிய மன் தேஷி மகிளா சஹகரி வங்கி இப்படித்தான் துவங்கப்பட்டது,” என்று நினைவு கூறுகிறார். வங்கி தன்னிறைவு பெறுவதற்கு மூன்று வருடங்கள் பிடித்தது. இன்று, ரூ.3.78 கோடி வைப்புத்தொகையும் ரூ.1.4 லட்சம் வாடிக்கையாளர்களை கொண்டு செழித்து வளர்ந்திருக்கிறது.

முறையான கல்வி பெறாத கிராமப்புறப் பெண்கள், வறுமைச் சுழலில் இருந்து விடுபடவேண்டும், அவர்களுக்கு சிறு கடன்களைத் தாண்டி பணம் தேவை. நிதிக் கணக்கு வழக்குகளில் வங்கி மிகவும் கறாராக இருப்பதாகவும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உள் தணிக்கையும், கூட்டுறவுத் துறையின் வருடாந்திர தணிக்கையும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய வங்கியின் ஆய்வும் தவறாமல் நடைபெறுவதாக சேத்னா கூறுகிறார். உண்மையை சொல்வதென்றால், நம்மிடையேயும் பல சேத்னாக்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு தேவைப்படுவதெல்லாம், மக்களின் ஆதரவும், அமைப்புகளின் ஊக்குவிப்பும் தான்.

ரோட்டரி தன்னார்வ செயல்களின் மூலமாக சமூகத்திற்கு தொண்டாற்றுவதற்கு முக்கியத்துவம் தருகிறது. ரோட்டரி உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு, சமூகத்துடனான உறவு, திட்டங்களில் நெகிழ்வுத் தன்மை, பிரச்சினைகளைத் தீர்ப்பதில் புதுமையான அணுமுகுறைகள் ஆகியவை பெருத்த வெற்றிக்கு வழிகோலும். உந்துசக்தியாக இருங்கள். ஒருவருக் கொருவர் ஊக்கப்படுத்தி, ஒன்றுபட்டு உலகை மாற்றிக் காட்டுவோம்.



C பாஸ்கர்
டைரக்டர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# District Wise TRF Contributions as on August 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 12,849 | 605 | 0 | 8,000 | 21,454 | 79 | 1.7 |
| 2982 | 3,334 | 59 | 0 | 0 | 3,393 | 55 | 1.9 |
| 3000 | 9,200 | 1,000 | 4,961 | 4,265 | 19,426 | 47 | 1.0 |
| 3011 | 27,584 | 0 | 16,347 | 4,928 | 48,859 | 42 | 1.3 |
| 3012 | 122,684 | 0 | 130,200 | 800 | 253,684 | 39 | 1.2 |
| 3020 | 1,569 | 0 | 0 | 0 | 1,569 | 6 | 0.2 |
| 3030 | 1,551 | 0 | 0 | 0 | 1,551 | 1 | 0.0 |
| 3040 | 2,009 | 0 | 88 | 0 | 2,098 | 4 | 0.2 |
| 3053 | 25,457 | 0 | 0 | 0 | 25,457 | 2 | 0.1 |
| 3054 | (29,239) | 0 | 30,000 | 0 | 761 | 3 | 0.1 |
| 3060 | (15,464) | 0 | 28,841 | 0 | 13,377 | 177 | 4.3 |
| 3070 | 30,668 | 300 | 0 | 0 | 30,968 | 86 | 3.0 |
| 3080 | 14,308 | 2,077 | 4,735 | 0 | 21,120 | 16 | 0.5 |
| 3090 | 12,180 | 0 | 0 | 0 | 12,180 | 30 | 1.5 |
| 3100 | 4,845 | 0 | 0 | 0 | 4,845 | 11 | 0.7 |
| 3110 | 11,499 | 499 | 1,835 | 0 | 13,832 | 18 | 0.5 |
| 3120 | 5,088 | 0 | 0 | 0 | 5,088 | 7 | 0.2 |
| 3131 | 71,727 | 602 | 64,653 | 8,203 | 145,184 | 203 | 4.0 |
| 3132 | 5,478 | 0 | 0 | 20,000 | 25,478 | 40 | 1.1 |
| 3141 | 359,767 | 6,582 | 103,820 | 1,000 | 471,169 | 247 | 4.9 |
| 3142 | 130,071 | 0 | 0 | 0 | 130,071 | 294 | 9.3 |
| 3150 | 17,343 | 0 | 25,807 | 195,467 | 238,616 | 219 | 6.3 |
| 3160 | 3,742 | 580 | 0 | 0 | 4,322 | 12 | 0.5 |
| 3170 | 21,163 | 909 | 4,679 | 0 | 26,750 | 116 | 2.2 |
| 3181 | 13,694 | 441 | 0 | 0 | 14,135 | 55 | 1.8 |
| 3182 | 8,441 | 0 | 6,516 | 0 | 14,958 | 7 | 0.2 |
| 3190 | 34,903 | 3,512 | 1,163 | 1,449,275 | 1,488,853 | 171 | 3.6 |
| 3201 | 16,530 | 0 | 62,633 | 0 | 79,163 | 54 | 1.0 |
| 3202 | 7,029 | 317 | 0 | 0 | 7,346 | 6 | 0.1 |
| 3211 | 12,800 | 0 | 0 | 1,515 | 14,316 | 145 | 3.3 |
| 3212 | 38,662 | (468) | 0 | 2,000 | 40,194 | 36 | 0.9 |
| 3231 | 909 | 0 | 0 | 0 | 909 | 11 | 0.4 |
| 3232 | 67,542 | 100 | 6,085 | 1,000 | 74,727 | 69 | 1.6 |
| 3240 | 23,408 | 110 | 0 | 0 | 23,518 | 41 | 1.4 |
| 3250 | 2,339 | 0 | 0 | 0 | 2,339 | 6 | 0.2 |
| 3261 | 4,233 | 0 | 0 | 0 | 4,233 | 6 | 0.2 |
| 3262 | 6,928 | 0 | 900 | 3,000 | 10,828 | 22 | 0.7 |
| 3291 | 37,644 | 0 | 7,924 | 800 | 46,368 | 74 | 2.0 |
| **India Total** | **1,124,478** | **17,225** | **501,188** | **1,700,252** | **3,343,143** | **2,457** | **2.0** |
| 3220 Sri Lanka | 13,899 | 0 | 0 | 5,000 | 18,899 | 39 | 2.2 |
| 3271 Pakistan | 5,200 | 10,867 | 0 | 0 | 16,067 | 3 | 0.2 |
| 3272 Pakistan | 986 | 268 | 0 | 0 | 1,254 | 4 | 0.1 |
| 3281 Bangladesh | 28,584 | 1,100 | 0 | 0 | 29,684 | 31 | 0.6 |
| 3282 Bangladesh | 3,250 | 300 | 0 | 0 | 3,550 | 7 | 0.2 |
| 3292 Nepal | 31,982 | 4,462 | 26,367 | 0 | 62,811 | 102 | 2.3 |
| **South Asia Total** | **1,208,379** | **34,222** | **527,555** | **1,705,252** | **3,475,409** | **2,643** | **2.0** |
| **World Total** | **15,064,307** | **3,044,276** | **2,492,479** | **3,894,472** | **24,495,534** | | |

Source: RI South Asia Office





# CRAFT

The german kitchen.
Since 1898.

Head Office and Showroom:
A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037
[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

Häcker
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

| AHMEDABAD | BANGALURU | CHENNAI | COIMBATORE | DELHI | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9879538977 | 9740999350 | 9442081111 | 9500210555 | 9313134488 | | | | |
| HYDERABAD | INDORE | JAIPUR | KOCHI | LUDHIANA | MUMBAI | MANGALURU | THRISSUR | |
| 9700058285 | 9425803599 | 9414058718 | 9895058285 | 9815048222 | 9322987229 | 7899119955 | 7025991000 | |

# கேரளத்துக்கு உதவ முழுமூச்சில் இறங்கிய ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

1924ம் ஆண்டுக்குப் பிறகு மிக மோசமான பேரிடர் என்று வருணிக்கப்படும் வெள்ளத்தில் சிக்கித் தவித்த கேரள மாநிலம் இன்னும் முழுமையாக மீளவில்லை. ஆயிரக் கணக்கானோர் இன்னும் மீண்டும் உயிர்ப்போடு சகஜ வாழ்வுக்குத் திரும்பவில்லை.

கடந்த ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் இரு முறை பெய்த பலத்த மழை, வெள்ளத்தில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். ஆயிரக் கணக்கானோர் வீடு வாசலை இழந்து தவிக்கிறார்கள். கோடிக்கணக்கில் மதிப்பிலான பொருட்கள், சொத்துகள் சேதமடைந்து விட்டன. வெள்ளம் வடிவதற்காக மாநிலத்தின் 54 அணைகளில் 35 அணைகள் திறந்து விடப்பட்டன. இடுக்கி அணையின் ஐந்து மதகுகளும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டன. இதன் காரணமாக, வயநாடு, இடுக்கி ஆகிய மலைப் பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. அநேகமாக எல்லா மாவட்டங்களுமே சேதத்துக்கு உள்ளாயின.

அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள், சமூகநலக் கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதிக்கப்பட்டோரைத் தங்க வைப்பதற்கான நிவாரண முகாம்களாக மாற்றப்பட்டன. ஆயிரக் கணக்கானோர் அங்கே வந்து குவிந்தனர். வசதி படைத்தவர்கள், மனிதாபிமானத்துடன் பாதிக்கப்பட்டோர் தங்குவதற்கு இடம், உணவும், உடையும் வழங்கினர்.

இந்நிலையில் பாதிக்கப் பட்டோருக்கு நிவாரண உதவி, மறுவாழ்வு ஆகியவற்றில் இந்திய ரோட்டரி சங்கம் உதவிக் கரம் நீட்டி, பணிகளை மும்முரமாக மேற் கொண்டு வருகிறது. வெள்ளத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குட்டநாடு, கோட்டயம், குமரகம், ஆலப்புழை ஆகிய இடங்களுக்கு D 3211 ஆளுநர் லூக் உதவியுடன் நேரில் சென்று பார்த்தேன். அப்போது பாதிக்கப்பட்ட மக்களின் வேதனை கண் முன்னே தெரிந்தது. இவையெல்லாம் மாநிலத்தையே உலுக்கிப் போட்ட இயற்கைப் பேரழிவின் ஒரு சில உதாரணங்கள்தான்.

பல வீடுகள் சேதமடைந்தன. சில வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சில இடங்களில் மண் அரித்ததால், வீடுகள் நிலை குலைந்து போயிருக்கின்றன. பல குக்கிராமங்களுக்குச் செல்லும் சாலைகள் வெள்ளத்தில் சேதமடைந்து விட்டதால், படகுகளில்தான் செல்ல நேர்ந்தது. எனக்குத் துணையாக உதவி ஆளுநர்கள் சாஜி மேத்யூ, ஜிட்டு செபாஸ்டியன், வெள்ள நிவாரணப் பணிக்கான மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் ரோட்டரியன் டினா ஆன்டனி ஆகியோருடன் அப்பகுதிகளுக்குச் சென்றேன். குட்டநாட்டில் கழிமுகப் பகுதிகளில் நான் படகில் சென்ற போது, கரைகளை ஒட்டி பல்வேறு அளவிலும் வடிவிலும் குடிசை வீடுகளும், கான்கிரீட் வீடுகளும் காணப்பட்டன. கேரளத்துக்கும் மக்களுக்கும் பசுமையை வாரி வழங்கிய இயற்கையே கோரத் தாண்டவ மாடியதைக் கண்ணால் பார்த்தபோது இந்த முரண்பாட்டினால் மனம் கனத்தது. இத்தனை சோகத்துக்கு இடையில், பாதிப்பு குறைந்த பகுதிகளில் இருக்கும் மக்கள் எங்களை புன்சிரிப்புடன் வரவேற்றதும், இளநீர் கொடுத்து உபசரித்ததும் மனத்தை நெகிழச் செய்தது.

குட்டநாட்டில் பாதிக்கப்பட்ட குக்கிராமங்களில் சாந்தா என்ற பெண்ணைப் பார்க்க நேர்ந்தது. அவர் அப்போதுதான் மறுவாழ்வு முகாமிலிருந்து வீடு திரும்பினார். அவர் அலங்கோலமாகிவிட்ட தனது வீட்டைக் காட்டினார். கூரை அடித்துச் செல்லப்பட்டுள்ளது. கூரைக்குப் பதிலாக நீல நிற தார்ப்பாய் போடப்பட்டிருந்தது. அதிலும் ஏராளமான ஓட்டைகள். வீட்டுச் சுவர்கள் சேதமடைந்ததால், அதற்குப் பதிலாக தகர டின்கள்தான் வைக்கப்பட்டிருந்தன. அவரது கணவரோ முடுக்குவாதம் பாதிக்கப்பட்டு மூலையில் பரிதாபமாகக் கிடந்தார். கட்டிலின் மரக் கால்கள் உடைந்து போனதால், செங்கற்களையே கால்களாக வைத்திருந்தார். இத்தனை சோகத்துக் கும் இடையில் ரோட்டரி சமூக சேவகர்களைக் கண்டு சாந்தாவின் கண்களில் நம்பிக்கை ஒளி வீசியது. அவர்களது கிராமங்களில் கோட்டயம் ரோட்டரி சங்கத்தினர் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்டு கை கொடுத்துக் காப்பாற்றி வருகின்றனர்.

வெள்ளம் ஏற்பட்டபோது மீட்கப்பட்டோம், மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது, என் வீடே அடையாளம் தெரியவில்லை. பாத்திரம் பண்டங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. வீடுகளே காணவில்லை என்று கண்ணில் நீர் வழியக் கூறினார் சாந்தா.

மண் வீடுகளுக்கு இந்தக் கதி என்றால், கான்கிரீட் வீடுகளும் இயற்கையின் கோபத்திலிருந்து தப்பவில்லை. அங்கே இருந்த டிவி பெட்டிகள், படுக்கைகள், வீட்டுச் சாமான்கள், எல்லாம் பாழாகிவிட்டன. அவற்றை வெயிலில் உலர்த்தி மீண்டும் பயன்படுத்த முடியுமா என்று பார்த்தார்கள். ஆனால், வெள்ள நீர் உயர உயர முடிந்த வரையில் பொருட்களை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போயிருக்கிறார்கள், பாவம்!

குட்டநாடு கிராமம் வேம்பநாடு ஏரியில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஏரி கடல் மட்டத்திலிருந்து 7 அடி முதல் 10 அடி வரையில் கீழே உள்ளது. அதனால், வெள்ள நீர்




Rtn டீனா ஆன்டனி மற்றும் குழுவினர் வீடுகளை சுத்தம் செய்கின்றனர்.



வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகள்.

கடலுக்குள் புகாமல், கிராமத்துக்கும் ஏரிக்குமே வந்துவிட்டது என்றார் செபாஸ்டியன்.

பல இடங்களில் வெள்ள நீர் 9 அடி வரையில் உயர்ந்துவிட்டதும் என்றும் மக்களை மீட்பதற்குப் படகுகளைத் தவிர வேறு வழியே இல்லை என்றும் அவர் கூறினார். வெள்ளம் வடியத் தொடங்கிய பிறகு மக்கள் தங்களது இருப்பிடங்களுக்கு மெல்ல மெல்லத் திரும்பினர். குட்ட நாட்டிலும் மற்ற இடங்களிலும் பாதிக்கப்பட்டோர் மீண்டும் வாழ்க்கையை நடத்துவதற்கு ரோட்டரி அமைப்பினர் அவர்களுக்கு பாத்திரம் பண்டங்கள், மளிகைப் பொருட்கள், பாய்படுக்கைகள், துணிமணிகளை வழங்கி உதவினர். ரோட்டரியினர் மாநிலம் முழுவதும் இதைப் போன்ற நிலையைத்தான் கண்டனர். தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

நிவாரண உதவிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கரையில் உள்ள வீடுகளுக்குப் பின்னால், மிகப்பெரிய அளவில் நீர் தேங்கி இருந்ததை மாத்யூ எனக்குக் காட்டினார். அது ஏரியல்ல. வெள்ளம் சூழ்ந்துள்ள நெல் வயல்கள். விவசாயிகள் விதைத்த உடனே மழை வந்தது. ஆனால், இப்போது அந்த விதைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது என்றார் அவர். இப்பகுதியில் எல்லோரும் தலா இரண்டு முதல் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள். சிலருக்கு மீன்பிடிப்பது தொழில்.

துரதிர்ஷ்டவசமாக, இரு தொழில்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மீன் வலைகள் நாசமாகிவிட்டதால், பலர் மீன் பிடிக்கச் செல்லவேயில்லை என்றார் மாத்யூ.

ஒரு வீட்டில் கண்ட காட்சி மனதை தைத்துவிட்டது. 13 வயது ஆர்த்தி என்ற பெண் ஓரிடத்தில் படகில் குதித்து, தானே படகைச் செலுத்தி, மறு கரையில் உள்ள தன் வீட்டைச் சென்றடைந்தாள். அவள் பள்ளிச் சீருடையில் இருந்தாள். சாலையும் பாலமும் சேதமடைந்ததால் அவள் தினமும் பள்ளிக்குப் படகில் செல்ல நேர்ந்துள்ளது.

இந்தப் பகுதி சுற்றுலா இடமாகும். ரிசார்டுகள், படகு வீடுகள் என்று களை கட்டும். சில காலம் முன் நிஃபா வைரஸ் காரணமாகவும், தற்போது வெள்ளத்தாலும் சுற்றுலா பாதிக்கப்பட்டுள்ளது என்று டினா கூறினார். சாலை வழியாகவும் விமானம் வழியாகவும் செல்ல இயலாத இடங்களை அடைவதற்கு மீனவர்கள் பெரிதும் உதவினர். அவர்கள்தான் உண்மையான வீரர்கள். மீட்புப் பணிக்காக மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்து, அதுவும் மழை பெய்து கொண்டிருந்தபோதும் படகுகளை ஓட்டியபடி அவர்கள்






ஆலப்புழாவில் ஒரு வீட்டின் முன் தொலைக் காட்சிப் பெட்டி காய வைக்கப் பட்டுள்ள காட்சி.

வந்தனர். ஏராளமான வீடுகளின் கூரைகள் சாய்வாக இருந்ததாலும், கம்பிகள் தாறுமாறாக இருந்ததாலும் ஹெலிகாப்டர் மூலம் மீட்புப் பணி செய்ய இயலவில்லை என்றார்.

ஆலப்புழையில், விஜயலட்சுமி நாயர், ஆலப்புழை காயர் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் அந்தோணி ஃபெர்னாண்டஸ் ஆகியோர் என்னை 610 வீடுகள் உள்ள சுங்கம் என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அத்தனை வீடுகளும் மோசமாக சேதமடைந்திருந்தன. அங்கே பள்ளது ர்த்தி என்ற இடத்தில் உள்ள EDLP பள்ளியின் நிலைமை வேதனை அளித்தது. அங்கிருந்த பல கம்ப்யூட்டர்கள் சுத்தமாக நாசமாகிவிட்டன. வெள்ளத்தில் சேதமடைந்த பாடப் புத்தகங்கள், ஆசிரியர்களின் நூல்கள் எல்லாம் வெயிலில் காயப் போடப்பட்டிருந்தன.

இந்தப் பள்ளிக்கு, கம்ப்யூட்டர்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்களேன் என்று பள்ளியின் தலைமை ஆசிரியை விஜயலட்சுமியிடம் வேண்டிக் கொண்டார். மாவட்ட மறுவாழ்வு மையங்களின் அலுவலர்களை அவர் தொடர்பு கொண்டு வருகிறார்.

**ரோட்டரியின் மாயாஜாலக் கரம்!**

மழை பெய்தவுடனே மாநில அரசு நிவாரண முகாம்களை அமைத்தது. அதே சமயம் 3211, 3201, 3202 ஆகிய மாவட்ட ரோட்டரி சங்கங்கள் முழுமூச்சில் பணியில் இறங்கின. பாதிக்கப்பட்டோருக்கு உணவுப்



ஜோஸிமோல் ஜோசுடன் Rtn நிஷா மணி.

பொட்டலங்கள், குடிநீர் பாட்டில்கள், துணிமணிகள் ஆகியவற்றை அளித்து பாதுகாப்பாக முதலில் மீட்டது ரோட்டரி தான். எல்லா இடங்களிலும் ரோட்டரி தொண்டர்கள் இருந்தனர் என்றார் டினா.

வெள்ளம் காரணமாக முதல் மாடியிலும், மொட்டை மாடியிலும் பல நாட்களாக வாடியவர்கள் பலர். அவர்களை மீட்கச் சென்றபோது, உணவுப் பொட்டலங்களையும் எடுத்துச் சென்றோம் என்று பாலா ரோட்டரி சங்க உறுப்பினரும் மாவட்ட ரோட்டரி முன்னாள் ஆளுநர் ஜான் நேரோத் மகளுமான நிஷா மணி கூறினார். நன்கு பயிற்சி பெற்ற, தீவிர சமூகப் பணியாளரான அவரது சேவை குமரக்கம் மக்களிடையில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அது மட்டுமல்ல, அங்கே ஒரு விசேஷ மனிதரைச் சந்திக்க வேண்டும் என்று நிஷா கேட்டுக் கொண்டார். அவர் அழைத்துச் சென்ற வீட்டில் நுழைந்தபோது, அங்கே இருந்த ஜோசிமோல் ஜோஸ் (30) என்ற பெண் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே குதூகலமாக வரவேற்றார். அவரையும் அவரது தாயாரையும் ஆபத்திலிருந்து நிஷாவும் ரோட்டரி அமைப்பினரும் ஒரு படகில் மீட்டனர். அந்தி மயங்கும் நேரம். மழையும் பெய்து கொண்டிருந்தது. எல்லா இடத்திலும் நான்கடி உயரத்துக்குத் தண்ணீர் தேங்கியிருந்தது. கிட்டத்தட்ட நூறு பேரை மீட்பதற்காக படகைத் தள்ளியும் ஓட்டியும் சென்றோம். அந்தப் பாதையைப் பகலில் பார்த்தபோது தான் பெரிய சிரமத்தை உணர்ந்தோம் என்றார் நிஷா. அப்பகுதியில் மிகப் பரந்த கால்வாய் இருந்ததைக் கண்டோம். வீடுகள் தாழ்வான பகுதிகளில்தான் கட்டப்பட்டிருந்தன. நிஷா தான் கொண்டு சென்றிருந்த பல 'டயபர்' பாக்கெட்களை ஜோசிமேலின் தாயாரிடம் அளித்தார். அதன் பின் அங்கிருந்து விடைபெற்றோம்.

இங்கே உள்ள பெரும்பாலான வீடுகளுக்கான வடிகால் வசதிகள் திறந்தே அமைக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் மீட்புப் பணியின்போது கழிவுநீரைப் பற்றியெல்லாம் நாங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. மக்களை மீட்பதே குறிக்கோளாக இருந்தது என்றார் நிஷா.




RIDE கமல் சங்க்வி, D 3202 A கார்த்திகேயன், DG EK உமர் மற்றும் PDG EK சகாதேவன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஷெல்டர் கிட்ஸ் வழங்கினர்.



DG E K *லூக், PDGs ஜான் நெராத்,* K S *சசிக்குமார்,* RC *திருவநந்தபுரம் சென்ட்ரல் தலைவர் சந்தோஷ்,* Rtn *பாபுமோன்,* A G *சிவக்குமார்,* Rtn *விஜயலஷ்மி ஒரு பயனாளிக்கு வெள்ள நிவாரணப்பொருட்கள் அளிக்கின்றனர்.*

**பெருவெள்ளத்துக்குப் பின்**

மழையெல்லாம் ஓய்ந்த பிறகுதான் எங்களது முக்கியமான பணி தொடங்கியது என்று டினா கூறினார். வெள்ளம் வடிந்த பிறகு,எல்லா இடங்களிலும் சேர்ந்திருந்த சேறு, சகதியை அகற்றுவதே பெரிய சவாலாக இருந்தது. டன் கணக்கில் ப்ளீச்சிங் பவுடர் பாக்கெட்டுகளை விநியோகிக்க வேண்டியிருந்தது. தரைகளை அழுக்குப் போக சுரண்ட வேண்டியிருந்தது என்றார் அவர்.

ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தலா ஆயிரம் வீடுகள் கொண்ட வார்டைத் தத்தெடுத்து பணி செய்தன. சுத்தப்படுத்துவதற்கான பொருட்கள், வாளிகள் மக்குகள், தரையைத் துடைக்க மாப்புகள், புதிய ஆடைகள், பெட்ஷீட்டுகள், தேவையான பொருட்கள் ஆகியவற்றை வழங்கினோம். அப்பகுதிகளில் மின்சாரம் இல்லாததால், ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி ரோட்டரியினர் பணிகளை செய்தனர் என்றார் அவர்.

மத்திய திருவனந்தபுரம் ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க மாவட்ட ஆளுநர் லூக் அழைத்தார். பாதிக்கப்பட்டோருக்கு அந்நிகழ்ச்சியில் மர டெஸ்குகள், பிளாஸ்டிக் நாற்காலிகள், வாளிகள், துடைக்கும் மாப்கள், துடைப்பங்கள், எரிவாயு அடுப்புகள், பாத்திரங்கள் எல்லாம் வழங்கப்பட்டன. இத்தகைய பணிகளை மேற்கொள்வதை அடுத்து, மாவட்டம், மாநிலம், நாடு, உலகம் ஆகிய எல்லைகளை எல்லாம் கடந்து ரோட்டரி அமைப்பினர் ஒன்றாக இணைந்து மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினர். ரோட்டரி அமைப்புகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு மிகவும் நேர்த்தியாகவும் சிறந்த வகையிலும் அமைந்தது. பணி செய்ய ஆட்கள் குறைவாக இருந்த இடங்களுக்கு அவர்களாகவே சேர்ந்து விரைந்தனர். சென்னை, நங்கநல்லூர் ரோட்டரி சங்கத்தினர் லாரி முழுவதும் பொருட்களை அனுப்பியதுடன் அங்கிருந்து மூன்று ரோட்டேரியன்கள் தார்மீக ஆதரவு அளிப்பதற்காக ஆலப்புழைக்கே வந்துவிட்டனர் என்றார் டினா, பம்பை நதியின் வெள்ளத்தால் அருகில் இருந்த மன்னார் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 13 ரோட்டரியினர்களின் வீடுகள் சேதமடைந்தன. அதையும் பொருட் படுத்தாமல், வேறு பகுதிகளில் மீட்பு பணிகளை மேற்கொண்டிருந்தனர்.



*பயனாளியுடன்* RIDE *கமல் சங்க்வி.*

கோட்டயம் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் பிலிப்போஸுடன் அவரது மகள் டாக்டர் ரெபெக்கா



*ஷெல்டர் கிட்ஸில் உள்ள பொருட்கள்.*

பிலிப்போஸும் களத்தில் இணைந்து பணியாற்றினார் என்று அந்த ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சூசன் கோஷி கூறினார். பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவி அளிக்க பல இடங்களில் கோட்டயம் ரோட்டரி சங்கம் சார்பில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. தொற்று காரணமாக தோல் நோய், இருமல், ஜுரம் ஏற்படாமல் இருக்க உரிய சிகிச்சையும் அளிக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்கு ஆளானோருக்கு உதவ உளவியல் மருத்துவ நிபுணர் பணியாற்றினார்.

கோயம்புத்தூர் சாய் சிட்டி ரோட்டரி சங்கம் (D 3201) ஒரு லாரி முழுக்க மொத்தம் ரூ.30 லட்சம் மதிப்புள்ள மளிகை சாமான்களை அனுப்பியது.

கோவை காஸ்மபாலிடன் ரோட்டரி சங்கத்துடன் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் செக் குடியரசு நாட்டிலிருந்து கோவைக்கு விருந்தினராக வந்த காட்ரினா லாங்கரோவா என்ற இளம் பெண் ரோட்டரி சங்கத்தினரின் பணிகளால் கவரப்பட்டு, தனது உதவித் தொகையை அளித்திருக்கிறார் என்று மாவட்ட ஆளுநர் AV பதி தெரிவித்தார். நிவாரண உதவிக்கு நிதி திரட்டுவதற்கான பணியில் நாடு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்களும், உலகம் முழுவதும் உள்ள சங்கங்களும் ஈடுபட்டுள்ளன. நிறைய நன்கொடைகள் வந்து கொண்டிருக்கின்றன. ரோட்டராக்டர்களும், இன்டராக்டர்களும் பங்களிப்பு செலுத்துகிறார்கள்.

பல சங்கங்கள் கேரள மக்களுக்கு TRFன் உலகளாவிய மானியம் மூலம் உதவி செய்கின்றனர். RC கொச்சின் மிட்டவுன் மலேசியாவில் உள்ள RC பன்டர் பெட்டானி, (D 3300) உடன் இணைந்து வீட கட்டிக் கொடுக்க உள்ளது. பிரிட்டிஷ் சங்கங்களுடன் இணைந்து குடிநீர் வடிகட்டிக்களை பள்ளிகளுக்கும், வீடுகளுக்கும், பொது இடங்களில் வைக்கவும், உதவி புரிகிறது. RC களமசேரி, இலங்கையின் RC கண்டியுடன் சேர்ந்து சிறுதொழில் புரிவோருக்கு உதவுகிறது. RC கொச்சின் மிலன். பாத்திர பன்டங்களையும், RC கொச்சின் காஸ்மாஸ் மாற்று திறனாளிகளுக்கு செயற்கை கால்கள், நீர் படுக்கைகள் போன்றவற்றை தருகிறது.

RIDE கமல் சங்கவி, ரோட்டரி இந்தியா ஹியுமானிட்டி ஃபவுன்டேஷன் மூலம் ‘ஷெல்டர் கிட்’ களை வெள்ளத்தில் வீடு இழந்தோருக்கு மற்ற மாநில DGEக்களுடன் வந்து வழங்கினார். ஒவ்வொரு ‘ஷெல்டர் கிட்டிலும்



*ஆரதி படகில் வெள்ள நீரைக் கடக்கிறார்.*

ஒரு குடும்பத்திற்குத் தேவையான சாமான்கள், பாய், கூடாரம், மற்றும் துணிமணிகள் இருக்கும்.

### மீட்பில் கண்ட சவால்

PRIP கல்யாண் பானர்ஜி வெள்ளம் பாதித்த ஆலப்புழை, குட்ட நாடு ஆகிய பகுதிகளுக்கு முன்னதாகச் சென்று பார்வையிட்டுள்ளார். அவருடன் மாவட்ட ஆளுநர் லூக் சென்றார். நிவாரணப் பணிக்காக நிதி திரட்டுவதற்காக அறக்கட்டளை அமைக்கலாம் என்று RID C பாஸ்கர் அவர்களும், PRIP பானர்ஜி அவர்களும் மற்றொரு சந்திப்பில் DGs EK லூக், EK உமர் மற்றும் AV பதி ஆகியோரிடம் யோசனை கூறினர். இந்த அறக்கட்டளையை மூன்று ஆளுநர்களும் நிர்வகிப்பர். இந்த அறக்கட்டளை முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்ட ரோட்டரி அமைப்புகள் இதுவரை பெற்ற நன்கொடைகள் இந்த அறக்கட்டளையில் சேர்க்கப்படும். மூன்று மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளுக்காக ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. உலகளாவிய நிதியைப் பெறுவதற்காக மாவட்ட ரோட்டரிகள் விண்ணப்பிக்கலாம் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் பானர்ஜி தெரிவித்தார் என்று லூக் தெரிவித்தார்.

### புதிய வாழ்க்கை இயக்கம்

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட முன்னாள் ஆளுநர் ரகுநாத் இந்த யோசனையைக் கூறியுள்ளார். பலர் வீட்டு உபயோகப் பொருட்கள், மரச்சாமான்கள், மேசை, நாற்காலிகள், பாய், படுக்கைகளை இழந்துவிட்டனர். அவர்களுக்கு உதவுவதற்காகவே புதிய வாழ்க்கை இயக்கம் (Mission New Life) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. நன்கொடையாளர்களிடமிருந்து பழைய மேசை, நாற்காலிகள். பாத்திரம் பண்டங்களைப் பெற்று பாதிக்கப்பட்டோருக்கு வழங்கி உதவி வருகிறோம் என்றார் டினா. அத்துடன், மாவட்டங்கள் முழுவதும் தச்சுவேலைப் பணியாளர்கள், எலெக்ட்ரீசியன்கள், தொழில்நுட்பப் பணியாளர்களை ஒன்று திரட்டினோம். அவர்கள் பழுதுபார்ப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள் என்றார் அவர். ஆலப்புழை பணியை அனைவரும் அறிந்துகொள்வதற்காகச் சில நிகழ்ச்சி களையும் நடத்த இருக்கிறோம் என்றார் டினா. இந்த புதிய வாழ்க்கை இயக்கத்திற்காக (Mission New Life) மேசை நாற்காலி உற்பத்தியாளர் ஸ்டான்லி என்பவர் நன்கொடையாகத் தயாரித்துத் தருவதாகக் கூறியுள்ளார் என்று திருவனந்தபுரம் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த MC ஜேகப் தெரிவித்தார்.



*மரச்சமான்கள் புத்துயிர் பெறுகின்றன.*

### சில சுவையான நிகழ்வுகள்

இத்தனை சாகசங்களுக்கு இடையிலும் சில சம்பவங்களை நிஷா உற்சாகமாகக் குறிப்பிட்டார். குட்டநாடு பகுதியில் படகுகளில் பலரை மீட்டுக் கொண்டிருந்தபோது, ஓரிடத்தில் ஒரு நபரை மீட்பதற்காகக் கையை நீட்டினேன். அவர் சட்டென்று தான் வைத்திருந்த ஆட்டுக் குட்டியை என் கையில் தந்துவிட்டார். அத்துடன் நில்லாமல், அந்த ஆட்டுக் குட்டியை இன்னொரு மீட்பு முகாமில் இருக்கும் தனது மனைவியிடம் ஒப்படைத்து விடும்படி கேட்டுக் கொண்டார். “அதெல்லாம் முடியாதுய்யா” என்று சொல்லியும் விடவில்லை. நீண்ட நேரம் போராடிய பிறகு, “ஆட்டையும் எடுத்துச் செல்ல அனுமதித்தால்தான் வருவேன்” என்று அவர் அடம்பிடித்து, ஆட்டுடன் வந்தார். படகில் என்னோடு வந்த ஆடு என் முகத்தை அடிக்கடி முழுசாக தன் நாவால் வருடியது. என் நண்பர்கள் அதைப் பார்த்துவிட்டு, “உன் முகத்துக்கு ஆடே ஃபேஷியல் செய்கிறது” என்று கேலி செய்தனர்.

ஒரு முகாமில் இருந்த சிறுவன் ஒரு கட்டுவிரியன் பாம்பைத் தன் கையில் வைத்திருந்தான். அதை அவனிடமிருந்து வாங்கி, ஒரு கூடையில் போட்டு மூடி, பாதுகாப்பாக காரின் கியர் பெட்டியின் மீது வைத்தேன். அதே காரில் என் நண்பர்களும் வந்திருந்தனர். அவர்களிடம் இதைப் பற்றிச் சொல்ல வில்லை. ஒரு வழியாக அவர்களைக் காரிலிருந்து இறக்கிவிட்ட பிறகு, நைஸாக அந்தக் கூடையை ஒரு வனத்துறை அதிகாரியைச் சந்தித்துக் கொடுத்து காட்டில் விடும்படி கேட்டுக் கொண்டேன். அந்த நபரோ அதை கேட்டு எரிச்சல் அடைந்தார்.

“இதையெல்லாம் ஏம்மா கொண்டு வந்து கொடுக்கறீங்க? இப்ப நான்தான் அதைக் காப்பாத்தியாகணும்.” என்று சிணுங்கினார். அவரிடம் மன்றாடினேன், கடைசியில் அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டேன். அவரும் அதைப் பெற்றுக் கொண்டார் என்றார் நிஷா.

இப்படி எல்லோருக்கும் ஒரு கதை இருக்கத்தான் செய்கிறது. அதே சமயம், நல்ல மனிதர்களின் இரக்கமும் அனுதாபமும் மக்களின் மனத்தில் இடம்பெற்றுவிடுகின்றன என்கிறார் சூசான்.

புகைப்படங்கள்: ஜெய ஸ்ரீ
வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# ரோட்டரி கை கொடுத்து, நம்பிக் “கை” வந்தது!

ரஷீதா பகத்

ஏழு வயது அஃப்ஷா தபஸம் துள்ளிக் குதித்தாள்! காரணம் பச்சைக் குழந்தையாக இருந்தபோது ஒரு தீ விபத்தில் தனது “கை கருகி இழந்த அவளுக்கு அதைப் போலவே செயற்கையாக ஒரு கை கிடைத்துவிட்டது. இனிமேல் மற்றவர்களைப் போல ஆடலாம், பாடலாம்” என்று நம்பிக்கை வந்தால் குதூகலமாக இருக்காதா?

ஜம்முவிலிருந்து 212 கி.மீ. தொலைவில் உள்ள கிஷ்த்வார் என்ற இடத்தைச் சேர்ந்தவள் தபஸம். அவள் ஒரு விடியோ காட்சியைப் பார்த்த பிறகுதான் இந்த நம்பிக்கை ஏற்பட்டது. அதில், செயற்கைக் கைகளை வைத்துக் கொண்டு இரு சக்கர வாகனங்களை ஓட்டுபவர்களைப் பார்த்தாள். அதைப் பார்த்தவுடன் “ஒருநாள் இந்தப் புதிய கையை வைத்துக் கொண்டு காரை ஓட்டப் போகிறேன்” என்று மனத்தில் உறுதி கொண்டாள்.

ஆறு வயது ரஸா அஸ்மத் கான் பிறவியிலேயே குறைபாடு கொண்ட சிறுவன். காஷ்மீர் மாநிலம் பட்காமைச் சேர்ந்தவன். வலது கையில் விரல்களே இல்லாமல் குறையோடு பிறந்தவன். அவனும் செயற்கைக் கை பெற்றதை பார்த்து உற்சாக மடைந்தான்.

கைகள் இழந்தவர்களுக் குச் செயற்கைக் கை பொருத்தும் முகாமை RC ஜம்மு ஆஸ்தா மற்றும் RC ஜம்மு மிட் டவுன், D 3070, RC பூனா டௌன்டவுன், D 3131, இணைந்து நடத்தின. வழக்கமான முகாமாகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அது உற்சாகம் மிக்க விழாவாக உருவெடுத்துவிட்டது.

“கை இல்லாதவர் களுக்குப் புதிய கைகள்” (“New Hands for Handless”) என்ற தலைப்பில் நடத்தப்பட்ட முகாமில் செயற்கைக் கைகள் பொருத்துவதற்கான அந்த நிகழ்ச்சியில் உணர்வுமிக்க நிகழ்வுகளுக்குப் பஞ்சமே யில்லை. ஆனந்த கண்ணீரும், புன்னகைப் பூக்களும் அங்கே ஏராளம்!

ஆறு வயது குழந்தை முதல் 90 வயது வரையான கிழவர்கள் வரையில் இந்த செயற்கைக் கை பரிசைப் பெற்றுள்ளனர்.

பூஞ்ச் மாவட்டம் மெந்தார் என்ற இடத்தைச் சேர்ந்த ஆஷித் ஹுஸைன் என்ற 7 வயது சிறுவன் சில மாதங்களுக்கு முன் கண்ணிவெடியில் சிக்கி கையை இழந்து விட்டான். அந்தச் சிறுவனுக்கும் இந்த முகாமில் செயற்கைக் கை பொருத்தப் பட்டதை அடுத்து அவன் குதூகலித்தான்.



*அஃப்ஷா தபசம் தன் புதிய கைகளைப் பார்த்து பரவசமடைகிறார்.*



LN-4 *செயற்கை கை முகாமில் ரக்ஷா பந்தன் கொண்டாடும் ரோட்டரியினர்.*

காரணம், இனி அவனால் எல்லா வேலைகளையும் செய்து கொள்ள முடியும்.

இதே முகாமில் கதுவா மாவட்டம் கோர் பன்னு என்ற இடத்தைச் சேர்ந்த பரமானந்த் என்ற 90 வயது மூத்த விவசாயிக்கும் புதிதாக செயற்கைக் கை பொருத்தப்பட்டது செயற்கைக் கை பொருத்தும் ஜம்மு முகாமின் (LN-4 Hands Camp) திட்ட இயக்குநர் சுமில் கோயல் கூறினார்.

முகாமில் பங்கேற்று செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டதால் மகிழ்ச்சியும் அதே சமயம் ஆனந்தக் கண்ணீரும் அடைந்ததை உணர்வுடன் நினைவு கூர்ந்தார். இந்த முகாமில் செயற்கைக் கை பொருத்தப்பட்ட ஆர்த்தி என்ற பெண் இந்த முகாம் குறித்து பெற்றோருக்குத் தெரிவிக்காமல் முகாமுக்கு வந்துவிட்டதாகக் கூறி அழுகையை நிறுத்த முடியாமல் தவித்தாள்.

கிரண்பாரதி என்ற பெண் செயற்கைக் கை கிடைத்ததால், தனது மடிக் கணினியை சுலபமாகப் பயன் படுத்தலாம் என்று கூறிய படியே மகிழ்ச்சியில் கண்ணீர் விட்டார்.

*செயற்கைக் கை பொருத்தப்பட்டவர் இரு சக்கர வாகனத்தை ஓட்டும் படத்தைப் பார்த்து “புதிய கையை வைத்துக் கொண்டு ஒரு நாள் காரை ஓட்டுவேன்” என்று உற்சாகத்துடன் கூறுகிறார் ஜம்முவைச் சேர்ந்த 7 வயது ஆஃப்ஷா தபஸம்.*



எல்லோரது உணர்வும் கண்டு நாங்களே நெகிழ்ந்து போனோம். சேவை புரியும் நோக்கத்தில் ஈடுபட்ட அனைத்து தன்னார்வலர்கள், ரோட்டேரியன்களிடையே இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது என்றார்.

முகாமில் ஹரியானா, பஞ்சாப், பிஹார், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 123 பேர் பங்கேற்றனர். இது தொடர்பாக பூனா டௌன்டவுன் ரோட்டரி சங்கம் சுமார் 250 மின்னஞ்சல்களை கடந்த பிப்ரவரி 4ம் தேதி அனுப்பியிருந்தது. அவற்றில் ஒரு மின்னஞ்சல் ஜம்மு ஆஸ்தா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த கோயலைக் கவர்ந்தது. அப்போது அவர் D 3070 மாவட்டத்தின் உதவி ஆளுநராக இருந்தார். அதன்மூலம்தான் செயற்கைக் கை குறித்த தகவலை அவர் அறிந்து கொண்டார். அதையடுத்து செயற்கை உறுப்புகள் குறித்து பல விடியோ

காட்சிகளை இணையத்தின் மூலம் பார்த்து அது குறித்து ரோட்டரி கூட்டங்களில் விவாதித்தார்.

3 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை மிகச் சிலருக்காகச் செயல்படுத்த வேண்டுமா என்பது முதலில் கவலையாக இருந்தது. அதன் பின் ஈடுபாட்டுடன் செயல்பட்டால், ஏராளமானோருக்குப் போய்ச் சேரும் என்று ரோட்டரி உறுப்பினர்கள் உறுதி கொண்டனர். இதனால், 150 பேர் பயன்பெற்றனர் என்றார் கோயல்.

**நன்கொடையாளர்கள்**

ஒரு செயற்கைக் கை இந்தியாவில் ரூ.30 ஆயிரம் ஆகிறது. இந்நிலையில், அமெரிக்காவில் உள்ள லென் மேடோஸ் செயற்கைக் கை ஃபவுண்டேஷன் (Ellen Meadows Prosthetic Hands Foundation) உதவியுடன் இது சாத்தியமானது. எர்னி மற்றும் மார்ஜ் மேடோஸ் தம்பதியின் நன்கொடையில் செயற்கைக் கைகள் வடிவமைத்து விலையில்லாமல் அளிக்கப்பட்டன.

எர்னி மடோஸ் நீண்ட கால அனுபவம் கொண்ட தொழில்முறை வடிவமைப்பாளர்கள். ஆரம்பத்தில் கண்ணி வெடியில் சிக்கி கை கால்களை இழப்போருக்காக இதை வடிவமைக்கும் பணி தொடங்கப்பட்டது. பின்னர் எல்லோருக்காகவும் தயாரிக்கப்பட்டது என்று பூனா டௌன்டவுன் ரோட்டரி சங்கத்தின் செயற்கைக் கை திட்டக் கமிட்டியின் (LN-4 Project Committee, RC Poona Downtown) தலைவர் அனில் சத்தா கூறினார். அவரது தலைமையிலான செயற்கைக் கை வழங்கும் திட்ட கமிட்டி இது போல் நாடு முழுவதும் 34 முகாம்களை நடத்தியுள்ளது. அவற்றின் மூலம் நூற்றுக் கணக்கானோர் பயனடைந்துள்ளனர்.

*கண்ணி வெடியால் கைகளை இழந்த இளைஞர் களுக்கு உதவும் எண்ணத்தில் எர்னீ மேடோஸ் என்ற அமெரிக்கர் வடிவமைத்ததுதான் இந்தச் செயற்கைக் கை (LN-4 Hand). குழந்தைகள், முதியோர், நடுத்த வயதினர் எனப் பல தரப்பட்ட நூற்றுக்கணக்கானோர் பலனடைந்துள்ளனர்.*

**அனில் சத்தா,** செயற்கைக் கை (LN-4 Hand) கமிட்டி,
பூனா டவுன் டவுன் ரோட்டரி சங்கம்.

எலன் மாடோஸைக் கவுரவிக்கும் வகையில் LN-4 prosthetic எனப்படும் செயற்கைக் கை தயாரிப்பு உருவாக்கப்பட்டது. எலென் மாடோஸின் மகள் 18 வயதில் சாலை விபத்தில் உயிரிழந்தாள். அதையடுத்து அவர்கள் இச்சேவையை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது இணையத்தில், உலகில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதருக்கும் செயற்கைக் கை அளித்து, வாழ்க்கையில் ஒளி ஏற்ற வேண்டும் என்பது தான் லட்சியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் இந்த செயற்கைக் கைகள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.



*செயற்கைக் கையுடன் இருசக்கர வாகனம் ஓட்டும் ப்ரேம் நாத்.*

**முகாம் நடத்தும் யோசனை**

ஜம்மு ஆஸ்தா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் இத்திட்டத்தின் பயன்



*முகாம் திறப்பு விழாவில் ஜம்மு காஷ்மீர் MLC ரமேஷ் அரோரா.*

குறித்து திருப்தி அடைந்தனர். அதையடுத்து ஆகஸ்ட் 26ம் தேதி முகாம் நடத்துவது என முடிவு செய்தனர். அது ரட்சா பந்தன் என்ற விழா நாளாகவும் அமைந்திருந்தது. அங்குள்ள அகர்வால் இலவச மருத்துவமனையில் அமர்நாத் யாத்திரைக்குப் பிறகு இடம் கிடைப்பது உறுதி செய்யப்பட்ட பிறகு முகாமுக்கு இலவசமாக அளிக்கப்பட்டது.

ஏப்ரல் மாதம் முதல் இதற்கான பணிகள் நடைபெற்றன. இதற்காக, சத்தாவின் அனுபவம் மிக்க ஆலோசனைகளின்படி சரியாகத் திட்டமிடப்பட்டது என்றார் கோயல்.

இப்பணிக்குப் பிள்ளையார் சுழி போட்டவரே அவர்தான். ஜூன் இறுதியில் நல்ல கூட்டாளி கிடைத்தது. முகாமில் பங்கேற்க 43 பேர் பதிவு செய்தனர். ஜம்மு மிட் டவுன் ரோட்டரி சங்கம் நிதி திரட்டுவதிலும் பலனாளிகளை அடையாளம் காண்பதிலும் கை கொடுத்து உதவியது. இந்த செயற்கைக் கை பொருத்தும் முகாமை ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவை உறுப்பினர் ரமேஷ் அரோரா தொடங்கிவைத்தார்.

இரு சங்கங்களின் உறுப்பினர்களும் பலனாளி களைக் கண்டறிந்து வழிகாட்டுவது, தன்னார் வலர்களை ஈடுபடுத்துவது, உணவு உபசரிப்பு, இது குறித்து ஆக்கப்பூர்வமான செய்தி வெளியாக ஏற்பாடு செய்வது என பல வகையிலும் சிறப்பான வகையில் இணைந்து பணியாற்றினர்.

ஜம்முவில் இரு சங்கங்களின் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பு இருப்பதற்கு இது மிகச் சிறந்த உதாரணமாகும் என்று செயற்கைக் கைத் திட்டத்தின் நிறுவனர் ரோட்டேரியன் பிரதீப் முனோத் தெரிவித்தார்.

**மதிப்பீட்டுச் செலவு:**
இதற்கு நேரடி மதிப்பீடு 200 முதல் 250 டாலர் ஆகும் என மதிப்பிடப்பட்டது. மிகவும் மலிவான செயற்கைக் கையின் விலை ரூ.30 ஆயிரம் ஆகும். செயற்கைக் கையைக் கொண்டு சின்னச் சின்ன பொருட்களையும் எடுக்கலாம் என்று கோயல் கூறினார்.

இந்தக் கருவி முழங்கை யின் கீழே கட்டப்படும். கைகள் இழந்து, 2 அங்குலம் முதல் 3.5 அங்குலம் வரையிலான குறுகிய உடல் உறுப்பே

*இந்தச் செயற்கைக் கை பல்லுக்கான பிரஷ், ஸ்பூன், முள் கரண்டி, பேனா என எந்த சின்னத் துரும்பையும் பற்றி எடுக்கும் திறனுள்ளது.*

**சுமில் கோயல்**
திட்ட இயக்குநர், ஜம்மு செயற்கைக் கை முகாம்
(LN-4 Hand Camp)

# வடா-பாவ் அற்புதம்!

பிரதீப் முன்னோத்

பூனா டௌன்டவுன் ரோட்டரி சங்கத்தின் நன்கொடைப் பரிசுக் குழு கூட்டம் 2013ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ரோட்டேரியன் ஷபீர் ஜம்னாகர்வாலா அழைத்திருந்தார். கூட்டங்களில் சுவையான வட-பாவு அளிக்கப்படுவதால், அக்கூட்டங் களை வட-பாவு கூட்டம் என்றே அழைப்பார்கள். அதில் கூடுதலாக பயத்தம் பருப்பில் செய்யப்படும் மூங்தால் கா பஜ்ஜியா என்ற சிற்றுண்டி சில சமயம் வழங்கப்படுவதுண்டு.

கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த ஷபீர் சீரியஸ் ஆசாமி. எப்போதும் இணையத்தைத் துழாவிக் கொண்டிருப் பார். அதில்தான் செயற்கைக் கை (Prosthetic hand LN-4) குறித்த தகவலை அறிந்துகொண்டார். அதையடுத்து செயற்கைக் கைகளை வழங்குவது தொடர்பான திட்டத்தில் ஈடுபட ஆர்வம் காட்டினார். இதை நான் ஏற்கவில்லை. இது மாதிரி திட்டங்களைச் செய்ததில்லை. இதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது என்றேன். ஆனால், ஷபீர் உறுதியாக இருந்தார். அதையே மற்றவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

பல முறை கூட்டங்கள், கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள் முடிந்து, செயற்கை உறுப்பு வழங்கும் முதல் முகாமை 2014ம் ஆண்டு ஜனவரி 11, 12 ஆகிய தேதிகளில் நடத்துவதாக அறிவித்துவிட்டோம். இருந்தாலும், கொஞ்சம் உதறல் இருந்தது. LN-4 website என்ற இணையதளத்தையும் யுடியூப் காட்சியையும் பார்த்தோம். இருந்தாலும் எங்களுக்கு நம்பிக்கை வரவில்லை. புதிய துறையாயிற்றே என்பதால், பயமும் இருந்தது. எங்களுக்கு உதவுவதற்காக பயிற்சி பெற்ற இருவர் பெங்களூரிலிருந்து அனுப்பப்பட்டனர். விளைவு, முகாம் மகத்தான வெற்றி பெற்றது. 74 பேர் பயனடைந்து மகிழ்ச்சி அடைந்ததைப் பார்த்தபோது பெரிய திருப்தி அடைந்தோம். அதையடுத்து தொடர் முகாம் 2014 ஏப்ரல் 20ம் தேதி நடத்துவது என முடிவு செய்தோம்.

அடுத்த ஆண்டு மார்ச், ஜூன் ஆகிய இரு மாதங்களில் இரு முகாம்கள் நடத்தப்பட்டன. அதுவே வெற்றிக் கதவுகளைத் திறந்தது. அதையடுத்து இந்தூர் ரோட்டரியின் துடிப்புள்ள இளைஞர் தருண் மிஸ்ரா அறிமுகம் கிடைத்தது. தருணும் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (DGE) சஞ்சீவ் குப்தாவும் இது குறித்த விளக்கத்தினால் ஈர்க்கப்பட்டு, இதை மாவட்ட திட்டமாக செயல்படுத்த முடிவு செய்தனர். பிறகு, இத்திட்டம் குறித்து தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பயிற்சிக் கருத்தரங்கில் விளக்கப்பட்டது. அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதைத் தொடர்ந்து, இந்தூர் டவுன் டவுன் ரோட்டரி சங்கத்துடன் (D 3040) இணைந்து செயல்படுத் தினோம். அதில் 155 பேர் பங்கேற்றனர். இந்தூர் தன்னார்வத் தொண்டர்களுக்குப் பயிற்சி தந்தோம். அவர்கள் பல்வேறு முகாம்களில் தாங்களாகவே பங்கேற்று பணியாற்றினர்.

அதையடுத்து, ஜாம்நகரில் முகாம் நடத்தப்பட்டது. ஷபீர் சென்றபோது, அங்குள்ள ரோட்டரி அமைப்பினரைச் சந்தித்தார். இந்தூரைப் போல் அங்கேயும் வெற்றிகரமாக திட்டம் செயல்படுத்தப்பட் டது. அதையடுத்து, ஜாம்நகர் குழுவும் பல முகாம்களை அவர்களாகவே நடத்தினர். ஒவ்வொரு மாதமும் ஞாயிறு தோறும் செயற்கைக் கைகளை வழங்கினர். கடந்த ஆண்டிலிருந்து எங்களது கமிட்டியின் தலைவர் அனில் ச த்தா நாடு முழுவதும் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கும் மின்னஞ்ச ல்கள் மூலம் இதுபோன்ற முகாம்களை நடத்துவது குறித்து அறிமுகம் செய்தார். இதற்கு நல்ல வரவேற்பு கிடைக்கிறது. இதுவரை மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், தமிழ்நாடு, பிஹார், கர்நாடகம், உத்தரப் பிரதேசம், தெலங்கானா, ஜம்மு-காஷ்மீர், மாநிலங்களில் இந்தூர், தோண்டைச்சா,



செயற்கைக் கையால் எழுதும் முதியவர்

*ஜாம்நகர், கோபர்காம், லத்தூர், அசல்பூர், உத்கிர், கல்யாண், வாபி, குலி (ஜெய்ப்பூர்), சதாரா, நந்தர்பார், பன்வேல், ஷீர்டி, மதுரை, தர்பங்கா, பாகல்பூர், ராய்ச்சூர், அலாகாபாத், நிஜாமாபாத், சென்னை, சோலாப்பூர், திரியம்பகேஸ்வர், ஜம்மு ஆகிய இடங்களில் 34 செயற்கைக் கை முகாம்கள்* (LN-4 camps) *நடத்தப்பட்டன. எங்களது குழுவைச் சேர்ந்த விக்ரம்ஜித் மேஹ்மி புனே நகரின் புகழ்க்கொடி நீண்ட காலத்துக்குப் பின் இப்போது உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.*

*பணி தொடர்பாக, 23 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து செயல்பட்டோம். இந்தூர் அப் டவுன், தோண்டைசா சீனியர்ஸ், ஜாம்நகர், புனே சரஸ்பாக், புனே இன்ஸ்பிரா, லத்தூர் ஹாரிஸன், அசல்பூர், உத்கிர் சென்ட்ரல், கல்யாண், வாபி, ஜெய்ப்பூர், ஜெய்ப்பூர் மெஜஸ்டி, பன்வேல் மிட் டவுன், மதுரை மல்லிக, தர்பங்கா, விக்ரம்ஷிலா பிங்க், ராய்ச்சூர் காட்டன் சிட்டி, வடக்கு அலகாபாத், நிஜாமாபாத், மெட்ராஸ் சென்டினரி கமோமரேஷன், சோலாபூர், ஜம்மு ஆஸ்தா, ஜம்மு மிட் டவுன் ஆகிய ரோட்டரி சங்கங்கள், சாதாரா இன்னர்வீல், கோபர்கான் அரிமா சங்கம், மகாராஷ்டிர ஆரோக்கிய மண்டல், விவேகானந்த் மருத்து வமனை, பாரத் விகாஸ் பரிஷத் ஆகியவற்றுடன் இணைந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டது.*

*இவை தவிர, புனே, கல்யாண், ஜெய்ப்பூர், வாபி, ஜாம்நகர், நிஜாமாபாத், ராய்ச்சூர், லத்தூர் ஆகிய இடங்களில் நிரந்தரமாக செயற்கைக் கைகள் பொருத்தும் மையங்கள்* (Permanent LN-4 centres) *அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 3,310 பேருக்குச் செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டுள்ளன.*

*இப்பணியைத் தொடங்கிய 2013ம் ஆண்டு முதல் பெங்களூர் முன்னாள் தலைவர்* KV *மோகன் குமார் ஆதரவும் வழிகாட்டுதலும் அளித்து வருகிறார். அவருக்கு நன்றி உடையவர்களாகிறோம். அவரும் எலென் மேடோஸ் ஃபவுண்டேஷனும் இது குறித்து மிகவும் மகிழ்ச்சி தெரிவித்து பாராட்டி வருகின்றனர். இதன் தாக்கம் இந்தூர், ஜாம் நகர், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலும் ஏற்பட்டுள்ளது. கூட்டாளிகளின் பட்டியல் என்ற கவுரவத்தை எங்களது சங்கம் பெற்றுவிட்டது.*

*ஷபீரும் நானும் எலென் மேடோஸ் ஃபவுண்டேஷனிடமிருந்து கடந்த ஆண்டு கவுரமிக்க சேவைக்கான விருது பெற்றோம். இத்துடன் இந்தூர் அப் டவுன், ஜாம் நகர், ஜெய்ப்பூர் மெஜஸ்டி ஆகிய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்து புதுமைகளைப் பகிர்ந்து வருகிறோம்.*

*புனே டௌன்டவுன் ரோட்டரி சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் செயற்கைக் கை பொருத்தும் குழு* (Team LN-4) *மிகுந்த நன்றிக் கடன்பட்டுள்ளது. ரோட்டரி அல்லாதோரைக் கொண்டுள்ள இந்த குழுவுக்கு வணக்கத்தைச் சொல்கிறோம். எங்களது தலைவர் ஷபீருக்கும் நன்றி தெரிவிக்கிறோம். அவரது தொலைநோக்குப் பார்வைதான் இத்திட்டம் உலகம் முழுவதும் பல நண்பர்களைத் தேடித்தந்துள்ளது. எல்லா வற்றையும் விட முகாம்களில் பங்கேற்று பலன் பெறுவோரின் மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்கும்போதுதான் பெரும் நிறைவு அடைகிறோம்.*

*நம்புங்கள், இவையெல்லாம் வடா-பாவில் தொடங்கியவை !*

*கட்டுரை ஆசிரியர் பூனா டௌன்டவுன் ரோட்டரி சங்கத்தின் செயற்கைக் கை வழங்கும் கமிட்டியை* (LN-4 Hand Committee) *சேர்ந்தவர்.*

*23 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து* 34 LN-4 *முகாம்கள் நடத்தினோம்.*

**ப்ரதீப் முனோத்**, உறுப்பினர், LN-4 செயற்கைக் கை முகாம்

உள்ள நிலையில் 12 பேருக்குப் பொருத்தப்பட்டுள்ளது. இதற்காக பூனா டவுன் டவுன் ரோட்டரி ச ங்கம் விரிவடையும் சாதனத்தையும் வடிவமைத்தது. இதற்கு ரூ.800 தான் செலவாகும். இத்தகைய விரிவாக்க சாதனம் 12 பேருக்குப் பொருத்தப் பட்டது. மேலும் 18 பேருக்கு அளிக்க வேண்டியுள்ளதால், அவை வடிவமைக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

இந்த முகாமில் பணியாற்றிய ரோட்டரி உறுப்பினர்களின் பட்டியல் பெரியது என்றார் கோயல். புனேயிலிருந்து வந்த ரோட்டரி உறுப்பினர்கள் ஹோட்டலில் தங்குவது உள்ளிட்டவற்றுக்கு நன்கொடை அளித்து உதவியவர்களுக்கு அவர் நன்றி கூறினார். இவை அனைத்துக்கும் ரூ.2.5 முதல் 3 லட்சம் வரையில் ஆனது என்றார்.

சகோதரிகள் தங்களது அண்ணன்களுக்கு கைகளில் ராக்கி கயிறு கட்டுவது ஒரு புறம் இருக்க, இரு ரோட்டரி சங்கங்களும் நிரந்தரமாக செயற்கைக் கை பொருத்தும் நிரந்தர மையம் (LN-4 Hand Fitment Centre) ஜம்முவில் அமைப்பது குறித்து முடிவு செய்தன. இதை இரு ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் நிர்மல் குப்தாவும், ராகி சிங்கலும் அறிவித்தனர்.

செயற்கைக் கைகள் பொருத்தும் இந்த அழகான தருணங்களில் இணைந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இரு சங்கங்களும் எல்லாப் பாராட்டு களுக்கும் தகுதி படைத்தவை. இது இனிமேல் நிரந்தர திட்டமாக அமையும். 3070 மாவட்டம் மூலம் உரியவர்கள் பலன் பெறுவர் என்று மாவட்டத்தின் செயலாளர் டாக்டர் யுஎஸ். காய் தெரிவித்தார். தனது மாவட்டத்தில் முதல்

*இந்த செயற்கைக் கை எந்த வயதினருக்கும் பெருத்தப்படலாம். கதுவா கிராமத்தில் ஓர் 90 வயது விவசாயி கூட இக்கையை பொருத்திக்கொண்டு தன் நிலத்தில் விவசாயம் செய்கிறார்.*

முறையாக நடைபெறும் இத்தகைய நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அவர் ஜலந்தரிலிருந்து வந்திருந்தார்.

மாவட்ட ஆளுநர் பிரஜேஷ் சிங்கால், வித்தியாசமான பயனுள்ள திட்டத்தைச் செயல்படுத்திய ஜம்மு ஆஸ்தா மற்றும் ஜம்மு மிட் டவுன் ரோட்டரி சங்கங்களுக்கு எல்லா பாராட்டுகளும் பொருந்தும். ரக்ஷா பந்தன் திருநாளில் கையில்லாதவர்களுக்குக் கை கொடுப்பதை விட வேறு என்ன சிறப்பு இருக்க முடியும்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பலனாளிகளை அடையாளம் காண்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வாட்ஸ் அப், ஃபேஸ் புக் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டது. பஞ்சாபில் உள்ள மாவட்ட மருத்துவமனைகளைச் சேர்ந்த டாக்டர்கள், மருத்துவ நிபுணர்கள் தகவல்களைத் திரட்டினர். அது போல் ஜம்மு காஷ்மீர் சமூக நலத் துறையினர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமும் பலனாளிகள் கண்டறியப்பட்டனர். இதன் மூலம் 184 பேர் பதிவு செய்யப்பட்டனர்.

சில தன்னார்வலர்கள் தொலைதூர கிராமங்களி லிருந்து மோட்டார் சைக்கிள்களில் நிகழ் விடத்திற்கு வந்து பலனாளிகள் குறித்து பதிவு செய்தனர். அத்துடன் சில எலும்பு சம்மந்தப்பட்ட நிபுணர்கள் மூலமும் தகவல் திரட்டப்பட்டது. பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், ஆலயங்கள், குருத்வாராக்கள், வழி பாட்டுத் தலங்களில் பேனர்கள் வைக்கப்பட்டன. துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் நிலச் சரிவு நேர்ந்ததாலும் வேறு காரணங்களாலும் 50 பேர் முகாமுக்கு வர இயலவில்லை. அவர்களுக்கும் விரைவில் செயற்கைக் கைகள் பொருத்தப்படும் என்று கோயல் கூறினார்.

ரோட்டரி தலைவர் சுபீர் குஹா தலைமையில் பூனா டௌன்டவுன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 12 தன்னார்வலர்கள் ஜம்மு காஷ்மீர், புனே நகர ரோட்டரி சங்கங்கள் ஒருங்கிணைந்து செயல்பட துணை புரிந்தனர். அவர்கள் 30 நாட்கள் இப்பணியில் முழு அளவில் ஈடுபட்டனர். ஜம்முவிலிருந்து இரண்டாம் வகுப்பு கட்டணத்தில் பாதி தான் கோரினர் என்று திட்ட இயக்குநர் கோயல் தெரிவித்தார்.


*தன் புதிய கையுடன் நாத்து நடும் பணியில் விவசாயி.*

செயற்கைக் கை பொருத்தும் திட்டக் குழுவினரின் பணிக்கு மிகச் சிறந்த சான்றிதழை அளித்தது ஜயேஷ் சாவந்த் என்ற 12 வயது சிறுவன் தான்.

*இதுவரை ஒரு கையை வைத்துதான் கிரிக்கெட் விளையாடி வந்தேன். ரோட்டரி சங்க ஏற்பாட்டில் முகாமில் இன்னொரு கையும் கிடைத்துவிட்டதால், உலகின் சிறந்த கிரிக்கெட் வீரனாக பாடுபடுவேன்.*

**ஜெயேஷ் சாவந்த்,** ஒரு பயனாளி

அச்சிறுவன் மராத்திய மொழியில், இவ்வாறு குறிப்பிட்டிருந்தான்.

‘இதுவரை ஒரு கையை வைத்துதான் கிரிக்கெட் விளையாடி வந்தேன். ரோட்டரி சங்க ஏற்பாட்டில் முகாமில் இன்னொரு கையும் கிடைத்து விட்டதால், உலகின் சிறந்த கிரிக்கெட் வீரனாக பாடுபடுவேன். ரோட்டரி சங்கம் எனது பாதி கனவு நிறைவேறச் செய்து விட்டது. மீதிக் கனவை நானே நிறைவேற்றிக் கொள்வேன். ரோட்டரி சங்கத்திற்கு நன்றி என்று கூறினான் ஜயேஷ்.■

**ரோட்டரியின் புதிய கல்வி மையம் தொடங்கப் பட்டுவிட்டது!**
ரோட்டரியின் புதிய கல்வி மையம் இப்போது *Rotary.org/learn*ல் தொடங்கப்பட்டு விட்டது. பாடங்களையும் பிற கல்விச் சாதனங்களையும் பயன்படுத்தி கொள்ளுங்கள்.

**2018-19 ரோட்டராக்ட் நிகரில்லா திட்ட விருதுகள் பரிந்துரைப் படிவம்**
உங்களது ரோட்டராக்ட் சங்கம் அல்லது மாவட்டத்தின் சிறந்த உள்ளூர் அல்லது சர்வதேச சேவை திட்டத்தை 2018-19 ரோட்டராக்ட் நிகரில்லா திட்ட விருதுகளுக்கு பரிந்துரை செய்யுங்கள். இந்த விருது RIயின் மனிதநேய சேவை இலக்குகளில் கவனம் செலுத்திய, விரிவாக்கிய சிறந்த உள்ளோர் அல்லது சர்வதேச சேவை திட்டங்களை அங்கீகரிப்பது. பிப்ரவரி 1, 2018லிருந்து ஜனவரி 31, 2019 வரை நடந்த திட்டப்பணிகள் இந்த விருதுக்கு தகுதியானவை. பரிந்துரை படிவம் இங்கே கிடைக்கும், *https://rotary.qualtrics.com/jfe/form/SV_4USAyCAu9r9ZHut*

இணைய கருத்தரங்கின் போது வழங்கப்பட்ட CSR ஆவணங்களான ரெபரென்ஸ் ஷீட், FAQUPÒ, ப்ராசெஸ் ப்ளோ மற்றும் பிரசென்டேஷன்களுக்கு ஜெயஸ்ரீ ஜெயராமன் அவர்களை *Jayashree.jayaraman@rotary.org* என்ற முகவரியில் அணுகவும்.

**மாவட்ட ரோட்டரி பவுண்டேஷன் கமிட்டி உறுப்பினர்கள் நியமனம்**
ஜூன் 30,2019துடன் DRFCயின் காலம் முடியும் மாவட்டங்களில், DGN மற்றும் DGN-Dயின் ஆலோசனையுடன் உரிய DGEக்கள் DRFCக்கான விண்ணப்பதாரர் பெயரை சமர்பிக்குமாறு கேட்டுகொள்ளப் படுகிறார்கள். மாவட்டத்தின் கோப்பில் இருப்பதற்காக தேர்வான DRFCக்காக DGE அவர்கள் இருவரிடம் இருந்து எழுத்தில் அனுமதிப் பெறவேண்டும். DRFC விண்ணப்பதாரர் குறித்த தகவல்கள் இணையத்தில் MyRotary.org என்ற இணைப்பு வழியாக டிசம்பர் 31, 2018க்குள் சமர்பிக்கப்பட வேண்டும். DRFC நியமனம் தொடர்பான ஏதேனும் கேள்விகளுக்கு, *DRFC@rotary.org* முகவரிக்கு மெயில் செய்யவும்.

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

2018–19 DISHA *கருத்தரங்கில்* RRFC*களுடன் தீர்மானித்த மாவட்ட ரீதியான நிதி திரட்டும் இலக்கு*

| Zone 4 & 6A | | Zone 5 | |
|---|---|---|---|
| District | 2018–19 Goal (in US$) | District | 2018–19 Goal (in US$) |
| 3100 | 106,000 | 2981 | 400,000 |
| 3011 | 1,310,000 | 2982 | 300,000 |
| 3012 | 925,000 | 3000 | 1,000,000 |
| 3030 | 500,000 | 3020 | 250,000 |
| 3040 | 300,000 | 3150 | 750,000 |
| 3053 | 250,000 | 3160 | 268,000 |
| 3054 | 641,000 | 3170 | 1,200,000 |
| 3060 | 1,030,000 | 3181 | 300,000 |
| 3070 | 215,000 | 3182 | 400,000 |
| 3080 | 600,000 | 3190 | 2,000,000 |
| 3090 | 100,000 | 3201 | 1,000,000 |
| 3131 | 1,200,000 + | 3202 | 200,000 |
| 3132 | 165,000 | 3211 | 1,000,000 |
| 3141 | 7,000,000 | 3212 | 300,000 |
| 3142 | 1,000,000 + | 3220 | 200,000 |
| 3110 | 425,000 | 3231 | 806,000 |
| 3120 | 400,000 | 3232 | 1,000,000 |
| 3240 | 400,000 | | |
| 3250 | 360,075 | | |
| 3261 | 200,000 | | |
| 3262 | 500,000 | | |
| 3291 | 410,000 | | |
| 3292 | 730,000 | | |
| **Zone 4 & 6A Total** | **16,567,075** | **Zone 5 Total** | **11,374,000** |
| **Grand Total (Zone 4; 5; 6A)** | | | **27,941,075** |
| **Fundraising Goal - India** | | | **27,011,075** |

# காச நோய் : ரோட்டரியின் முன் ஒரு சவால்!

ரஷீதா பகத்

ஒவ்வொரு நிமிடமும் காச நோயால் பாதிக்கப்பட்டு ஒருவர் இறக்கிறார் என்பது தெரியுமா? உலக அளவில் காச நோய்க்கு ஆளானவர்களில் 25 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர் என்பது தெரியுமா?

இந்தக் கேள்விகளை ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்கத்தின் முன்னாள் இயக்குநரும் காசநோய் தேசியக் கட்டுப்பாட்டு கமிட்டியின் தலைவருமான YP தாஸ் எழுப்பியுள்ளார். இந்தியாவில் காசநோய் ஒழிப்பில் கவனம் செலுத்துவது குறித்த கூட்டம் திங்கள்கிழமை தில்லியில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய அவர் இந்தக் கேள்விகளை எழுப்பினார்.

இந்தியாவில் இந்த நோயை எப்படி ஒழிப்பது என்று கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உலகளாவிய இலக்கை ஒரு படி விஞ்சி 2030ம் ஆண்டுக்குள் 90 சதவீதம் ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த மார்ச் மாதம் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

காச நோயை 2030ம் ஆண்டுக்குள் ஒழிப்பது என்ற இலக்கு இந்தியாவைப் பொறுத்தவரையில் 2025 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. அரசு அலுவலகங்களில் காச நோய் ஒழிப்புக்காகத் தேங்கியுள்ள பணிகள் முடுக்கி விடப்படுகின்றன. காசநோயை ஒழிப்பு நடவடிக்கைக்கு சுகாதாரத் துறை முன்னுரிமை அளித்துள்ளது என்றார் அவர்.

நமது முன்னுரிமை இளம்பிள்ளை வாதத்தை (போலியோ) ஒழிப்பதுதான். இருந்தாலும், ரோட்டரி அமைப்பினர் காச நோயைக் கட்டுப்படுத்துவதில் இயன்ற வரையில் கவனம் செலுத்த வேண்டும். காச நோயை ஒழிக்க முடியாது. அதைக் கட்டுப்படுத்தவே இயலும் என்றும் YP தாஸ் கூறினார்.

இந்தப் பணியிலும் ரோட்டரி முக்கிய கூட்டாளிகளுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது. காச நோய் மற்றும் நுரையீரல் நோய்கள் ஒழிப்புக்கான சர்வதேச யூனியன் (International Union for TB and Lung Diseases), கல்விநிறுவன அளவில் உதவுவதற்கான ரோட்டரி ஊக்குவிப்பு (Rotary Encouraging Academic Collegiate Help - REACH) மற்றும் டாடா அறக்கட்டளை (Tata Trust) ஆகியவற்றுடன் உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாகபுரியில் சுரங்கங்களில் 14 ரோட்டரி சங்கங்களும் டாடா அறக்கட்டளையும் இணைந்து முன்னோடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. இது வெற்றிகரமாக அமைந்தால், நாட்டின் இதர பகுதிகளிலும் செயல்படுத்தப்படும்.

இதற்கான பிரசாரத்திற்கு உதவும் வகையில் பிரபல திரைப்பட நடிகர் அமிதாப் பச்சன் குரல் பதிவு செய்துள்ளார். அமிதாப் பச்சனே காச நோயால் பாதிக்கப்பட்டு மீண்டவர். வசதிபடைத்த அவரைப் போன்றவர்களுக்கே காச நோய் ஏற்படும் என்றால் சாதாரண மக்கள்



*ரோட்டரி இந்தியா தேசிய காசநோய் தடுப்பு கமிட்டியின் தலைவர் PRID YP தாஸ் அவர்கள்.*

நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும் என்றார் தாஸ்.

மாவட்ட ஆளுநர்கள் இப்பணியை ஏற்றுக் கொண்டு, தங்களது ரோட்டரி சங்கங்களைத் தூண்டினால் போதும். ஆர்வமுள்ளவர்கள் இதை எடுத்துச் செயல்படுத்தலாம்.

**காசநோயுடன் ஒரு போராட்டம்**

பல்வேறு மாவட்ட ஆளுநர்களும் ரோட்டரி மூத்த தலைவர்களும் பங்கேற்ற அந்தக் கூட்டத்தில் பேசிய நேஹா சிங் என்ற பெண்மணி, எனக்கு இளம் வயதில் காச நோய் ஏற்பட்டது. அப்போது அது காச நோய் என்று எனக்கோ குடும்பத்தினருக்கோ தெரியவில்லை. அதை எப்படித் தீர்ப்பது என்றும் புரியவில்லை என்று கூறினார். நேஹா சிங் காச நோயுடன் போராடி வென்றவர்.

இதற்காக ஒன்பது மாத காலம் சிகிச்சை பெற்றார். அதற்குப் பிறகும் இருமல் நீடித்தது. எடை குறைந்தது. அவரை ஒரு தனியார் மருத்துவரிடம் பெற்றோர் அழைத்துச் சென்றனர். அங்கும் 10 மாதம் சிகிச்சை பெற்றார். அப்போதும் பலனில்லை. அதற்குப் பிறகு, காசநோய்க்கான அரசு சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன் அங்கு மருத்து வர்கள் என்னைப் பரிசோதித்துவிட்டு, எனக்கு மருந்துகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை (multidrug-resistant—MDR) இருப்பதைத் தெரிவித்தனர். காச நோய் வந்தால் இப்படி மருந்துகளால் பயன் இருக்காது என்று தெரிவித்தனர் என்றார் நேஹா சிங்.

அதற்குப் பிறகு நேஹாவுக்கு இரண்டு ஆண்டுகள் சிகிச்சை எடுத்துக் கொள்ள நேரிட்டது. அதை என்னால் ஏற்க முடியவில்லை. தினமும் 15 மருந்துகளையும் ஒரு இன்ஜெக்ஷனையும் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த நிலை ஏழு மாதங்களுக்கு நீடித்தது என்றார் அவர்.

காச நோய் பற்றி ஏராளமா மூட நம்பிக்கைகளும் தவறான எண்ணங்களும் இருக்கின்றன. ஒரு பெண்ணுக்கு காச நோய் வந்துவிட்டால், யாரும் அவளுக்கு அருகே அமரக் கூடாது என்றெல்லாம் எண்ணம் இருக்கிறது. எனக்கு நோய் வந்ததும் என் குடும்பத்தை ஒதுக்கிவிட்டார்கள். யாருமே என் உடம்பு குறித்தோ, சிகிச்சை பற்றியோ கேட்டதேயில்லை. இதர நோய்கள் வந்தால், சமூகம் கைகொடுத்து உதவுகிறது. எனக்கு காச நோய் வந்தபோது அப்படி யாருமே முன்வரவில்லை என்று வேதனையுடன் கூறினார்.

இந்த நோய்க்கான அறிகுறியை முன் கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய நேஹா, ஆரம்பத்திலேயே மருந்துகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை என்னிடம் கண்டறியப்பட்டிருந்தால் தான் சீக்கிரமே குணமடைந்திருக்க முடியும் என்று குறிப்பிட்டார். ரோட்டரி அமைப்பினர் இந்த விஷயத்தில் உதவ முன் வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

தாஸ் பேசுகையில், அரசு அளிக்கும் சிகிச்சை முழுக்க முழுக்க இலவசம். அதற்குக் கைகொடுக்கத்தான் ஆள் தேவை. அதை ரோட்டரியினர் செய்கிறார்கள் என்றார்.

காச நோய் ஒழிப்புக்கான சர்வதேச யூனியன் காசநோய் ஒழிப்பு இயக்குநர் டாக்டர் இம்ரான் சையத் பேசுகையில், காசநோய் வருவதற்கு போலியோ, அம்மை போல் நோய்த்தொற்றுக் கிருமி காரணமல்ல. பாக்டீரியாதான். உடலின் எல்லா பாகங்களையும் தாக்கும். காய்ச்சல், தொடர்ந்து இரு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இருமல், எடை குறைவு, இரவு நேரத்திலும் வியர்த்தல் ஆகியவை இதன் அறிகுறிகளாகும். மொராதாபாத்தில் 2007ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரையில் பணியாற்றியபோது ரோட்டரி எப்படியெல்லாம் பணியாற்றி, மக்களுக்கு போலியோ சொட்டு மருந்து குறித்து விழிப்பு ஏற்படுத்தியது என்பதை நன்கு அறிவேன் என்று குறிப்பிட்டார்.

அதைப் போல் ரோட்டரியின் உதவி இந்த நோய்க்கும் தேவைப்படுகிறது, ஆண்டுதோறும் 45 ஆயிரம் பேர் புதிதாக காச நோய்க்கு ஆளாகிறார்கள்.




*காசநோயை போராடி வென்ற நேஹா சிங்.*

உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு இந்தியாவில் உள்ளது. காச நோய் விஷயத்தில் நான்கில் ஒருவர் இந்தியர் என்பது கவலை தருகிறது. இப்போது செயல்படாவிட்டால், 2050ம் ஆண்டில் 1.6 லட்சம் கோடி டாலர் இழக்க நேரிடும் என்று எச்சரித்தார்.

ஒருவருக்கு காச நோய் ஏற்பட்டு விட்டால், ஆறு மாதங்களுக்காவது சிகிச்சை எடுத்துக் கொண்டாக வேண்டும். MDR ஏற்பட்டால் இரண்டு வருடங்கள் தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டும். மருத்துவக் காப்பீடு இல்லாவிட்டால், காச நோய்க்கு ஆளானவர்கள் சத்துப் பற்றாக்குறைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாக நேரும். வேலை செய்யவே உடம்பில் சக்தி இருக்காது. அப்புறம் எங்கே பிழைப்பது, குடும்பத்தைக் காப்பது... காச நோயை ஒழிக்க இந்தியாவில் நிறைய செய்யப்பட்டுள்ளதாகக் கூறுகிறோம். உண்மையில் உயிர்க்கொல்லி நோய்களின் பட்டியலில் 5ஆவது இடத்தில் இருந்த காச நோய் இப்போது ஆறாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. 15 வயது முதல் 35 வயது வரையானவர்கள் அதிகம் பாதிக்கப்படுவது மிகவும் சோகமானது என்றார் டாக்டர் சையத்.

காசநோயை இலவசமாகக் கண்டறிவது, சிகிச்சை அளிப்பது

ஆகியவற்றுக்கு அரசு நிதியை ஒதுக்குகிறது. ஆனால், நலிவடைந் தோர்க்கு அந்த சேவையை விரிவு படுத்துவதில் 30 சதவீதம் கூட எட்ட முடியவில்லை. அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கும் இந்த சிகிச்சை வசதிகள் கிடைக்க வேண்டியுள்ளது என்று அவர் கூறினார்.

காச நோய் என்பது ஏழைகளை மட்டும் வாட்டும் நோயல்ல. உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு காசநோய் பாதிப்பு இருக்கும் போது உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறிய டாக்டர் சையத், ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் காசநோயால் பாதிக்கப் பட்டோரை அடையாளம் கண்டு, அவர்களது குடும்பங்கள் ஆதரவாக சத்தான உணவு பெற வழி செய்ய வேண்டும். காசநோயால் பாதிக்கப்பட்ட தாய் தனது குழந்தைகள் சாப்பிடும் வரையில் தான் சாப்பிட மாட்டாள். எனவே, ‘முதலில் குடும்பத்துக்குச் சத்துணவு கொடுங்கள்’ (feed the family first) என்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ரோட்டரியினர் மக்கள் நல்வாழ்வுக்காக ஏராளமாக முகாம் களை நடத்தியிருக்கிறார்கள். காசநோய்க்காகத் தனி மருத்துவ முகாம்களை நடத்தலாம் என்று டாக்டர் இம்ரான் சையத் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் ரோட்டரி இந்தியா காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தென்பகுதி செயலாக்க இணைத் தலைவர் டாக்டர் ஹஸாமுதீன் பப்பா செயல் விளக்கத்தை நிகழ்த்திக் காட்டினார். பொதுவாக காசநோய்க்கு ஆளானோர் போலி மருத்துவர்களிடம் சென்று பலன் கிடைக்காமல், அரசு டாக்டர்களிடம் வருகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

ஆரம்பத்தில் கண்டறிவது குறித்து அவர் விவரித்தார். நாற்பது சத வீதம் பேர் தொற்றுக்கு ஆளான வர்களாக இருந்தாலும் நோயால் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால், மற்றவர்களில் காசநோய்க்கு ஆளானவர்கள் தொற்றுக்கு ஆளாகாமலும் இருக்கக் கூடும். அவர்கள் கடைசி நேரத்தில் சிகிச்சை பெற வரக்கூடும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ரோட்டரி 3230வது மாவட்டத்தின் கீழ் 2004ம் ஆண்டு காசநோய் கண்டறிவதற்காக நடமாடும் பிரிவை இயக்கினோம். கணிப்பொறி வசதியுடன் கூடிய இந்த நடமாடும் வாகனத்தின் மூலம் குடிசைப் பகுதிகள், கிராமப்புறங்கள் என அதிக பாதிப்பு அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் 55 ஆயிரம் பேரிடம் சோதனை நடத்தப்பட்டது. காவல் துறையினர், பீடி தொழிலாளர்கள், சிறைக் கைதிகள், தொழிற்சாலைப் பணியாளர்கள் என பல தரப்பட்டவர்களிடம் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. அவர்களில் பாதிப்பு குறித்த சந்தேகம் இருந்தவர்கள் மேலும் மருத்துவத்துக்காக காசநோய் மருத்துவமனைகளுக்கு அனுப்பப் பட்டனர் என்றார்.

ரோட்டரியின் உலகளாவிய நிதி உதவியுடன் கடந்த ஆண்டு பெரிய அதிக வசதியுள்ள நடமாடும் வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அந்தப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.■

# ஷிவமோகா நல்வாழ்வு மையத்துக்கு ரோட்டரி செய்த வசதிகள்

ரோட்டரி செய்திக் குழு

ஷிவமோகா (ஷிமோகா) நகரில் உள்ள சரண்யா நல்வாழ்வு மையத்தில் தங்கியிருப்போருக்கு RC ஷிமோகா, D3182 பல வசதிகளையும், கட்டுமானத்தைப் புதுப் பித்து, அங்கே தங்கி நிவாரணம் பெறுவோரின் பொழுதுபோக்குக்கான வசதிகளையும் செய்து தருகிறது. மருத்துவம், குடிநீர் வசதி, ஆம்புலன்ஸ், ஜெனரேட்டர், சூரிய சக்தி விளக்குகள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, மாசா சூசெட்ஸ் நகரின் RC மேற்கு ஸ்பிரிங்ஃபீல்டு, D 7890 மற்றும் TRF உலகளவாயி நிதியம் ஆகியவற்றின் துணையோடு RC ஷிமோகா மொத்தம் ரூ.26 லட்சம் மதிப்புள்ள திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.

கர்நாடகத்தில் ஒன்றரை லட்சம் புற்றநோய் நோயாளிகள் உள்ளனர். ஆண்டுதோறும் 1000 பேர் புதிதாக புற்று நோய்க்கு ஆளாகிறார்கள். ஷிமோகா மற்றும் அதை யொட்டி பகுதிகளில் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடுவோருக்கு சரண்யா நல்வாழ்வு மையம் ஒன்றுதான் நிவாரணம் அளித்து வருகிறது.



*நலவாழ்வு மையத்தில் மற்ற ரொட்டேரியன்களுடன்* IPDG GN *பிரகாஷ்*

அவர்களது வலியைப் போக்குவதற்குப் போதிய மருந்துகள், செவிலியர்கள் உதவியோடு பராமரிக்க வேண்டியுள்ளது. எனவே, வசதியான கட்டுமானம், வலியிலிருந்து நிவாரணம் பெற வழிகளை அமைத்துத் தர வேண்டும் என்று முடிவு செய்தோம் என்று மாவட்ட முன்னாள் ஆளுநர் டாக்டர் நாராயண் பண்டேஸ்வர் கூறினார்.

இந்த சரண்யா நல்வாழ்வு மையம் 2004ம் ஆண்டு தொடங்கியது முதல் 3 ஆயிரம் பேருக்கு நிவாரணம் அளித்து வருகிறது என்றார்.■



## ரோட்டரியின் சர்வதேச அமைதி திட்டத்திற்கு ஆதரவு அளியுங்கள்

ரோட்டரி சங்கம் 1905ம் ஆண்டு தொடங்கியது முதல் அமைதிக்காகப் பாடுபட்டு வருகிறது. 1914ம் ஆண்டில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் உலக நாடுகளிடையே அமைதி நிலவுவதற்காகப் பாடுபடுவது, தனது செல்வாக்கைப் பயன்படுத்துவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிறகு, தனது சேவைகளின் மூலம் சர்வதேச அமைதி, நல்லிணக்கத்தை நிலைநாட்டப் பாடுபடுவது என்று 1921ம் ஆண்டு மாநாட்டில் உறுதி கொள்ளப்பட்டது. 1945ம் ஆண்டு ஐ.நா., மன்றம் அமைக்கப்படுவதில் ரோட்டரி சங்கம் பெரும் பங்களிப்பு செலுத்தியது. அமெரிக்கா, சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற ஐ.நா., மாநாட்டில் ரோட்டரியைச் சார்ந்த ஐம்பது பேர் பேராளர்களாகவும், ஆலோசகர் களகாவும் பங்கேற்றனர்.

இன்றைக்கு ரோட்டரியின் ஆறு முக்கிய திட்டங்களில் அமைதியை மேம்படுத்தும் பணியும் முக்கியமாக இடம்பெற்றுள்ளது. அமைதிக்கான பணியோ, குடிநீர், சுகாதாரம், அடிப்படைக் கல்வி, எழுத்தறிவு, பொருளாதார, சமூக மேம்பாடு, மனித சமுதாயம் தொடர்பான திட்டங்களோ, தாய்சேய் நலத் திட்டமோ, நோய்த்தடுப்புத் திட்டமோ எதுவாகவும் இருக்கட்டும். பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் அதில் அமைதி மேம்பாடும் அமைந்துள்ளது.

மேலும், ஆண்டுதோறும் 100 பேர் அமைதியின் தூதர்களாக (Rotary Peace Fellows) தேர்ந் தெடுக்கப்பட்டு ரோட்டரியின் ஆறு மையங்களில் ஆய்வு நடத்துவதற்கு ஃபெலோஷிப் பெறுகிறார்கள். மனித உரிமைகள், சர்வதேச அரசியல், பொது சுகாதரம், மேம்பாடு ஆகிய துறைகளில் பயிற்சி பெற்று சான்றிதழ் அல்லது முதுநிலைப் பட்டம் பெறுகிறார்கள். இந்தப் பயிற்சித் திட்டத்தில் 1,100 பேர் பங்கேற்றுள்ளனர். இதன் நல்ல பலன்களை விரைவில் காணப் போகிறோம்.

மேலும் சாதகமான பலன்களை எட்டும் வகையில் இத்திட்டத்தை மேலும் எப்படி மேம்படுத்துவது என்று TRF அறங்காவலர்கள் பரிசீலித்து வருகிறார்கள். உங்களால் முயன்றால் நீங்கள் உதவி செய்யலாம். ரோட்டரி அமைதி மையங்களுக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தலாம். அடுத்த தலைமுறையின் அமைதிக்காக ஆதரவு அளிக்கலாம்.



ரான் D பர்டன், ஃபவுண்டேஷன் அறக்கட்டளைத் தலைவர்

மாநாட்டை நோக்கி...

## ஹம்பர்க்: உலகத்தின் நுழைவாயில்

ஸ்டீபன் மெய்யூஸர்.




ஜெர்மனியில் எல்பீ நதிக்கரையில் அமைந்துள்ள துறைமுக நகரான ஹம்பர்க் பல நூற்றாண்டுப் பழைமை வாய்ந்தது. (இங்குதான் ரோட்டரி சர்வதேச மாநாடு நடைபெறுகிறது) எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஹமாபர்க் கோட்டை இன்றைக்கும் தனது சுதந்திரத்தைப் பறைசாற்றிய படி பாதுகாப்பு அரணாக உள்ளது. ஹம்பர்க், ஹன்ஸெடிக் நகரம் என்ற சிறப்போடு அழைக்கப்பட்டு வருவதால், இங்கு வசிப்போர் ஹன்ஸெடீன் என அழைக்கப்படுவதில் பெருமைப்படுகிறார்கள்.

இடைக்காலம் தொடங்கி உலகத்தின் நுழைவாயில் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இதன் வழியாக 19வது மற்றும் 20வது நூற்றாண்டுகளில் மொத்தம் சுமார் 50 லட்சம் மக்கள் வெளியேறினர். அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பாலின்ஸ்டட் குடியேறியோர் அருங்காட்சியகத்தில் (BallinStadt Emigration Museum) இடம் பெற்றுள்ளன. நகரின் கடற்பயணம் குறித்த வரலாற்றை ஹம்பர்க் சர்வதேச கடற்பயண அருங்காட்சியகத்தில் காணலாம்.

ஐரோப்பாவில் ஹம்பர்க் இன்று ஓய்வில்லாத நகராகிவிட்டது. இந்தத் துறைமுகத்தில் 2017ம் ஆண்டு மட்டும் 13.60 கோடி டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. கப்பல்களின் போக்குவரத்தும் சுற்றுலாப் பயணிகளின் வரத்தும் அதிகம். நதிக்கரையோரம் கப்பலில் மிதந்தபடியே உணவருந்தலாம். தேவாலயத்துக்குச் செல்லலாம்.

பன்முக கலாசாரம் கொண்டு, இன்று நவீனமாக விளங்கும் ஹம்பர்க் நகரம் உலக மயமாக்கலின் பார்வையில் வணிகம், தொழில்நுட்பம், கலாசாரம் ஆகியவற்றுக்குச் சிறந்த இடமாகத் திகழ்கிறது.

2019 HAMBURG

2019ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டுக்குப் பதிவு செய்து கொள்ள இணையதளம் : www.riconvention.org

# ரோட்டரியும், ரோட்டராக்ட் இணைந்து செயல்படுவது அவசியம்

ரஷீதா பகத்

இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, ரூபெல்லா, காச நோய் ஒழிப்புத் திட்டம் குறித்து இரண்டு நாள் கூட்டம் தில்லியில் அண்மையில் நடந்து முடிந்தது. மிகவும் முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்பட்ட கூட்டத்தில் பங்கேற்ற "ரோட்டராக்ட்" அமைப்பின் இளைஞர்கள் சிறிது இளைப்பாறுவதற்காக சுவையான நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாவட்ட ரோட்டராக்ட் அமைப்பின் பிரதிநிதிகள் (DRRs), மாவட்ட ரோட்டராக்ட் தலைவர்கள் (DRCs) கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் C பாஸ்கர், இனிமேல் நாமெல்லாம் (மூத்தவர்கள்) சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு மனமகிழ்வோடு நிகழ்வுகளை நடத்தலாம் என்று குறிப்பிட்டார். ரோட்டரி அமைப்பினரின் பணிகளை அடுத்து வரும் இளைய தலைமுறையினரான ரோட்டராக்ட் அமைப்பினர் தொடர்வர் என்பதை இப்படி சுவையாகக் கூறினார்.

அங்கே கூடியிருந்த இளைஞர் களிடம், இந்தக் கூட்டத்திற்கு நீங்கள் எல்லோரும் அழைக்கப்பட்டது எதற்காக என்று தெரியுமா? என்று கேட்டார்.

அதற்கு இளைஞர்கள் இப்படி யெல்லாம் பதில் கூறினர்.

- புதிய சிந்தனைகளைப் பகிர்தல்
- ரோட்டராக்ட்-ரோட்டரி அமைப்பினர்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்திக் கொள்ள
- நல்ல நெட்வொர்க்கிங் பெற...
- ஒருவருக்கு ஒருவர் உத்வேகப்படுத்திக் கொள்வதற்கு..
- ரோட்டராக்ட் இளைஞர்கள் இல்லாமல் ரோட்டரி அமைப்பு முழுமை பெறாது என்பதால்
- ரோட்டரியின் எதிர்காலம் குறித்து திட்டமிடவும் ரோட்டரி அமைப்பை இளைஞர்களைப் போல் துடிப்போடு செயல்பட வைக்கவும்.

இப்படி பல வகையான பதில்கள் கிடைத்தாலும் அவற்றில் சில உண்மையானவை. சில பாதி சரி என்பது போல் அமைந்துள்ளன என்றார் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்.

ரோட்டரியுடன் இணைந்து இந்த வாய்ப்பை சுய முன்னேற்றத்துக்காகவும் சுய



*தில்லி ரோட்டராக்ட் சந்திப்பில் RID C பாஸ்கருடன் DRRs DG வினய் பாட்டியா, மற்றும் RC அஷோக் குப்தாவும் உள்ளனர்.*

மேம்பாட்டுக்காகவும் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். ரோட்டராக்ட் இளைஞர்கள் 18 முதல் 30 வயது வரையிலானவர்கள். ரோட்டரி அமைப்பின் நிகழ்ச்சி களைப் புரிந்துகொள்வதற்காக நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். அத்துடன் ரோட்டராக்ட் அமைப்பை உங்களது மாவட்டத்தில் எப்படி வலுப்படுத்துவது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், இளைஞர்களை இணைத்துக் கொள்வதை உறுதி செய்யவேண்டும். தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்த அரிய வாய்ப்பை மாவட்ட ஆளுநர்களுடன் தோளோடு தோள் கொடுத்துப் பணியாற்றுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அவர் இளைஞர்களை வலியுறுத்தினார்.

கடந்த ஆண்டு இயக்குநராகப் பொறுப்பேற்றபோது 12 நாடுகளின் 34 மண்டலங்களில் மூன்று மண்டலத்தின் பிரதிநிதியாக இருந்ததைக் குறிப்பிட்டார். அப்போது ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் உறுப்பினர்களுக்கு இடையில் போதிய ஒருங்கிணைப்பு இல்லாததைக் கண்டறிந்தேன். மாவட்ட ஆளுநர் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகளுடன் போதிய நேரத்தை ஒதுக்காததோ மாவட்ட ரோட்டராக்ட் தலைவர்கள் ரோட்டரி அமைப்பினரை உற்சாகத்தோடு அணுகாததோ கூட ஒரு காரணமாக இருந்திருக்கலாம். எனவே, இரு தரப்பினருக்கும் இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது என முடிவு செய்தோம்.

அப்படி ஒருங்கிணைப்பு அமைந்துவிட்டால், பொருளாதார வளர்ச்சிக்கான குறிக்கோள், தொலை நோக்குப் பார்வையுள்ள தலைவர்கள் கொண்டதாக மனிதாபிமான சேவைகளைத் தொடர்பவர்களாக இருக்கிறோம் என்று உலகுக்கு இந்தியா எடுத்துக் காட்ட முடியும்.

ரோட்டரி மண்டலத் தலைவர்கள், மாவட்ட ரோட்டரி சங்கத்தினர், ரோட்டராக்ட் பிரதிநிதிகள், மாவட்ட ஆளுநர்கள் ஆகியோருக்கான பயிற்சி முகாமை பாஸ்கர் கடந்த ஆண்டு நடத்தினார். அதைப் போன்றதொரு தில்லியில் இந்த ஆண்டும் நடத்தப்பட உள்ளது.

உலகம் முழுவதும் 2,57,577 ரோட்டராக்ட் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களில் 45,041 பேர் இந்தியாவில் உள்ளனர். உலகின் மொத்த ரோட்டரி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினரைக் கொண்ட நாம் இந்தியா எப்படி தலைமை ஏற்கப் போகிறது என்று காட்டுவதற்கான வழியைக் கண்டறியவேண்டும் என்றார்.

அதைப் போல் உலகில் உள்ள 35 ஆயிரம் ரோட்டரி சங்கங்களில் 10,182 ரோட்டரி சங்கங்கள்தான் ரோட்டராக்ட் சங்கங்களை அமைத்துள்ளன என்று கூறிய பாஸ்கர், அங்கிருந்த மாவட்ட ஆளுநர்களைப் பார்த்து, நீங்கள் உங்களது மாவட்டத்தில் அனைத்து ரோட்டரி சங்கங்களும் ரோட்டராக்ட் சங்கங்களை அமைக்க வலியுறுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

ரோட்டராக்ட் பொறுத்தவரையில் ரோட்டராக்ட்டர்களின் பதிவு தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கை (1,45,861) மதிப்பிடப்படும் எண்ணிக்கை (2,57,577) என இருவகையான விவரங்களை ரோட்டரி இன்டர்நேஷனல் தருகிறது. தெரிவிக்கப்பட்ட எண் என்பது ரோட்டரி சங்கங்கள் அளிக்கும் உண்மையான தகவல். ஆனால், உலக அளவில் மதிப்பிடப்படும் எண்ணிக்கை யூகத்தின் அடிப்படையிலானது. இந்தியாவைப் பொறுத்தவரையில் தெரிவிக்கப்பட்ட எண் 60 சதவீதம்தான் ஆகும். இது குறித்து கடந்த முறை ஹைதராபாதில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் ரோட்டராக்ட் சங்கத்தினருடன் இது தொடர்பாக விவாதிக்க வேண்டும். சரியான எண்ணிக்கையுடன் தகவல்களைப் புதுப்பிக்க வேண்டும். 2016-17ம் ஆண்டில் இந்தியாவில் தெரிவிக்கப்பட்ட ரோட்டராக்ட் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 25 ஆயிரம்தான். ஆனால், 2017-18ம் ஆண்டில் அது 45 ஆயிரமாக உயர்ந்துள்ளது. மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் நல்ல பணியைச் செய்திருப்பதை இது காட்டுகிறது. அதைப் பாராட்டுவோம் என்று பாஸ்கர் குறிப்பிட்டார்.

ஆனால், இந்த எண்ணும் உண்மையை வெளிப்படுத்தவில்லை. RI தெற்கு ஆசிய அலுவலகத்தில் சங்கத்தின் மாவட்ட ஆதரவாளருமான மூத்த ஒருங்கிணைப்பாளருமான ஜோசப் தாமஸ் அநேகமாக நாம் 60 முதல் 70 சதவீதம் உறுப்பினர்களைக் கண்டறிந்துவிட்டோம் என்று கூறுகிறார். 100 சதவீதத்துக்கு குறைவாக இருக்கக் கூடாது. அது பெரிய சவால். அதைச் செய்ய முடிந்தால், புதியவர்களுடனான இணைப்புகளின் மூலம் உங்களது உறுப்பினர்களுக்கு அதன் பலன்களைத் தரலாம். அதுவும் ஒரே தளத்தின் மூலமாக செயல்படுத்தினால் மிகவும் சிறப்பு. கணினியில் ஒரு சொடுக்கின் மூலம் எந்தத் தகவலையும் பெரிய திட்டத்தையும் பகிர்ந்து கொள்ளலாம். அது நாடு முழுவதும் எதிரொலிக்கும் என்றும் பாஸ்கர் கூறினார்.

இன்று ரோட்டராக்டர்கள் குறித்து முறையான தகவல் பதிவு எதுவும் இல்லாததால், யாரையும் ஈர்க்க முடியவில்லை. அவர்கள் நண்பர்களை உருவாக்கிக் கொள்ள இயலும். தலைவர்களாக உருவாக பயிற்சி கொள்ளவும் முடியும். வேலைவாய்ப்புகளையோ வர்த்தக வாய்ப்புகளையோ பெற்றுக் கொள்ளவும் இயலும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தான் ரோட்டரி சங்கத்தில் இணைந்ததை நினைவுகூர்ந்த அவர், யாரோ ஒருவர் தன்னை சேரும்படி கேட்டுக் கொண்டதாகவும் அதன் பிறகு ரோட்டரி குறித்து பல விவரங்களை அறிந்து கொண்டதாகவும் பயணங்களை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். ரோட்டரியிலிருந்து பெற்றதை விட நிறைய கற்றுக் கொண்டேன். அதுதான் உண்மை. மேலும் ரோட்டரி பயனடைவதற்காக நாங்கள் ரோட்டராக்ட் அமைப்பினை வலுப்படுத்துகிறோம் என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள். அது உண்மையல்ல என்றார்.

உலகில் 120 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் 30 சதவீதம் பேர் 25 வயதுக்குக் கீழே உள்ள இளைஞர்கள். அவர்களை ஆற்றல் உள்ளவர்களாகத் தயார்படுத்தப் போகிறோம்? எப்படி வேலைவாய்ப்புத் திறனை அவர்களுக்கு உணர்த்தப்



DG *குஸ்தாத் ஆங்கலேசாரியா மற்ற* DRR*களுடன் தில்லி சந்திப்பில்.*

போகிறோம்? எப்படி போட்டிகளை எதிர்கொள்வோராக மாற்றப் போகிறோம்? இதை ஒரு சமூக சேவைபோலக் கருதி செயல்படுவோம். அவர்களது திறன் மேம்படுவதற்கும், தனிப்பட்ட முன்னேற்றத்துக்கும் வாய்ப்பளிப்போம். இளைஞர்களை மேம்படுத்துவதன் மூலம் வலுவான இந்தியாவைக் கட்டியமைப்போம் என்பதை மறக்க வேண்டாம்.

பாஸ்கர் பேசுகையில், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு 2018-19ம் ஆண்டில் என்னென்ன செய்யப் போகிறோம் என்று விவரிக்கும் வகையில் ஒரு பக்க கருத்தியல் அறிக்கையைத் தயாரிக்கும்படி மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்.

## WinS Programme

*உலகில் மொத்த ரோட்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கை* — **7,942**

*இந்தியாவில் உள்ள ரோட்டராக்ட் சங்களின் எண்ணிக்கை* — **2,824**

*உலகின் மொத்த ரோட்டராக்ட் உறுப்பினர்கள்* — **257,577** *(சுமார்)*

*உலகில் அறிவிக்கப்பட்ட ரோட்டராக்டர்கள்* — **145,861**

*இந்தியாவில் உள்ள ரோட்டராக்ட் உறுப்பினர்கள்* — **45,041**

பெரிதாக இலக்கு வைத்துக் கொள்ளுங்கள். முடியாததை முடியும்படி செய்யுங்கள். பட்டன்களை அழுத்துவதை மாற்றி திரையைத் தொட்டு இயக்கும் முறைக்கு ஸ்டீவ் ஜாப்ஸ் மாறியதைப் போல செயல்படுங்கள்.

சாதாரண மக்களின் தேவைகள் என்ன என்று புரிந்து கொண்டதால் என்னால் இதையெல்லாம் செய்ய முடிந்தது என்று விவரித்தார் அவர். அத்துடன் எதைச் செய்தாலும் அதில் ஈடுபட்டு, அந்தப் பணியை நேசி த்து செயல்பட்டதாகக் குறிப்பிட்டார். உங்களது வேலையோ ரோட்டராக்ட் பணியோ ஈடுபட்டுச் செய்யுங்கள் என்றும் கூறினார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜேந்திர K. சாபூ தனக்கு ரோட்டரி இன்டர்நேஷனல் முதல் பணியின் போது, இளைஞர் செயல்பாடுகள் தொடர்பான பணிகள் அளிக்கப்பட்டதை நினைவுகூர்ந்தார். ரோட்டரி பணிகளில் இருந்தபோதெல்லாம் ரோட்டராக்ட் இளைஞர்களுடன் தொடர்பில் இருப்பேன். அவர்களது பணியில் ஈடுபாடு காட்டிவந்தேன். இந்தப் பயிற்சித் திட்டம் எத்தனை எத்தனை ஆண்டுகளாக யோசித்து வடிவமைக்கப்பட்டது என்பதை ஒரு மணி நேரம் என்னால் விவரிக்க முடியும். ரோட்டராக்டர்கள் என்பவர்கள் ரோட்டரியின் அம்சம்தான். அவர்களுக்குத் தானாகவே சேவை மனப்பான்மை மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும் என்றார்.

ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள் ராஜேந்திர ராய், அசோக் குப்தா ஆகியோர் ரோட்டரி அமைப்பில் மேலும் பல இளைஞர்கள் சேரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகளுக்கு மாவட்ட ரோட்டரி யினரும், ஆளுநரும் ஊக்கமளிக்க வேண்டும் என்று கூறிய ராய், ஒரு காலத்தில் மாவட்ட ரோட்டரி சங்கங்கள் ஏதோ பெயருக்குத்தான் இருந்தன. ரோட்டராக்ட் இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்று RI தலைவர் பேரி ரஸ்ஸின் ரோட்டராக்ட் அமைப்பினர் படிப்படியாக ரோட்டரி அமைப்பில் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ரோட்டரி அமைப்பில் சேரும் படி ரோட்டராக்ட் சங்கத்தினர் ஒவ் வொருவரையும் ரோட்டரியின் மூத்த அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறிய அவர் ரோட்டரி இன்டர்நேஷனல் 2016ம் ஆண்டில் ரோட்டராக்டர்கள் ரோட்டரி அமைப்பில் சேருவதற்கான வயது வரம்பினை 29 ஆகத் தளர்த்தியது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இன்னொரு ஒருங்கிணைப்பாளர் அசோக் குப்தா மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் தங்களது ஆற்றலை பள்ளிகளில் WinS திட்டத்தை பரப்ப உதவலம் என்றார்.

# உடல்நலம் ஒரு பார்வை

சந்தியா ராவ்

ஷீலா நம்பியார் இந்த நூலில் எழுதியுள்ளவற்றில் சில ஆரோக்கியமான உடல் நலம் தொடர்பாக விவாதிக்கப்பட வேண்டியவை. உடல் நலத்தை ஏன் பேணிக் காக்க வேண்டும் என்பதையும் உடலைச் சரியாகப் பார்த்துக் கொள்ளாவிட்டால் எத்தகைய பாதிப்பு நேரும் என்பதையும் இந்நூல் விளக்குகிறது. ஆரோக்கியமான உடலைக் காப்பதற்கான பல்வேறு காரணங்களையும், தேவைகளையும் நூலாசிரியர் நிறைய கூறியிருக்கிறார். அதனால் தான் இது முற்றிலும் புதுமையானதாக உள்ளது.

ஒரு வாழ்வியல் மருத்துவ நிபுணர் என்ற முறையிலும் மகப்பேறு மருத்துவர் என்ற முறையிலும் நூலாசிரியர் ஷீலா நம்பியார் பெண்களின் உடல் குறித்து வழிகாட்டுகிறார். அறிவியல், உளவியல் கூறுகளும் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. அதனால்தான் நூலின் இணைத் தலைப்பாக “நீங்கள் சுகமாகவும் மகிழ்வாகவும், திடமாகவும் இருப்பது எப்படி?” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நூல்களைப் போல் “தசைகளில் முறுக்கேற்றுவது எப்படி?”, “ஊளை சதையைக் குறைப்பது எப்படி?” என்றெல்லாம் கூறப்படவில்லை.

நீங்கள் மாடிப் படியில் ஏறும்போது, கைப்பிடியைப் பிடிக்கிறீர்களா? தரையில் கீழே இருக்கும் பொருளைக் குனிந்து எடுக்கப்போய் முதுகு வலியால் அவதிப்படுகிறீர்களா? வயதான பிறகும் நல்ல உடல் அமைப்போடு இருப்பதற்கு சில எளிமையான அடிப்படைக் கேள்விகளையும் விடைகளையும் குறிப்பிட்டுள்ளார். உங்கள் உடல் நிலை குறித்து நீங்கள் மதிப்பிடுவதற்கு அவர் துணை புரிகிறார். உங்களது உடல்நிலை மாற்றத்துக்கான மருத்துவக் காரணங்களையும் விவரிக்கிறார்.




40 வயதில் உடல்நலம் காத்தல்:
*நீங்கள் மகிழ்வாகவும்,*
*திடமாகவும் இருப்பது எப்படி?*
*டாக்டர் ஷீலா நம்பியார், ஹாச்சே, 2018*
*335 பக்கங்கள். ரூ. 399*

நூலாசிரியர் டாக்டர் ஷீலா நம்பியார் உடலைச் சீராகவும் தளர்நிலையிலும் வைத்துக் கொள்ள எடைப் பயிற்சி (weight training) எவ்வளவு முக்கியம் என்றும் விளக்குகிறார். வயதானாலும் எளிய உடற்பயிற்சி மேற்கொள்ளலாம் என்கிறார்.

ஊடல் நலம் பற்றி மட்டுமின்றி, சூழலுக்கு ஏற்ப தனிநபர் உளவியல், உணர்வியல், சமூக ஆரோக்கியம் ஆகியவற்றையும் அழகாக எடுத்துரைக்கிறார். பிறருடன் பழகுதல், மன அழுத்தத்தைச் சமாளித்தல் ஆகியவற்றையும் விவரிக்கிறார். இந்த நூல் நிறைய யோசனைகளைக் கொண்டுள்ளது. ஒருவர் குண்டாக இருந்தால், பலசாலியாகிவிடுவாரா? உடற்பயிற்சி என்றால் உண்மையில் என்ன என்பதை விளக்குகிறார்.

பசியோடு இருக்கும்போது எதையும் வாங்காதீர்கள். அப்போது சாப்பிடத் தேவையில்லாததையும் வாங்க நேரிடும் என்று நூலாசிரியர் எச்சரிப்பதை யாரால் மறுக்க முடியும்?

சிலர் தனக்கு எப்படி சமைப்பது என்று தெரியாது என யாராவது கூறினால், திடுக்கிட்டுப் போவேன். அவர்களுக்கு உணவைப் பற்றிய சரியான புரிதலே இல்லை என்றுதான் நினைத்துக் கொள்வேன். சமையல் வேலையை யார் தலையிலாவது நீங்கள் கட்டிவிட்டால், உங்களது உடல் ஆரோக்கியத்தை யாரோ கவனித்துக் கொள்ளட்டும் என்று அலட்சியமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம் என்கிறார் நூலாசிரியர்.

வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை நூலாசிரியர் தொட்டுக் காட்டுகிறார். உதாரணத்துக்கு, பெண்களுக்கு மிகுந்த சிரமம் தரும் மாத விடாய்க் காலம், அதைச் சமாளிக்கும் வழியையும் கூறுகிறார். இதுபோல் நம் நெஞ்சைத் தொடும் விஷயங்களை டாக்டர் ஷீலா நம்பியார் கையாள்கிறார். அவர் கூறும் சிறந்த அறிவுரை நகைச்சுவை உணர்வு.

பலபேர் தேவைக்கு மேலே சாப்பிடுவது ஏன் என்றெல்லாம் அலசுகிறார். அதற்கான சமூக நெருக்குதலையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். உதாரணத்துக்கு பஃபே எனப்படும் சுய விருந்துப் பரிமாற்றம். இதுபோன்ற விருந்தில் வைக்கப்படும் உணவைப் பலபேர் அளவில்லாமல் அள்ளியள்ளிச் சாப்பிடுகிறார்கள். இது கெடுதலுக்கான உணவுமுறை என்று எச்சரிக்கிறார்.

இது உடல் உழைப்பு தேவைப் படாத காலமாகும். அதனால், நாம் ஏதாவது செயல்பட்டுக் கொண்டோ நடந்து கொண்டோ இருக்கவேண்டும். ஆமாம், உடலுக்கு சரி, நாம் தினமும் தேடி அலைகிறோமே அந்த மன அமைதிக்கு? அதற்கும் வழி சொல்கிறார் நூலாசிரியர். இதற்காகவே இந்தப் புத்தகத்தைப் பரிந்துரைக்கிறேன்.

நூலில் அச்சு எழுத்துகள் படிப்பதற் குச் சிரமமாக இருப்பது ஒன்றுதான் இந்நூலில் உள்ள ஒரே குறை. அதே சமயம் உடற்பயிற்சியைக் குறிக்கும் வரைபடங்கள் தெளிவாக இல்லை.

40 வயதில் உடல்நலம் காத்தல் நூல் நடைமுறைக்கு எளிமையான படிப்பதற்கும் பின்பற்றுவதற்கும் சுலபமான வழிகாட்டி ஆகும். ■

# பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் சமூகங்களின் மறுகட்டமைப்பை உருவாக்குதல்:

# ஹெலன் கிளார்க்

ஜெய்ஸ்ரீ

வலுவான வளர்ச்சிக்கு சமூகங்களில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதில் ரோட்டரி கவனம் செலுத்த வேண்டும் என்று நியூஸிலாந்தின் முன்னாள் பிரதம மந்திரி ஹெலன் கிளார்க், டொராண்டோவில் RI மாநாட்டில் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு, தன்னுடைய கருத்துக்களை RIயின் தலைவர் இயன் ரிஸ்லியுடன் பகிர்ந்து கொண்டார். உரையாடலின் பகுதிகள்:

**ரிஸ்லி:** *அரசியலில் பெண்கள் பங்களிப்பு என்பது ஒரு விதிவிலக்காக இருந்த போது நீங்கள் அரசியலுக்கு வந்தீர்கள், பார்க்கப்போனால், நீங்கள் பாராளுமன்றத்திற்கு 1991ல் தேர்ந் தெடுக்கப்பட்டபோது, 100 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்; இதில் 8 பேர் மட்டுமே பெண்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?*

**ஹெலன்:** நிலைமை மோசமாக இருந்தது. 92 எம்.பி.களும் 8 பெண்களும் இருந்தனர்; அது 10 சதவீதத்திற்கும் குறைவு. எனவே நாங்கள் ஒரு தனிமையான சி றிய குழுவாகக் கருதப்பட்டோம். அந்த எண்ணிக்கை, முன்பு நடந்த தேர்தல்களில் இருந்த பெண்களின் சதவிகிதத்தை காட்டிலும் இருமடங்கு அதிகமாக இருந்ததால், மக்கள் பெண்கள் பொறுப்புக்களை கையகப்படுத்துகின்றனர் என்று கூறத் தொடங்கிவிட்டனர். ஆனால் மிக சில பெண்கள் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்ததால், எங்களுக்கான எதிர்பார்ப்பு அதிகமாக இல்லை என்பதே உண்மை. 125 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் பெண்களுக்கான வாக்களிக்கும் உரிமம் குறித்து போராடிய நாடுகளில் நியூசிலாந்து ஒன்றாக இருந்த போதிலும் நிலைமை இப்படித்தான் இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரே ஒரு பெண் எம்.பி. மட்டுமே இருந்தார். எந்தப் பெண்ணும் பிரதமராக இருக்க விரும்பவில்லை; ஒரு அமைச்சராக ஆவதில் மட்டுமே இருந்தது.

இயனின் அனுமதியுடன் நான் செய்த முதல் தேர்தல் பிரச்சாரத்தைப் பற்றி ஒரு சிறியகதையைக் கூற விரும்புகிறேன். நான் ஒரு சிறிய நகரத்தில் உள்ளூர் ரோட்டரி கிளப்பில் உரையாற்றினேன். என் உரைக்குப்பின், அங்கிருந்த



RI *தலைவர் இயன் ரிஸ்லி டொராண்டோவில்* RI *மாநாட்டில் நியூசிலாந்து முன்னாள் பிரதமர் ஹெலன் கிளார்க் உடன்.*

உறுப்பினர்களில் ஒருவர் - அந்த நேரத்தில் எந்த பெண் உறுப்பினரும் இல்லை - எழுந்து நின்று என்னைப் பார்த்து:''உங்களுடைய திறன்களைக் கொண்டு, நீங்கள் ஒரு அற்புதமான விவசாயி மனைவியாக இருப்பீர்கள்'' என்றார்.

*சரி ஹெலன், காலம் அதன்பிறகு மாறி விட்டது; நியூஸிலாந்தில் 40% ரோடேரியன்கள் பெண்கள். இப்போது நியூஸிலாந்து PM ஜெசிந்தா அர்டேன் ஒரு குழந்தையை பெற்றெடுத்திருக்கிறார். ஜெசிந்தா பிரதமராக இருந்து ஒரு குழந்தையை பெற்றுடுத்தது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

ஜெசிந்தா 37 வயதிலேயே பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க இளம் பெண். அந்த வயதில், நான் ஒரு இளைய அமைச்சரவை மந்திரி ஆனேன். காலம் மாறிவிட்டதால், இன்றைய இளைய தலைமுறை பெண்கள் அரசியலில் நிறைய எதிர்ப்பார்க்க முடிகிறது. ஜெசிந்தா, இயல்பாக அவராகவே இருந்து தனக்கென்று ஒரு பாணியைக் கொண்டுள்ளார். பெற்றோர் கடமைக்கான 6 வார விடுப்புக்கு பின்பு, பணிக்கு செல்லும் போது அவருடைய துணைவர் வீட்டில் தங்கி குழந்தையை பார்த்துக் கொள்வார். இதில் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், நான் அரசியலுக்கு வந்தநேரத்தில், இது நினைத்துக் கூட பார்க்க முடியாத விஷயமாக இருந்திருக்கும். ஒன்று, பிரதமர் ஒரு பெண்ணாக இருப்பார் என்பது; இரண்டு, அவர் ஒரு குழந்தை பெற்றேடுப்பார் என்பது; மற்றும் மூன்று, அப்படியே ஆனாலும் அவர் துணைவருடன் திருமண உறவில் இல்லாமல் இருப்பார். எனவே நியூசிலாந்து உண்மையிலேயே மிகவும் சகிப்புத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை கொண்ட நாடாக மாறியுள்ளது.

*ரோட்டரி ஒரு சில வழிகளில் ஐ.நா.(UN) போல உள்ளது. பல பெண் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள் மேல் மட்டத்தில் இல்லை. சிலர் அதைப் பொருட்படுத்த தேவை இல்லை என்பார்கள். நீங்கள், வேலை செய்வதற்கு சிறந்த நபரைப் பெறுவதில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், மேல்மட்ட பதவிக்கு பெண்களை சேர்ப்பது என்பதும் முக்கியம் என்று எதனால் நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.*

முதலில், நான் ஹிலாரி கிளின்டனை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்: 'பாலின சமத்துவம் என்பது செய்வதற்கு சரியான விஷயம் மட்டுமல்ல அது ஒரு தனி மனித உரிமை'. அது ஒரு சாமர்த்தியமான விஷயமும் கூட. ஏனென்றால் பாலின சமத்துவத்தின் மூலம், நீங்கள், ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் பிரதிநிதியாகிறீர்கள். எனவே, நம் அமைப்புகளில், அது ரோட்டரியாக இருந்தாலும், ஐ.நா., அல்லது ஒரு நாட்டின் நாடாளுமன்றமாக இருந்தாலும், அது பிரதிநிதித்துவப் படுத்தப்படும் அமைப்பைப் போல இருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், இயல்பான நடைமுறையில் பெண்கள் உயர்நிலைகளில் இருக்க வேண்டும்.

*ஐ.நாவின் நிலையான வளர்ச்சி இலக்கு களின் (SDG) கட்டமைப்பாளர்களில் நீங்கள் இருந்தீர்கள். நிலையான வளர்ச்சி பற்றியும், நீங்கள் எதை சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதற்கான திட்டத்தின் ஒரு சுருக்கமான பதிப்பையும் எங்களுக்கு கொடுங்கள்.*

SDGக்கு முன்னர், மில்லினியம் வளர்ச்சி இலக்குகள் இருந்தன. வறுமை, பசி, பாலின சமத்துவம், கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்ற பிரச்சினைகளை எதிர்த்து நிறைய முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் சுற்றுப்புற சூழலில் அவ்வளவு முன்னேற்றம் இல்லை. மக்கள், செழிப்பு மற்றும் கிரகம் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால், SDG ஆனது, 2015ஆம் ஆண்டில் இவைகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.

நமது சுற்றுச்சூழலை நாம் தொடர்ந்து சீரழித்தால், வறுமை மற்றும் பசி பிரச்னையை நாம் தீர்க்கப்போவதில்லை. அது ஒரு சவாலாகவே இருக்கிறது. இந்த பாதையில் தடைகளாக நிறைய விஷயங்கள் உள்ளன. நாம் நமது முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் மற்றும் சமூகத்தில் ரோட்டரி செய்யும் அனைத்து நல்ல வேலைகளையும் இரட்டிப்பாக செய்ய வேண்டும். பின்தங்கியவர்களையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும் ஆதரிப்பது அதன் முக்கிய பாகமாக இருக்கும்.

*இந்த இலக்குகள் வியக்கத்தக்க லட்சியங்கள் - வறுமை, பசியை அறவே ஒழிப்பது, நல்ல ஆரோக்கியம், நல்வாழ்வு, தரமான கல்வி, பாலின சமத்துவம், சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம், மலிவான மற்றும் தூய்மையான ஆற்றல். இந்த இலக்குகள் உண்மையான யதார்த்தம் கொண்டதா?*

இவை உயர்ந்த இலட்சியங்கள்தான். ஆனால் பல வளர்ச்சி அடைந்த நாடுகள் இந்த லட்சியங்களில் பலவற்றை அடைந்துள்ளனர். பெரும்பாலான சமூகங்கள் பாதுகாப்பு வலைக்கு மேலே இருக்கின்றன, இவற்றில் எந்த ஒருவரும் மோசமான வறுமை கோட்டிற்கு கீழே தள்ளப்படுவதில்லை. அதுதான் தர நிலையாக இருக்கவேண்டும்-யாரும் அந்த குறைந்த பட்ச நிலையின் கீழ் விழக்கூடாது.

வளர்ந்த நாடுகளுக்கு மிகவும் சவாலாக இருக்கும் இலக்கு சுற்று சூழலாக உள்ளது. ஏனென்றால், ஒரு நாட்டை வளர்ப்பதற்கான பாரம்பரிய வழி, முதலில் இலகுவானவற்றை சுத்தம் செய்வதாகும். காடுகள், காலநிலை மாற்றங்கள், பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை அகற்றுவது போன்ற செயல்களின் மூலம் நாம் பெரும் சேதத்தை உண்டாக்கியுள்ளோம். எனவே நமது இலக்கு எல்லோருக்கும் நிலையான ஆற்றல் என்பதை நோக்கி நகர வேண்டும்.

*நிலையான வளர்ச்சிக்கு ஏன் பாலின சமத்துவம் மிகவும் முக்கியமானது?*

பெண்கள் கல்வி பெறும் போது, முழு குடும்பமும் பயனடைகிறது. ஒரு பெண் கல்வி பெறும் ஒவ்வொரு கூடுதல் வருடமும், அவள் குழந்தை கூடுதலாய் ஐந்து வருடங்களுக்கோ அல்லது அதற்கும் அப்பால் வாழும் சிறந்த வாய்ப்பு கிடைக்கும் என்று ஆராய்ச்சி சான்றுகள் தெரிவிக்கின்றன. எனவே, சாதாரணமாக, குழந்தைகளின்

எளிய ஆயுள் எதிர்ப்பார்ப்புக்குக்கூட பெண்கல்வி முக்கியமானது.

ஒரு பெண் கல்வி பெறும் போது அவள் குழந்தைகள் குறித்த அவளது அபிலாஷைகள் அதிகரிக்கிறது.

ஒரு பெண் தனது கல்வியை முடிக்கும் தருணத்தில், திருமண வயதும், அவள் முதல் குழந்தை பெறும் வயதும் தாமதிக்கப்படும். பாலின சமத்துவம், கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்கு சமமான வாய்ப்பு, சுயமாக சம்பாதிக்க முடிந்து பொருளாதாரத்தை பெருக்குவது போன்றவை வேறு எவரையும் விட பெண்களுக்கு நேர்மறையாக நன்கு பலனளிக்க கூடியது.

*ரோட்டரிவாசிகள் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் ஒரு அமைதியான, நிலையான மற்றும் சமமான உலகத்தை கொண்டு வருவதற்கான சிறந்த மற்றும் மிகப் பயனுள்ள வழிமுறை எது?*

நான் உணவு பாதுகாப்பு பிரச்சனை பற்றி பார்க்கையில், பருவநிலை ஒரு பெரிய சவாலாக உள்ளது. நான், ஆப்பிரிக்காவின் வறண்ட நாடுகளில் பயணம் செய்யும்போது, சிறிய பயிர் விவசாயிகள், இப்போதெல்லாம் எப்போது பயிர் செய்வது என்றே எனக்கு தெரியவில்லை என்று சொல்ல கேட்டிருக்கிறேன். எப்போது மழை வரும் என்றே கணிக்க முடியாது. நீங்கள் ஒரு வாழ்வாதார விவசாயி ஆக இருந்து மழை வரவில்லை என்றால், அதுவும் நீங்கள் உங்கள் விதைகளை விதைத்து விட்டீர்களானால், உங்களுடைய கடன் மொத்தத்தையும் பயன் படுத்தியிருந்தீர்களானால் நீங்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பீர்கள். அப்போது தான் பசிப்பிணி ஆரம்பமாகும். 2016ம் ஆண்டுதான் முதன்முதலில் 'பசிபிணியில்' உள்ள மக்கள் எண்ணிக்கை அதிகரித்த வருடமாக இருந்தது .

ரோட்டரி, சர்வதேச அளவில் கவனம் செலுத்தும் வகையில், இயற்கையின் மாறுபாடுகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். பயிர் காப்பீடு போன்ற திட்டங்கள் உள்ளன; பல மக்கள், தாவர நீர்ப்பாசனத்தில் புதிய முறைகளைப் பயன்படுத்தவில்லை; சில சமுதாயங்கள் நாடோடிகளாக இருப்பதிலிருந்து பயிர் வளர்ப்புக்கு மாற வேண்டும். இது ஒரு புறம் இருக்க, மற்றொரு பக்கத்தில், வெள்ளத்தினால் கடல் மட்டம் அதிகரித்துள்ளது. மக்களின் சிறந்த வாழ்வைப் பாதுகாப்பதற்கான நீண்ட கால திட்டத்தின் ஒரு பகுதியாக பாதகமான நிகழ்வுகளுக்கு நம் விரித்திரனை பெருக்க வேண்டும்.

*ஐ.நா. செக்ரேட்டரி ஜெனரல் பாத்திரத்திற்கான வலுவான தேர்வில் நிற்கும் வேட்பாளர்களில் ஒருவராக நீங்கள் இருந்தீர்கள். உங்கள் பாலினம், தேர்தல் முடிவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று நினைக்கிறீர்களா?*

நான் ஒரு பெண்ணாக இருப்பதால் எனக்கு வாக்களியுங்கள் என்று நான் யாரையும் ஒருபோதும் கேட்டதில்லை. ஆனால் அதே சமயம் அது எனக்கு எதிராக செயல்படுவதையும் நான் விரும்பவில்லை. எனது அனுபவத்தில் என் நாடு - நியூஸிலாந்தைப் பற்றிய பெரிய விஷயம் என்னவெனில், நீங்கள் அயராது உழைத்தால், எந்தத் தடைகளையும் தாண்டிவிடலாம் என்பதே. ஐ.நா., இதுவரை பெண்களுக்கு அதை சாத்திய மாக்கவில்லை. அடுத்த பொதுச் செயலாளர் ஒரு பெண்மணியாக இருப்பார் என்று நான் நம்புகிறேன், தகுதியுள்ள வேட்பாளருக்கு நான் ஆதரவளிப்பேன்.■

*டொரான்டோ மாநாட்டில் போலியோ இல்லாத உலகிற்கு சர்வதேச சேவை விருதை RC Madras D 3232 மாவட்டத்தை சேர்ந்த ரொட்டேரியன்களான SN ஸ்ரீகாந்த் மற்றும் NK கோபிநாத்துக்கு வழங்கப்பட்டது. 2014ம் ஆண்டு ஸ்ரீகாந்த் சங்கத் தலைவராக இருக்கும் போது போலியோ ஒழிப்பு ஜோதி தொடங்கப்பட்டது. அப்போது கோபிநாத் திட்ட தலைவராகவும் இருந்தார்.*





*ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜேவிடம் PDG அனில் அகர்வால், D 3054, சமுதாய சேவைக்காக விருதினை பெற்றார். அவர் இது வரை 80 முறை இரத்த தானம் செய்துள்ளார்.*

# பார்வையற்ற மாற்று திறனாளிகளுக்கு RYLA

ரோட்டரி செய்திக் குழு




எனக்கு அனைத்து நிகழ்வுகளும் பிடித்திருந்தது மற்றும் இங்குள்ளவர் களுக்கு நான் என்ன அனுபவிக்கிறேன் என்றும் புரிந்திருக்கிறது. அவர்களுடன் என்னால் சுலபமாக நட்பாக இருக்க முடிகிறது, ஏனென்றால் என்னால் என்ன இயலாதென்பதை அவர்கள் அவர்களால் என்ன இயலாது என்பதை கொண்டு புரிந்து கொண்டிருக்கிறார்கள், என்று ரோட்டரி சங்கம் சில்க் சிட்டி ராமநகரா, D 3190 ஒருங்கிணைத்த பார்வையற்ற மாற்று திறனாளிகளுக்கான RYLA நிகழ்வில் பங்கெடுத்துக் கொண்ட 12வயது கிரிஷ் கூறினார் .

நிகழ்வைப் பற்றி சங்கச் செயலாளர் அனுராதா கூறுகையில், எங்கள் நோக்கம் அவர்களை அவர்களின் அடைக்கப்பட்ட வகுப்பறைகளில் இருந்து வெளிக்கொண்டு வருவது, எனவே இங்கிருந்து வெளியேறும்போது அவர்கள் தொலைந்து போனவர்களாகவோ திசை தெரியாதவர்களாகவோ ஆகமாட்டார்கள். பெங்களூருவுக்கு அருகில் ராமநகராவில் உள்ள பி.ஜி. பார்வையற்றோர்களுக்கான பள்ளியில் ஒருங்கிணைக்கப் பட்ட இந்த RYLA நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் P ரமேஷ், IPS, தலைமை யில், சங்கத்தலைவர் ராகவேந்திரா R மற்றும் RYLA தலைவர் R ஷஷிதர் ஆகியோரின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது. RYLA ஆசிரியர் தினத்தன்று நடத்தப்பட்டது. அப்பள்ளியின் பார்வையற்ற வர்களுக்கான ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். 20 ரோட்டரியன்களுடன் SBIயின் அதிகாரியும் பள்ளியின் முன்னாள் மாணவருமான சந்தேஷ் மற்றும் எனேபில் இந்தியா, மாற்றுதிறனாளிகளுக்கான தன்னார்வக் குழு ஆகியோர் இணைந்து தொடுகை, வாசம், சுவை, பார்வை மற்றும் ஒலி போன்ற உணர்வுகளை தூண்டும் செயல்கள் மற்றும் விளையாட்டுக்களை மாணவர்களுக்காக நடத்தினர். மாணவர்கள் செயலூக்கம் மற்றும் தலைமைக்கான திறமைகள் போன்றவற்றை புரிந்துகொள்ளும் வகையில் வகுப்புகள் மற்றும் விளையாட்டுகள் அவர்களுக்கு வழங்கப் பட்டன.

சங்கத்தின் இளைஞர் சேவை இயக்குனர் அமிர்தராஜ் சிவா இவ்வாறு கூறினார், சாதாரண மாணவர்களுக்கு RYLAவை ஒருங்கிணைப்பது மிக எளிது, ஆனால் நாங்கள் சில புதிய விஷயங்களை செய்ய விரும்பினோம். அதைவிட, ஒரு நாள் முழுக்க இந்த மாணவர்களுக்காக உற்சாகமான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தது மிகுந்த மன நிறைவை தருகிறது. ■

# ஒரு பெண் தலைவர் மதிப்புமிக்க பெருநிறுவனக் கூட்டுக்களை உருவாக்குகிறார்

ஜெய்ஸ்ரீ

கல்பனா ஸ்ரீலலிதா பிரபாகரனின் தலைமையில் RC பெங்களூரு வைட்ஃபீல்ட் D 3190 கடந்த ஆண்டு பெங்களூருவைச் சுற்றியுள்ள சமூகங்களை மாற்றுவதற்காக பல்வேறு நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

நகரத்திலிருந்து சுமார் 7 கி.மீ. சங்கத்தினரால் தத்தெடுக்கப்பட்ட கிராமமாகிய நாகநாயக்கன கோட்டேவில் ஒரு தண்ணீருக்கான ATM நிறுவப்பட்டதே மிக சமீபத்திய திட்டமாகும். இந்த வசதி ஐக்கிய ராஜ்ஜியங்களை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனமாகிய டெஸ்கோவால் முழுமையாக நிதி வழங்கப்பட்டு, வாட்டர்லைஃப் என்னும் சமூக நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டது. 60,000 டாலர் விலையுள்ள இயந்திரம் சுமார் 10,000 கிராம மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குகிறது.

இந்த தானியங்கு நீர் வழங்கும் இயந்திரம் ப்ரீபெய்ட் கார்ட் அடிப்படையில் வேலை செய்கிறது, பீரிபெய்டு கார்டை ஸ்வைப் செய்வதன் மூலம் 1, 5 அல்லது 20 லிட்டர் தண்ணீரை மக்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்தச் சேவை 5 லிட்டருக்கு ரூ.1.70 மற்றும் 20 லிட்டருக்கு 17 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. ஒரு மணி நேரத்தில் அதிகபட்சமாக 1,000 லிட்டர் இந்த ATMன் மூலம் விநியோகிக்கப்படுகிறது. நீரின் தரமானது ஒரு தொலைநிலை கண்காணிப்பு முறையால் சோதிக்கப்படுகிறது மற்றும் விற்பனையாளர் இந்த அலகை 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பார் பின்னர் கிளையால் நிறுவப்பட்ட RCC இதற்குப் பொறுப்பேற்கும்.

இதைத் தவிர, கிராமத்திற்கு மழை நீர் அறுவடை அமைப்பை வழங்குவதற்காக சங்கம் ஒரு சமூக நிதியை அமைத்துள்ளது.

### பெருநிறுவனங்களை பங்கேற்கச் செய்தல்

சமூக சேவை திட்டங்களில் முதலீடு செய்வதற்கு நிறுவனங்களை ஈர்ப்பதற்காக கல்பனா அவர்களிடம் நன்கு திட்டமிடப்பட்ட மற்றும்



*கல்பனா ஸ்ரீலலிதா (இடது) தண்ணீர் ATM தொடக்க விழாவில் மற்ற ரொட்டேரியன்களுடன்.*

முறையான அணுகுமுறை உள்ளது. “இது ஒரே இரவில் நடக்காது; ரோட்டரி ஒரு நம்பகமான பங்குதாரர் என்ற நம்பிக்கையை அவர்கள் பெறவும் அவர்களுடன் ஒரு நல்லிணக்கமானஉறவை உருவாக்கவும் பல ஆண்டுகள் ஆகும்,'' என்று அவர் கூறுகிறார். சங்கத்தின் தலைவர்-வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவர் பல பெரு நிறுவன தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். “நான் தலைவராகப் பொறுப்பேற்பதற்குள், அவர்களோடு தொடர்பு கொள்ள எனக்கு இரண்டு ஆண்டுகள் கிடைத்தது.''

கடந்த அக்டோபரில், கல்பனா ஒரு பெருநிறுவன கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார், அதில் 100 நிறுவனங்கள் கலந்து கொண்டன, இதில் 42 நிறுவனங்கள் ரோட்டரி-பெருநிறுவன கூட்டிற்கு ஆர்வம் காட்டின. அவரும் அவரது குழுவும் CSR மேலாளர்களை சந்தித்து ரோட்டரியின் ஐந்து கவனக் குவியப் பகுதிகளை பரிந்துரைத்தனர். “நாங்கள் சமாதானம் மற்றும் முரண் தீர்மானத்தை சுற்றுச்சூழல் திட்டங்களுடன் மாற்றீடு செய்தோம். நாங்கள் நிறுவனங்களை குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் முன்னாள் தலைவரை நியமித்து மூளைச்சலவை செய்து, சேவைத் திட்டங் களுக்கான யோசனைகளைக் கொண்டு வருவதற்கும் வழிவகுத்தோம்,''என்கிறார் கல்பனா.

சங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட 42 நிறுவனங்களில், 22 நிறுவனங்கள் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இந்த நிறுவனங்கள் தயாரிப்பு மற்றும் சேவையை சார்ந்தவையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. “இந்த நிறுவனங்களுடன் திட்ட-குறிப்பு ஒப்பந்தங் களை நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம். ஒவ்வொரு வாரமும் திட்டத்தின் புதுப்பிப்புகளை நாங்கள் வழங்குகிறோம், ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு தொகுக்கப்பட்ட அறிக்கையையும் பகிர்ந்து கொள்கிறோம்.”

இதன்மூலம், மெர்சிடிஸ் பென்ஸுடன் இணைந்து கிளப் அதே கிராமத்தில் ஒரு விளையாட்டு மைதானத்தைக் கட்டியது,மேலும் ராஜமனே டெலக்ட்ரிக் கிராமத்தில் சூரிய விளக்குகளை நிறுவ உதவியது. டெஸ்கோ மற்றும் BBMP உடன் இணைந்து, பெங்களூரில் ஒரு பல்லுயிர் பூங்காவை உருவாக்கும் திட்டம் உள்ளது.

நகரில் மூன்று அரசு பள்ளிகளை புதுப்பிப் பதற்கான மற்றொரு சுவாரஸ்யமான மூலோ பாயத்தை கல்பனா பகிர்ந்து கொள்கிறார், அவற்றில் ஒரு பள்ளியில் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கான சூரிய பேனல்களை டெஸ்கோ வழங்கும் போது, ஷ்னீடர் எலக்ட்ரிக் மீன்வசதியாக்கத் திற்கு உதவுகிறது ஒரு பெயிண்ட் உற்பத்தி பன்னாட்டு நிறுவனமாகிய ஆஸ்கோநோபல், பள்ளிகளுக்கு பெயிண்ட் களை வழங்கும்.

“பல பங்கேற்பாளர்கள் இருக்கும்போது, நாங்கள் இன்னும் அதிகமான பள்ளிகளை சேர்த்துக் கொள்ள முடியும், மற்றும் அவர்களின் செலவுகள் பகிரப்படுவதால், பெருநிறுவனங்களும் சந்தோஷமாக இருக்கும்'' என்று அவர் கூறுகிறார். பெயிண்ட் செய்வதற்கு, சில பன்னாட்டு நிறுவனங்களின் ஊழியர்களை அணுகியதாகவும், அவர்கள் வார இறுதியில் பள்ளிக்கு பெயிண்ட் செய்ய மகிழ்ச்சியாக ஒப்புக்கொண்டதாகவும் கல்பனா கூறுகிறார். “அடோப், GE போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் ஊழியர்களுக்கான ‘ஈடுபாடு திட்டத்தை’ கொண்டுள்ளன, அதற்காக ஊழியர்கள் பணி நேரத்திற்குப்பிறகு செய்யும் வேலைகளுக்காக அவர்களுக்கு நன் மதிப்புப் புள்ளிகள் கொடுக்கப்படுகின்றன.'' இது அவர்களுக்கு மன அழுத்தத்தைப் போக்கும் ஒரு வழியாகும்,” என்று அவர் கூறுகிறார்.

இதுபோன்ற ஸ்மார்ட் நகர்வுகள் மூலம் கிளப் ரூ.8 லட்சம் நிதிய மூலதனத்தை உருவாக்கியுள்ளது.

## உதவிகள் இல்லை

கல்பனா கையூட்டு அல்லது லஞ்சம் கொடுக்கக் கூடாது என்னும் தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்தார்; பல சோதனை யான சமயங்களையும் சந்தித்தார். ஒரு பள்ளியில் பழுதுபார்க்கும் பணிக் கான அனுமதியில் கையொப்ப மிட ஒரு பஞ்சாயத்து அதிகாரி ஒருவர் பணம் கேட்ட சந்தர்ப்பத்தை அவர் நினைவு கூர்கிறார். அவருடன் உரையாடும் போது, அவருடைய மகன் நகர கல்லூரியில் அனுமதிக்கப்பட்டதை கண்டுபிடித்தார். அவர் ஒரு கிராமப்புறத்திலிருந்து நகரத்திற்கு சென்று வாழும் பொழுது, அவரது மகனுக்கு பொருத்தமற்ற உணர்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்று நினைத்தார். கல்பனா கல்லூரித் தலைவருடன் பேசினார், “இந்த மாணவருக்கு எந்தவொரு ஆதாயத்தையும் வழங்குவதற்காக அல்ல, ஆனால் அவர் அங்கே நல்லபடியாகப் பொருந்துவதைப் பார்க்க. அதிசயம், இது பல மாயாஜாலங்களைச் செய்தது!

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு பெருநிறுவனத் தலைவர் ஒரு திட்டத்திற்கான தனது நிறுவனத்தின் ஆதரவுக்கு தனது தயாரிப்புக்காக சந்தை ஆய்வு ஒன்றை செய்ய விரும்பினார். “மாணவர்களின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்கள் கணக்கெடுப்பு நடத்தக்கூடிய கல்லூரியுடன் நான் அவரை தொடர்புகொள்ளச் செய்தேன்.'' கல்லூரி மற்றும் நிறுவனம் இருவருக்கும் வெற்றிகரமான வாய்ப்பாக அமைந்தது, கல்லூரிக்கு இது போன்ற பணிகள் கிடைத்தன மற்றும் நிறுவனம் வளாகத்தில் ஆட்சேர்ப்புக்காக கையெழுத்திட்டதுடன் மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு வாய்ப்புகளையும் அளித்ததது.

“என் குழு சங்கக் கட்டணத்தை விட அதிகமாக செலவு செய்வதை நான் விரும்பவில்லை; அவர்களிடமிருந்து எதிர்பார்த்தது எல்லாம், திட்டத்தளங்களில் திட்டங் களை ஏற்பாடு செய்யவும் மேற்பார்வையிடவும் உடல் ரீதியான ஆதரவை மட்டுமே,''என்கிறார் கல்பனா. இவர் IT தொழில் முனைவோர் ஆவார். இந்த ஆண்டு அவருக்கு அடுத்தபடியாகப் பதவி ஏற்றவரும் இதே பணியைத் தொடர்கிறார், என்றார்.■

# நாஸாவில் சென்னை மாணவர்கள்

கிரண் ஜெஹரா

சென்னையைத் தாண்டி வேறு எந்த ஊருக்குமே செல்ல வாய்ப்பு கிடைக்காத மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் எட்டு மாணவர்கள் அண்மையில் அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையத்துக்குச் சென்று திரும்பியுள்ளனர். ஹூஸ்டனில் உள்ள ஜான்ஸன் விண்வெளி மையத்தில் அவர்கள் சென்று பார்வையிட வாய்ப்பு அளித்தது கிழக்கு சென்னை ரோட்டரி சங்கம். D 3232 ஆண்டுதோறும் நடத்தும் நிகழ்ச்சியான 'பறப்பதற்கான சிறகுகள்' (Wings to Fly) என்ற திட்டத்தின் கீழ் அவர்கள் பயணம் மேற்கொண்டனர்.

ரோட்டரி சங்கம் சில போட்டி களைப் பள்ளி மாணவர்களுக் காக நடத்தி, அதில் வெற்றி பெற்றவர்களுக்கு இத்தகைய வெளிநாட்டுப் பயண வாய்ப்பை அளித்து வருகிறது. கடந்த இரு ஆண்டுகளில் மலேசியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு சென்னை மாணவர்கள் பயணம் செய்துள்ளனர். இந்த ஆண்டு, R கோபிநாத், D சுபாஷ், I ஆதவன், D காவியாஞ்சலி, G யோகேஷ், ரேஷ்மா குமாரி, S ராஜ்குமார் ஆகிய மாணவ, மாணவியர் ரோட்டரி நடத்திய அறிவியல் திறனுக்கான பல்வேறு கட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றனர். சென்னை கார்பரேஷன் பள்ளி மாணவர்களுடன் கூடுதல் கல்வித்துறை அதிகாரி ரோஹினி அவர்களுடன் பள்ளி முதல்வர், கிழக்கு சென்னை ரோட்டரி அமைப்பினரும் இந்த நாஸா பயணத்தில் இடம் பெற்றனர். அவர்கள் ஹூஸ்டன், சான் ஆன்ட்ராஸ் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். இந்தப் பயணத்தை முடித்துவிட்டு திரும்பியபோது, ஏதோ சந்திரனுக்கே சென்று திரும்பிய உணர்வுதான் ஏற்பட்டது என்று அந்த மாணவர் குழுவில் இடம்பெற்ற ரேஷ்மாகுமாரி கூறினார்.

இதற்காக ரோட்டரி நடத்திய போட்டிகளில் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 4000 பேர் பங்கேற்றனர். கனவிலும் கூட நினைத்துப் பார்க்காத இடத்துக்குப் போய் வந்திருக்கிறோம். இதற்கு ரோட்டரி மட்டும்தான் காரணம்.

### தன்னம்பிக்கை வளர்ப்பு

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதத்துக்கான தேசிய கல்வி நிறுவனத்தை (STEM Education Foundation) சேர்ந்த வல்லுநர்களின் வழிகாட்டுதலின் பேரில் போட்டி யாளர்களில் 30 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இறுதி கட்டத்தில் நடைபெற்ற இதற்காக நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் அவர்களுக்கு சமுதாயத்தில் எதிர்கொள்ளும் பல ச வால்களை சமாளிப்பதற்கான செயல் விளக்க மாதிரிகளை எப்படி தயாரித்து வழங்குவது என்று அறிவுறுத்தப்பட் டது. இந்த முகாம் மாணவர்கள் தங்களது அறிவியல் மாதிரிகளை



*சென்னை கார்பரேஷன் பள்ளி மாணவர்களுடன் கூடுதல் கல்வித்துறை அதிகாரி ரோஹினி.*

எப்படி விளக்குவதுடன் அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் வகையிலும் நடத்தப்பட்டது. உடல்மொழி, தகவல் தொடர்புத் திறன், செயல் விளக்கஆற்றல், பிரச்சினைகளைத் தீர்த்தல், சர்வதேச அறிவியல் கண்காட்சிக்கு ஏற்ப மாதிரிகளை வடிவமைத்தல், எனப் பலதரப்பட்ட பயிற்சி கள் அளிக்கப்பட்டன என்று ஸ்டெம் நிறுவனத்தின் சென்னைப் பிரிவு நிறுவனர் N நாகலட்சுமி தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகர மாநகராட்சி ஆணையர் கார்த்திகேயனின் கம்பீரமான தோற்றம், கணீரென்ற குரலைக் கேட்டால் எல்லோரும் நடுக்கம் கொள்வர். இந்த திட்ட மாதிரிகள் குறித்து அவர் 6வது வகுப்பு மாணவி காவியாஞ்சலியைக் கேள்விகளால் குடைந்த போது, அவள் திணறிப் போவாள், தடுமாறுவாள் என்று நினைத்தேன். ஆனால், ஒவ்வொரு கேள்விக்கும் அவள் நிதானமாக, தெளிவாக பதிலளித்தபோது, அவளது தன்னம்பிக்கையும் குறிப்பிட்ட பொருள் குறித்த சரியான புரிதலையும் அறிந்துகொண்டேன். இந்தச் சிறுவர்களுக்காக நாங்கள் ஏற்பாடு செய்த திட்டம் குறித்து நாங்கள் பெருமைப்பட இது இன்னொரு சந்தர்ப்பமாக அமைந்தது என்றார்.




ஹூஸ்டன் நகரில் இந்த மாணவர்களுக்கு கிழக்கு சென்னை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயந்தி கோவிந்தனின் உறவினர் ரேவதி வாசுதேவன் விருந்தளித்தார்.

சான் ஆன்டானியோ இந்த மாணவர்களுக்கு கௌசிக் சுப்பிரமணியம் என்பவர் விருந்து அளித்தார். அவர் அனுஜா என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறார். அவர் சான் ஆன்டோனியோ, டெக்ஸஸ், சென்னை ஆகிய நகரங்களை சகோதர நகரங்களாகக் கொண்டு இணைத்து மேம்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறார்.

நாங்கள் விண்வெளி, கோள்கள், வானியல் ஆகியவை பாடப் புத்தகங்களின் மூலம் அறிந்து கொண்டோம். ஆனால், செயற்கைக் கோள் போன்றவற்றின் மாதிரியையும் அவை எப்படி செயல்படுகின்றன என்பதையும் நாஸா விண்வெளி ஆய்வு மையத்தில் நேரடியாகக் காண்போம் என்று கற்பனை கூட செய்யவில்லை என்றார் ராஜ்குமார்.

காவியாஞ்சலி, நாஸா விண்வெளி வீரர் டேவிட் C. ஹில்மர்ஸுடன் நேரடியாக விவாதித்தைத் தனது பயணத்தில் சுவையான அனுபவமாகக் கருதுகிறார்.

பாய்லோர் மருத்துவக் கல்லூரிக்குச் சென்ற மாணவர்கள், அங்கு பல்வேறு ஆய்வகங்களைச் சுற்றிப் பார்த்தனர். அக்கல்லூரியில் மாணவர்களே செயற்கைக் கால்களைத் தயாரிப்பது அற்புதம். இக்கல்லூரி மாணவர்கள் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் கண்ணி வெடியில் கால்களை இழந்தவர்களுக்கு அந்தக் கல்லூரி ஏராளமான செயற்கைக் கால்களைத் தயாரித்து வழங்கியுள்ளனர் என்று ராஜ் குமார் கூறினார்.

நாஸா பயணம் சென்ற மாநகராட்சி மாணவர்கள் அறிவியலில் ஆர்வம் உள்ளவர்கள். அவர்களது கனவுகளை நனவாக மாறுவதற்கு ஊக்கமளிக்கிறோம். அதன் அடிப் படையில்தான் அறிவியல் ஆய்வு இடம், இயற்கை வரலாற்று அருங் காட்சியகம் ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு ஏற்ப பயணத் திட்டம் வகுக்கப்பட்டது என்று இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான VA ரமேஷ் கூறினார்.

இந்த மாணவர்களிடையில் ஆர்வத்தைத் தூண்டவும் உழைத்தால் எதுவும் சாத்தியம் என்பதை உணர்த்துவதும் தான் எங்களது குறிக்கோள் என்றார் நாகலட்சுமி.■

# பள்ளிகளில் சுகாதார வசதிகள்

V முத்துக்குமரன்

தேசிய தலைநகர் பகுதி (NCR) 11 பள்ளிகளில் மாணவர்களின் நடத்தையில் தீவிர மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில், மத்திய சுற்றுச் சூழல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன், அசோக்நகர், ஃபேஸ்-1ல் இருக்கும் நிகம் பிரதிபா வித்யாலயா பள்ளியில் பல்வேறு வசதிகளை தொடங்கி வைத்ததன் மூலம், டெல்லி அசோகா ரோட்டரி சங்கம் D 3012, அமல்படுத்திய WinS திட்டத்துக்கு பெரிய ஒரு ஊக்கம் கிடைத்துள்ளது.

செப்டம்பர் மாதம் வரை WinS வசதிகளை நான்கு பள்ளிகளில் - நோய்டா மற்றும் டெல்லியில் தலா இரண்டு வீதம் - சங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் பிற பள்ளிகளில் 75% பணி இதுவரை முடிவடைந்துள்ளது. இவைகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு விட்டால் மாணவர்களின் சுகாதார வழக்கங்களில் தீவிர மாற்றம் ஏற்படும் என்கிறார் சங்கத் தலைவர் அஜய் அகர்வால்.

நிகம் பிரதிபா வித்யாலயாவில், பாலின ரீதியாக வேறுபடுத்தப்பட்ட கழிவறைப் பகுதியை அறிமுகப் படுத்தியது மட்டுமின்றி, புழக்கத்தில் இருக்கின்ற மூன்று பகுதிகளும் மறு சீரமைப்பு செய்தனர். இதுவரை, நான்கு பள்ளிகளில் சுமார் ரூ.30 லட்சம் வரை செலவு செய்துள்ளோம். டெல்லி, நோய்டா, சோனிபட் (ஹரியானா) பகுதியில் உள்ள ஏழு பள்ளிகளில் செயல்படுத்துவதன் மூலம், 11 பள்ளிகளில் உள்ள 5,000 மாணவர்கள் பயன் பெறும் வகையில் சர்வதேச நிதி உதவி திட்ட உதவியுடன் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது என விளக்கினார் அகர்வால்.



*மத்திய அமைச்சர் Dr ஹரஷ் வர்தன், PDG ரமேஷ் அகர்வால் மற்றும் NDMC மேயர் ஆதேஷ் குப்தா பள்ளிக்குழந்தைகள் கை கழுவும் முறையை பார்வையிடுகின்றனர்.*

### ஒரு மாடல் பள்ளி

மேலும் ஒரு படி மேலே சென்று, நிகம் பிரதிபா வித்யாலயா பள்ளியை ஒரு மாடல் WASH மையமாக ஆக்கும் நோக்கில் “நடத்தைகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவும் திறனை மேம்படுத்தும் நடவடிக்கை களை கைகொள்ளவும், NGO உலக விஷன் இந்தியா அமைப்பை சங்கம் இணைத்துக் கொண்டுள்ளது. என்கிறார் PDG ரமேஷ் அகர்வால், செயலாளர், வடக்கு மண்டலம், ரோட்டரி இன்டியா WinS, மற்றும் RI WinS குழு உறுப்பினர் (2016-20).

மதிய வேளை உணவுக்கு முன்னால், ஒரு ஆசிரியர் மேற்பார்வையில் மாணவர்கள் குழுமங்களாக ஒருவர் எதிரே ஒருவர் கைகளை அலம்புவதை “குழும கையலம்பல்” உறுதிப்படுத்துகிறது - இந்நிலையில், ஒருவரை ஒருவர் நோக்கி இருக்கும்போது, பரஸ்பரம் பார்த்துக் கொள்ளலாம், ஆக்கபூர்வ செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாம், கையலம் பலை பற்றி பாடி கையலம்பல் செயலை மகிழ்ச்சியுடன் மேற் கொள்ளலாம் என்கிறார் அகர்வால்.

நடத்தை மாற்றத்துக்கு ஒரு வலுவான ஆலோசனையாக சோப் மூலம் கையலம்புவது குறித்து கற்றுக் கொண்ட பாடங்களை தத்தம் வீட்டுக்கு சென்று பெற்றோருக்கும் உடன் பிறந்தோர் மற்றும் பெரியோருடன்

பகிர்ந்தும் கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டார்.

### ரோட்டரிக்கு மத்திய அரசு ஆதரவு தரும்

அரசு மட்டுமே நோய்களை ஒழிக்கும் முயற்சியில் வெற்றி பெற முடியாது; பள்ளி மற்றும் சமூக மட்டத்தில் ரோட்டரியின் முயற்சிகள் மூலம் மாணவர்களுக்கு சிறப்பான ஆரோக்கியம் பெறுவதை இது உறுதி செய்யும் என தனது உரையில் மத்திய அமைச்சர் டாக்டர் வர்தன் குறிப்பிட்டார்.

WinSக்காக குறைந்தது 50 பள்ளிகளை டெல்லியில் உள்ள ரோட்டரி சங்கங்கள் தத்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி இதற்காக மத்திய அரசு மற்றும் நகரசபைக் கழகம் ஆகியவற்றின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்றார் அகர்வால். மத்திய மனித வளம் மற்றும் மேம்பாடு அமைச்சரகத்தின் ஸ்வச் வித்யாலயா திட்டத்தின் வெற்றிக்கு ரோட்டரியை பாராட்டினார் UNICEFன் WASH நிபுணர் ராம் சந்திர சிங்.

ரோட்டரிக்கு நன்றி தெரிவித்து, பள்ளி தலைமை ஆசிரியை வனிதா பஜாஜ் கூறுகையில், பள்ளி வருகைகள், பள்ளி சேர்க்கை, கல்வித் தரம் போன்றவற்றை மேம்படுத்தி பள்ளியிலிருந்து நீங்கிக் கொள்வதை குறைத்து குடிநீர் சார்ந்த நோய்களை தடுப்பதன் மூலம் WinS திட்டம் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவது உறுதி என்றார்.

நோய்டாவின் பூர்வ மத்யமிக் வித்யாலயா பள்ளியில் WinS வசதிகளை ஏற்படுத்திய பின், சிறப்பான கழிவு வசதிகளால் கவரப்பட்ட பெற்றோர்கள் மூலம், இருபாலாரும் படிக்கும் இப்பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை 90லிருந்து 270 ஆக அதிகரித்துள்ளது. WinS விழாவில் மத்திய அரசு அதிகாரிகள், நகரச பை உறுப்பினர்கள், யூனிசெஃப் பிரதிநிதிகள் மற்றும் பெரிய அளவில் ரோட்டரியன்கள் கலந்து கொண்டனர்.

---

# சேலம் ரோட்டரியன்கள், பட்டயினர் ஆதரவற்றோர் இல்லத்துக்கு உதவி

ரோட்டரி செய்திக் குழு




*RC சேலம் யங்டவுன் தலைவர் D ஹரி பாஸ்கர், பட்டாயாவில் அனாதை இல்லத்தில் மற்ற ரோட்டரியினருடன்.*

பாங்காங்க் அருகே உள்ள பட்டயாவில் புதிய அலுவலக நிர்வாகிகளின் நியமனத்தை சேலம் யங் டவுன் ரோட்டரி கிளப், D 2982 கண்டது. ஜோமிடீன் பட்டயா ரோட்டரி கிளப் தலைவர் அளித்த ஆலோசனை பேரில், பட்டயாவின் ஜிங் ஜாய் என்ற ஆதரவற்றோர் இல்லத்துக்கு 18 பேர் கொண்ட குழு சென்று, இல்லத்துக்குத் தேவையான மளிகை மற்றும் இதரப் பொருள்கள் வாங்கிக்கொள்வதற்கு ரூ.50,000, அதன் மேலாளருக்கு வழங்கினார். உள்ளூர் கிளப்புகளின் தலைவர்களும் D 3340 இன் கடந்த கால கவர்னர்களும் வருகை தந்த ரோட்டரியன்களுடன் கூடினர்.

9 முதல் 18 வயதிலுள்ள 150 பேருக்கு தங்கும் வசதி, உணவு மற்றும் கல்வி வசதிகளைத் தருகிறது. இந்த ஆதரவற்றோர் இல்லத்துக்கு கழிவறைப் பகுதி ஏற்படுத்தித் தர அதன் மேலாளர் குன் பிங்டா நமது உதவியை நாடியதால் அதனை செயல் படுத்தவும் நாம் முடிவு செய்துள்ளோம் என்றார் கிளப் தலைவர் ஹரி பாஸ்கர்.

இந்த ஆதரவற்றோர் இல்லத்துக்கு வருகை தரும் திட்டம் இரண்டாவது அயல்நாட்டு திட்டமாகும், முதல் திட்டத்தில் ஸ்ரீலங்கா உள்நாட்டுப் போரினால் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி வசதிகள் வழங்கப்பட்டன.

உள்நாட்டுப் போர் தொடர்ந்து ஆறு வருடங்களுக்குப் பிறகு, 2015ம் ஆண்டில் அயல்நாட்டு குழுக்களுக்கும் உதவி அமைப்புக்களுக்கும் ஸ்ரீலங்கா அரசு அனுமதி தந்த பின், சார்ட்டர் தலைவர் C தியாகராஜன் தலைமையில் நான்கு கிளப்புகளிலிருந்து 25 பேர் கொண்ட மாவட்டக் குழு, வடமாகாணத்தின் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு சென்றது. உள்ளூர் MPயான ஈசுவரபாதம் சரவணபவன் வழிநடத்தலுடன், ரூ.1 லட்சம் மதிப்புடைய பள்ளி சீருடைகளையும், பாடபுத்தகங்களையும் 300 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினோம். DGE R வாசுவும் குழுவில் இடம் பெற்றிருந்தார் என டிஸ்ட்ரிக்ட் சேர் ஆஃப் பப்ளிக் இமேஜ் (District Chair of Public Image) ஆக உள்ள தியாகராஜன் நினைவு கூர்ந்தார்.

சர்வதேச நிதி உதவியுடன், இவ்வாண்டு சேலம் அருகே உள்ள மல்லியக்கரை கிராமத்தின் ஒரு உயர்நிலைப் பள்ளியில் பெண்களுக் கென்று கழிவறைப் பகுதியை ஏற்படுத்தும் முயற்சியில் கிளப் இறங்கியுள்ளது என்றார் பாஸ்கர். ■

# THE ANNOTATED GUIDE TO ENDING POLIO

**Diana Schoberg**

As the number of polio cases approaches zero, the challenges facing Rotary and its partners in the Global Polio Eradication Initiative are changing. We still need to reach every child with the polio vaccine — and we're using innovative strategies to do that, in spite of geopolitical uncertainties. But that's only one part of our job. We're tackling vaccine-derived poliovirus, which can begin to spread in places where vaccine coverage is low. We're becoming disease detectives, following up on any shred of evidence that wild poliovirus might still be circulating. And we're fine-tuning our plan to keep the world free of polio forever. Here's what you need to know about where we are now.

**Polio is an intestinal virus that is spread through contact with the feces of an infected person, which can contaminate water or food.**

The poliovirus is a single positive strand of RNA enclosed in a protective coating called a capsid.

There are three variations, or serotypes, of the poliovirus. They differ in their outer coatings.

The few cases of wild poliovirus that we see now are all of type 1. The last case of type 2 was in 1999, and the world was certified free of type 2 polio in 2015. The last case of type 3 was in 2012.

The virus infects only humans, mainly children under five because they are least likely to be fully vaccinated. There is no cure.

1. The virus latches onto a receptor on the surface of a cell, multiplying in the lining of the intestines.
2. It enters the cell and hijacks the cell's own machinery to make copies of itself.
3. The virus is released to infect neighbouring cells, spreading from the digestive tract to lymph nodes and the bloodstream.

The virus replicates and is excreted through feces, starting the cycle again.

**Rotary and its partners worked to reach 430 million children in 39 countries during polio immunisation campaigns in 2017.**

Afghanistan, Angola, Benin, Cameroon, Central African Republic , Chad, Côte d'Ivoire, Democratic Republic of Congo, Djibouti , Equatorial Guinea, Ethiopia, Gabon, Guinea, Guinea-Bissau, India, Indonesia, Iraq, Kenya, Laos, Liberia, Libya, Madagascar, Mali, Mauritania, Mozambique, Myanmar, Nepal, Niger, Nigeria, Pakistan, Republic of the Congo, Sierra Leone, Somalia, South Sudan, Sudan, Syria, Tajikistan, Uganda, Yemen

**We're also fighting vaccine-derived poliovirus.**

The Global Polio Eradication Initiative (GPEI) uses the oral polio vaccine in immunisation campaigns. It's made from strains of the poliovirus that are live, but weakened.

This weakened virus multiplies in a child's gut, stimulating an immune response in the lining of the intestines. Then the child excretes the vaccine-virus in his or her feces.

That is usually a good thing: Other children are then exposed to the weakened vaccine-virus in the environment. This exposure stimulates their bodies to create the protective antibodies as well. It's a way to indirectly induce immunity





in children who may not have been reached by health workers with doses of the vaccine.

In places with low immunisation rates, the weakened vaccine-virus can begin to circulate. In rare cases, it mutates back into a more virulent strain that can cause paralysis. This is called vaccine-derived poliovirus (VDPV).

In 2016, the year after the world was certified free of type 2 polio, all countries switched from a trivalent vaccine, which immunised against all three strains, to a bivalent vaccine, which immunises only against types 1 and 3.

Since the switch, there have been outbreaks of circulating vaccine-derived poliovirus (cVDPV) from the type 2 strain in the Democratic Republic of Congo, Nigeria, Somalia, and Syria. The GPEI has a stockpile of monovalent type 2 vaccine to use to stop these outbreaks.

High immunisation rates are the best protection against both wild and vaccine-derived polioviruses.

Many countries use inactivated polio vaccine, which uses a dead virus, in their routine immunisation systems to avoid the risk of VDPVs. Inactivated polio vaccine protects only the individual who received the vaccine against polio infection

Oral polio vaccine is the only vaccine that can interrupt the person-to-person transmission of wild poliovirus, which is why it will be used until the world is certified polio-free. Once wild poliovirus types 1 and 3 have been eradicated, only inactivated polio vaccine will be used.

### We search out the poliovirus wherever it hides.

Scientists look for evidence of the poliovirus in the environment to learn more about how it is circulating...

Most children infected with the poliovirus don’t show symptoms, but they still excrete the virus in their feces for several weeks.

Workers collect water samples near sewage treatment plants or, in areas without adequate sanitation, other known sources of wastewater such as open canals and streams.

Samples are kept cold during transportation to a lab that is part of the Global Polio Laboratory Network.

Virologists test the samples for poliovirus.

If virologists confirm the presence of a poliovirus, they carry out further tests to determine the exact genetic makeup of the virus and whether it is wild or vaccine-derived.

...and health workers track the children who show symptoms to see if they are caused by the poliovirus.

A child under age 15 experiences sudden, unexplained weakness or paralysis, known as acute flaccid paralysis (AFP). Most cases of paralysis are not caused by polio, but we investigate them to be certain.

A doctor or other community member such as a traditional healer, pharmacist, or cleric reports the case to medical authorities. Samples are kept cold during transportation to a lab that is part of the Global Polio Laboratory Network.

Doctors collect a stool sample within 48 hours of the onset of paralysis, and another one 24 to 48 hours later.

The scientists compare it against reference samples of known polioviruses. Because viruses from different regions have slightly different genetic sequences, the virologists can map where the virus came from — whether it was local or came across a border or from farther away.

Health workers use this information to figure out the best immunisation strategy to prevent further spread.



The scientists who identify the virus work in one of the 146 labs accredited by the World Health Organisation, in **92 countries**, that make up the Global Polio Laboratory Network.





**123**

**SUBNATIONAL AND NATIONAL LABORATORIES** are the frontline facilities that test stool and sewage samples

**17**

**REGIONAL REFERENCE LABORATORIES** distinguish between wild and vaccine-derived poliovirus and determine the genetic makeup of the virus

**6**

**GLOBAL SPECIALISED LABORATORIES** determine the genetic makeup of the virus, and prepare and distribute the chemicals used in virus testing

## In 30 years, we've gone from 125 polio-endemic countries...



1988

## ...to three




2018

# 17.4 million



**people who are currently healthy would have been paralysed by polio without our eradication efforts since 1988**

**The Rotary Foundation awarded nearly $700 million in PolioPlus grants from 2010 to 2017. Vaccines are largely covered by other donors, so Rotary provides funds to cover the gaps.**



**RESEARCH**
into new ways to facilitate eradication
**$16.6** million



**SURVEILLANCE**
for disease detection, including the Polio Laboratory Network
**$72.5** million



**TECHNICAL ASSISTANCE**
including salaries for health and immunisation professionals such as field officers and cold chain managers
**$132** million




**SOCIAL MOBILISATION**
to raise awareness of the vaccination campaigns and the benefits of immunisation
**$141.4** million



**OPERATIONAL SUPPORT**
including stipends for the millions of community-based vaccinators who administer the vaccine and perform house-to-house follow-up visits
**$308** million



**VACCINES**
**$20.4** million



# And we have a plan for keeping the world polio-free forever.



## INTERRUPTION

- Detect the last wild poliovirus in an individual or the environment.
- Continue immunisations, surveillance, and responses to outbreaks of vaccine-derived poliovirus.
- Begin to transition the resources that the GPEI created to support other health priorities.

## CERTIFICATION

- Certify the world polio-free.
- Dissolve the Global Polio Eradication Initiative.
- Reduce the number of laboratories and vaccine-manufacturing facilities that store the poliovirus and ensure stringent safeguards for those that continue to handle the virus.
- Hold high-quality immunisation campaigns to create a firewall of immunity in advance of the withdrawal of the oral polio vaccine.

## TRANSITION

- Stop using oral polio vaccine concurrently in all countries to eliminate the risk of vaccine-derived poliovirus and begin to immunise children using only the inactivated polio vaccine in routine immunisations.
- Continue surveillance; after the world is polio-free, environmental surveillance will be increasingly relied on.
- Respond to outbreaks of vaccine-derived poliovirus, which could circulate for several years after ending the use of oral polio vaccine.

**Help us see this fight to the end.
Donate at endpolio.org.**

Illustrations by Gwen Keraval

© The Rotarian

# உதம்பூருக்கு ஒரு விழித்திரை பாதுகாப்பு மையம்

ரோட்டரி குழு செய்தி

RC ஜம்மு-காஷ்மீரின், RID 3070, உதம்பூரிலுள்ள KLSM ரோட்டரி கண் மற்றும் ENT மருத்துவமனையில் விழித்திரை பாதுகாப்பு மையத்தை கடந்த வருடம் அமைத்தது. இந்த வசதி RIPN சுஷில் குப்தா தலைமையில், IPDG பர்விந்தர் ஜீத் சிங், மருத்துவ மனை தலைவர் DN ஷர்மா, சங்கத் தலைவர் புரன்லால் ஷர்மா மற்றும் பிற மாவட்ட அதிகாரிகளுடன் துவக்கி வைக்கப்பட்டது. DGE சுனில் நாக்பால், DGN டாவின்தர் சிங் மற்றும் மாவட்டத்தின் பிற ஆளுநர்களும் கலந்துகொண்டனர்.

$68,000 செலவில் கட்டப்பட்டுள்ள மையத்திற்கான நிதி உலக நிதி TRF, D 6650 USAக்கு மற்றும் D 2770, ஜப்பான் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது. உதம்பூர் மற்றும் ராஜௌரி ரோட்டரி சங்கங்களின் தாராள நன்கொடைகளுடன் மற்ற மாவட்டங்களின் 3070, 3131 அவர்களின் DDF நிதியிலிருந்தும் பங்களித்துள்ளனர்.



RIPN *சுஷில் குப்தா மற்றும்* IPDG *பர்வீந்தர் ஜுத் சிங் மற்றும்* PDG K K *தீர் விழித்திரை பாதுகாப்பு மையத்தின் துவக்க விழாவில்.*

ஸ்ரீநகருக்கு அடுத்த படியாக மாநிலத்தில் இரண்டாவது மையமாகும். மக்கள் விழித்திரை பாதுகாப்புக்கு 500 கி.மீ., பயணித்து அமிர்தசரஸ் வரை செல்ல வேண்டும். இந்த சிகிச்சை ஏழைகளுக்கு இலவசமாகவும், பணம் கட்ட முடிபவர்களுக்கு குறைந்த கட்டணத்திலும் வழங்கப்படும் என ஷர்மா கூறினார். மாக்குலர் சிதைவு, டையாபடிக் ரெட்டினொபதி மற்றும் விழித்திரை, மாக்குலா, விட்ரியஸ் தொடர்பான பிற நுண்ணிய பிரச்சினைகள் ஆகியவற்றிற்கு இந்த மையம் சிகிச்சை அளிக்கும் என்றார். ■

# பெண் குழந்தையை போற்றும் ஒரு போட்டி




RC சூரத் மேற்கு, D 3060, ஒரு தேசிய அளவு புகைப்பட போட்டி நடத்துகிறது. இதற்கான கடைசி நாள் நவம்பர் 20, 2018. ஒவ்வொரு போட்டியாளரும் 5 புகைப்படங்களை சமர்பிக்கலாம்.

புகைப்படப் போட்டியின் மையக்கரு - குழந்தைகளின் கல்வி கற்பித்தலின் முக்கியத்துவமாக இருக்க வேண்டும். உங்கள் புகைப்படங்களை *rotarysuratwest.contest@gmail.com* என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்

மேலும் விவரங்களுக்கு சங்கத் தலைவர் விவேக் கேயலை *somiyabong@gmail.com* என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்புக் கொள்ளலாம்.■

# வடகிழக்கில் ரோட்டரியின் மாயாஜாலப் பணி

ரோட்டரி செய்திக் குழு

ரோட்டரியின் D 3240வது மாவட்ட அமைப்பில் மேற்கு வங்கத்தின் வட பகுதி உள்பட வடகிழக்கு மாநிலத்தின் 8 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு கலாசார, இனங்களைக் கொண்ட 88 ரோட்டரி அமைப்புகளும் சேர்ந்து சில தனித்துவமான திட்டங்களை உலகளாவிய நிதியுதவியுடன் ரோட்டரி சங்கங்கள் செயல்படுத்தியுள்ளன.

### பொதுக் கழிப்பறைகள்

ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் அர்ஜித் என்டோவின் சிந்தனைப்படி தலைநகர்களான குவாஹாத்தி, ஷில்லாங், அகர்த்தலா, இம்பால், திம்மபூர், அய்ஸ்வால், சில்சார் ஆகிய நகரங்களில் கட்டணக் கழிப்பிடங்களை 7 ரோட்டரி சங்கங்கள் அமைத்துள்ளன.

இப்பகுதிகளில் பயணம் செய்த ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜியும் மாவட்ட முன்னாள் ஆளுநர் கல்பனா கோண்டும் பல இடங்களில் பொதுக் கழிப்பிடங்கள் இல்லாததைக் கண்டனர். அதையடுத்து இத்திட்டம் வந்தது என்று தெற்கு குவாஹாத்தி ரோட்டரி சங்க உறுப்பினர் கீதி புஜர்பருவா கூறினார். ரோட்டரி ஃபவுண்டேஷன், அமெரிக்காவின் D5020 ரோட்டரி அமைப்பு ஆகியவை அளித்த 73,650 டாலர் உலகளாவிய மானிய உதவியில் இவை கட்டப்பட்டுள்ளன.

ரோட்டரி சங்கங்களும் உள்ளூர் உள்ளாட்சி அமைப்புகளுடனும் தனியார் தொண்டு நிறுவனங்களும் கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தப்படி இவை சுத்தப்படுத்தி, பராமரிக்கப்படுகின்றன. இந்தக் கழிவறைகளை அவ்வப்போது ரோட்டரி அமைப்பினர் சென்று திடீர் சோதனை செய்கிறார்கள். அனைத்தும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்படுகின்றன என்றார் கீதி.

### விஷமில்லாத தண்ணீர்

அஸ்ஸாமில் உள்ள நல்பாரி மாவட்டத்தில் குடிநீர் விஷத் தன்மையோடு இருந்தது. இந்த ஆபத்தை நீக்குவதற்காக தெற்கு குவாஹத்தி ரோட்டரி சங்கம் நச்சுத்தன்மை உள்ள நீரைச் சுத்திகரிப்பதற்காக நச்சு நீக்கும் நவீன உபகரணங்கள் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு பிரிவுகளை அமைத்துள்ளது.

இதைப் போல் 17 பள்ளிகளில் ரசாயனம், மாசு நீக்கும் சுத்திகரிப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று கீதி கூறினார். இதற்கு ரோட்டரி ஃபவுண்டேஷன், அமெரிக்காவின் டாகோமா ரோட்டரி சங்கம் (D 5020) ஆகியவற்றின் உலகளாவிய நிதியாக 69 ஆயிரம் டாலர் அளித்துள்ளன.

### நோயுற்றோர் மன நிம்மதி பெற.

மேற்கு குவாஹாத்தி ரோட்டரி சங்கமும் தீப்ஷிகா ஃபவுண்டேஷனும்



*ரோட்டரி டயாலிஸிஸ் மையம், தூரகாப்பூர்.*




*சில்ச்சரில் ரோட்டரி தெரவோர் கட்டணக்கழிப்பிடம்.*

இணைந்து நோய் முற்றிய நிலையில் வாடுவோர் மன ஓய்வு பெறுவதற்கான இல்லத்தை தெற்கு காம்ரூப் மாவட்டம் மிர்ஸா என்ற இடத்தில் நிறுவியுள்ளன. இதற்கு ரோட்டரி ஃபவுண்டேஷனின் உலகளாவிய நிதியாக 31,156 டாலர் (சுமார் ரூ.22,60,680) பெறப்பட்டது. இதற்கான மருத்துவ உபகரணங்கள், கட்டில், மேசை நாற்காலிகள் உள்ளிட்ட மரச்சாமான்களை தைவான் நாட்டின் ஷின்சூ சுசைன் ரோட்டரி சங்கம் (D 3500) வழங்கியுள்ளது.

**டயாலிசிஸ் மையம்**

துர்காபூரில் உள்ள ட்ரீம்லேண்ட் நர்சிங் ஹோமில் சிறுநீரக சிகிச்சை மையத்தை மேற்கு வங்கம் துர்காபூர் ஏரோசிட்டி ரோட்டரி சங்கம் அமைத்துள்ளது. இப்பகுதியினருக்கு இது பெரிய வரப்பிரசாதமாகும்.

மூன்று படுக்கைகள் கொண்ட இந்த மையம் ரோட்டரி ஃபவுண்டேஷன் மற்றும் சர்வதேச ரோட்டரி அமைப்புகளின் 53,150 டாலர் உலகளாவிய நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ளது. மூர்பார்க், எல்க்ஹர்ட், கிழக்கு பேக்கர்ஸ்ஃபீல்டு, வடக்கு பேக்கர்ஸ்ஃபீல்டு, குரோவர் பீச், பிஸ்மோ பீச், மூர்பார்க் மார்னிங், செமி சன்செட், கயுகோஸ் சீசைட், தவுஸண்ட் ஓக்ஸ், இந்தியன் வெல்ஸ் வேலி, நியூபரி பார்க், கோலெட்டா நூன்டைம் ஆகிய ரோட்டரி சங்கங்களும், 5240, 6540 3240வது மாவட்ட ரோட்டரி அமைப்புகளும் நிதியுதவி செய்துள்ளன.■

# ரோட்டரி முதியோர் இல்லத்தில் மறுவாழ்வு மையம்

ரோட்டரி செய்திக் குழு



*மறுவாழ்வு மைய திறப்பு விழாவில் RC மும்பை காட்கோபர் ரோட்டரியினர்.*

இனிமேல் பிவண்டி தாலுகா, காடவளியில் உள்ள மடோஸ்ரீ விருதாசிரமத்தின் குடும்பத்தவர்கள் வருகையாளர்கள் ரோட்டரி மறுவாழ்வு மற்றும் ஆலோசனை மையத்தில் வசதியாகத் தங்கிச் செல்லலாம். இந்த புதிய வசதிகளை ரூ.14.5லட்சம் செலவில் அமைத்துக் கொடுத்துள்ள RC மும்பை காட்கோபர், D 3141க்கு நன்றி.

கட்டிடத்தின் முதல் தளத்தில் மையத்தின் வசதிகளுடன் முழுதாக அமைத்துத் தரப்பட்ட நான்கு அறைகள் உள்ளன. முதியோர் இல்லத்தில் வாழும் நபர்களின் உறவினர்கள் சில நாட்கள் தங்கியிருந்து ஒன்றாக கழிக்கலாம். முதியவர்களுக்கு அவர்கள் உறவினரின் கூட இருக்கும் மகிழ்ச்சியை இது அளிக்கும். இதற்குமுன், முதியவர்கள் பலர் ஒன்றாக தங்கியிருந்தார்கள். வருபவர்கள் அமர்ந்து பேசவோ தங்க இடம் இல்லை. என்று சங்கத் தலைவர் சுதா நவந்தர் கூறுகிறார்.

வருகையாளர்களுக்கும் முதியோர்களுக்கும் சேர்த்து ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டிருக் கிறார், அவர்களின் கருத்து மாறுபாடுகளைத் தவிர்த்து மீண்டும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் என்று சங்க உறுப்பினர் சுனீல் M புராணிக்.




# வெள்ள அபாயத்திற்கு மிதவை இல்லம்

ரஷீதா பகத்

வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் 21 பேரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு இயங்குகிறது திஸ்பூர் ரோட்டரி சங்கம் (District 3240). கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது போல அளவில் சின்ன அமைப்பாக இருந்தாலும் செயல்படுவதில் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் கைகோத்து பெரிய பணியை நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்பகுதியில் இயற்கைச் சீற்றத்தால் தத்தளிப்போருக்கு உதவியுள்ளனர்.

குவாஹத்திக்கு 340 கி.மீ. தொலைவில் உள்ளது மஜுலி. இந்தச் சிறிய ஊர் பிரம்மபுத்ரா நதியில் அமைந்துள்ள தீவில் உள்ளது. இதுதான் உலகிலேயே நதியில் அமைந்திருக்கும் மிகப் பெரிய தீவாகும். இங்கே 20 வைணவ மடங்கள் ஆன்மிகப் பணிகளை ஆற்றி வருகின்றன. அது மட்டுமின்றி மஜுலி தீவு சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. 2016ம் ஆண்டு கணக்குப்படி மொத்தம் சுமார் ஒரு லட்சத்து 67 ஆயிரம் பேரைக் கொண்ட நாட்டின் முதல் தீவு மாவட்டமாக அமைந்துள்ளது.

அந்தக் காலத்தில் பெரியதாக இருந்த இத்தீவு மழை, வெள்ளம், நிலச்சரிவு காரணமாகப் பாதியாகக் குறைந்துவிட்டது. அதை விட இத்தீவில் இருப்போருக்கு மிகவும் சோதனையாக இருப்பது ஆண்டுக்கு நான்கைந்து முறை வரும் வெள்ளம்தான்! இதுதான் அவர்களது மிகப் பெரிய கவலை.

இப்படி இயற்கைச் சீற்றங்களில் சிக்கித் தவிக்கும் மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி உயரமான பகுதிகளிலோ உயரமாகப்




போடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளிலோ தஞ்சம் அடைகிறார்கள். மக்கள் மட்டுமல்ல, கால்நடைகளும் பாதிக்கப்படுகின்றன என்று ரோட்டரி சங்கத்தின் (2017-18) தலைவர் சுந்தர் போர்டோலோய் கூறுகிறார்.

இந்தத் தீவில் வசிப்பது மிகவும் கஷ்டமானது. நதியில் வெள்ளம் வந்தால், எல்லாமே தண்ணீருக்குள் மூழ்கிவிடுகின்றன. அதே சமயம் குடிதண்ணீருக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டுவிடும். பெண்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்றார்.

போர்டோலோயிடம் பிரபல எழுத்தாளர் சஞ்சிப் சபாபண்டிட் மிதவை தங்குமிடம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். எல்லா வசதிகளுடனும் 50 பேர் தங்கலாம் என்பதை விவரித்திருக்கிறார். அந்த எழுத்தாளர் கூறியதன் அடிப்படையில் அங்கே கிடைக்கும் மூங்கில், மரம், உலோகம், பிளாஸ்டிக் ஆகியவற்றைக் கொண்டு மிதவை இல்லங்களை அமைப்பது குறித்து ஆராயப்பட்டது.

எழுத்தாளர் சஞ்சிப் கூறிய யோசனை எனக்குத் திருப்தி அளித்தது அதன்படி இல்லம் மக்களின் வசதி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன. அதில் 50 பேர் ஒரே நேரத்தில் தங்கலாம் என்றார் போர்டோலோய்.

மிதவை இல்லத்தில் சுகாதாரமான கழிவறை, குடிநீருக்கான கைப்பம்பு, குடிநீர் டேங்க் எல்லாம் அமைக்கப்பட்டன. இவையெல்லாம் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டன. அத்துடன், தேவைப்படாத போது பிரித்து எடுத்துச் செல்லலாம். மீண்டும் கட்டி அமைத்துக் கொள்ளலாம். முறையாகப் பராமரித்தால்,



*மிதவை இல்லத்தில் பொருத்தப்பட்ட குழாயின் செயல்திறனை பரிசோதிக்கும் சிறுவன்.*

இந்த மிதவை இல்லத்தின் ஆயுள் 25 ஆண்டுகள் என்றார் அவர்.

எழுத்தாளர் சஞ்சிப் கூறிய இந்த ஐடியாவை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த பிஸ்வஜித் ஹஸரிகா, உத்பல் குமார் ஹஸாரிகா ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார் போர்டோலோய். அவர்களது டிரான்ஸ்வர்ச்சுவல் மற்றும் இன்ட்சிஸ் சர்வீஸஸ் நிறுவனங்கள் (Transvirtual and Intsys Services) மூலம் இதற்கு ரூ.5 லட்சம் திரட்டித் தர முன்வந்தனர்.

*மிதவை இல்லத்தில் சுகாதாரமான கழிவறை, குடிநீருக்கான கைப்பம்பு, குடிநீர் டேங்க் எல்லாம் அமைக்கப்பட்டன. இவையெல்லாம் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டன. அத்துடன், தேவைப்படாத போது பிரித்து எடுத்துச் செல்லலாம். மீண்டும் கட்டி அமைத்துக் கொள்ளலாம். முறையாகப் பராமரித்தால்.*

இதற்காக, அன்னை தங்குமிடம் (Mother Shelter) என்ற பெயரில் திட்டம் உருவானது. PVC போன்ற சில பொருட்களைக் கொண்டு தெப்பம் வடிவமைக்கப்பட்டது. ஸ்டீல் ஃப்ரேம்கள் மூங்கில் தளங்கள், உறுதியான பிளாஸ்டிக் ஷீட் கூரைகள் என கன கச்சிதமாக அமைக்கப்பட்டது.

தற்போது 50 பேர் தங்கும் வகையில் இருந்தாலும் 100, 200 பேர் தங்கும் வகையில் இந்தத் தெப்பத்தின் அளவை பெரிதாக்கிக் கொள்ளலாம் என்கிறார் போர்டோலோய். போதிய குடிநீர், உணவுப் பொருட்கள், மற்றும் முக்கியமான ஆவணங்கள், பொருட்களை வைத்துக் கொள்ளலாம். கழிவறை, குளியலறைகளுக்கு ஸ்டீல் ஃப்ரேம்கள் போடப்பட்டுள்ளன. அவற்றை மடக்கி வைத்துக் கொள்ளலாம். வெள்ளத்துக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் செப்டிக் டாங்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். கழுவுவதற்கு பீச்சியடிக்கும் குழாய் (spray nozzle) உண்டு என்று போர்டோலோய் விவரித்தார்.

அது மட்டுமல்ல, மின்சார வசதிக்கு சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. பேட்டரி பேக் அப் வசதியும் உண்டு. இவற்றில் ஐந்து LED பல்புகளை எரிய வைக்கலாம். படிப்பதற்கு மேசைகள், புத்தக அலமாரிகள், சமையல் மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மிதவை இல்லத்தில் 20 அடி உயரத்தில் மூங்கில் பிளாட்பாரம் அமைக்கப்பட்டு, 400 லிட்டர் கொள்ளும் குடிநீர்த் தொட்டி உள்ளது. அதில் கைக் குழாய் மூலம் நீரை நிரப்பிக் கொள்ளலாம். மொத்தத்தில், இது இயற்கைச் சூழலுடன் கூடிய இடமாகும்.

இங்கே மழைநீர் சேமிப்பு வசதிக்கும் எழுத்தாளர் சஞ்சிப் யோசனை கூறியுள்ளார். பிளாஸ்டிக் கூரை மீது பெய்யும் மழை நீர் அப்படியே குடிநீர்த் தொட்டியில் விழும், துளி கூட வீணாகாது.

இந்த மிதவை இல்லத்துக்கு மத்திய அரசின் கீழ் இயங்கும் அறிவியல் தொழில்நுட்ப மேம்பட்ட



ஆய்வு நிறுவனம் (Institute of Advanced Studies in Science and Technology) ஏற்பாடு செய்திருந்த தேசிய அறிவியல் தின கண்காட்சியில் (National Science Day exhibition) விருது கிடைத்திருக்கிறது என்றார் போர்டோலோய்.

அஸ்ஸாம் மூத்த போலீஸ் டைரக்டர் ஜெனரல் (SB) பல்லப் பட்டாச்சார்யா, மஜுலி அன்னை தங்குமிடத்துக்கு ஆதரவு அளித்துள்ளார். ஜூன் 26ம் தேதி இந்த மிதவை இல்லத்தைத் திறப்பதற்கான நிகழ்ச்சியில் மஜுலி துணை ஆணையர் தேப் பிரசாத் மிஸ்ரா, போலீஸ் கண்காணிப்பாளர், இதர மாவட்ட அதிகாரிகள், திஸ்பூர் ரோட்டரி சங்கத்தினர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய டிரான்ஸ் வர்ச்சுவல் நிறுவன மேலாண் இயக்குநர் பிஸ்வஜித் ஹஸரிகா பேசுகையில், நாம் ஒவ்வொருவரும் இதைப் போல் சமூகப் பணிகளை ஏற்றுச் செயல்படுத்தினால், மாநிலத்தில் உள்ள ஏராளமான பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியும் என்று கூறினார்.

இன்ட்லிஸ் சர்வீஸஸ் மேலாண் இயக்குநர் உத்பால் ஹஸாரிகா, பெரிய பொறுப்புகளைத் தனி நபர்கள் ஏற்றுக் கொள்வது கடினம். ஆனால், குழுவாகச் சேர்ந்தால் கரங்கள் இணைந்து எதையும் நிறைவேற்றலாம் என்றார்.



RI D 3240 அமைப்பின் PDG சுனீல் சரஃப், நம் மாவட்டத்தில் உள்ள இந்தச் சிறிய ரோட்டரி சங்கம் முழுக்க முழுக்க பாராட்டுக்கு உரியது. இத்தகைய புதுமையான திட்டம் மக்களுக்குப் பெரிதும் உதவும் என்றார்.

இந்த மிதவை இல்லம் போனிமாம் மஜுலி கிரிஷி சமாபே ஸ்மிதி என்ற விவசாயக் குழுவைக் கொண்ட தன்னார்வ அமைப்பிடம் முறைப்படி அளிக்கப்பட்டது. அந்த அமைப்பு நதித் தீவில் உள்ள மோலபிந்தா கிராமத்தில் மிதவை இல்லத்தைப் பராமரிக்கிறது.

இதைப் போல் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் இதர பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா என்று கேட்டதற்கு, நிச்சயம் முடியும். எங்கு வேண்டுமானாலும் இதை வடிவமைத்து எளிதாக எடுத்துச் சென்று கட்டமைத்துப் பயன்படுத்தலாம் என்றார் போர்டோலோய்.

எத்தனை மிதவை இல்லங்கள் அஸ்ஸாமில் தேவைப்படுகின்றன என்று கேட்டால், ஏராளமாக என்று பதிலளித்தார். அவரது ரோட்டரி சங்கம் முதல் முதலாக மிதவை இல்லத்தை பயன்படுத்துகிறதா என்று கேட்டபோது, இதுவரை இல்லை. நதியில் வெள்ளம் வரும்போது தேவையிருக்கும் என்றார். ■

*மஜுலி மாவட்ட துணை ஆணையாளர் தேபா பிரசாத் மிஸ்ரா மிதவை இல்லத்தை திறந்து வைத்தார்.*





## “தவிப்போர்க்குக் கை கொடுப்போம்”

**EK லூக்**
**நிதிச் சேவைகள், RC வைக்கம், D 3211**

கேரள மாநில வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் இதர உதவிகளை அளிக்கும் போது மாவட்டக் குழுவுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிவர். இப்பணியில் ஈடுபடுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்ளும் EK லூக், எல்லாவற்றையும் இழந்து தவிப்போருக்கு உதவுவது வரப்பிரசாதம் என்கிறார்.

லூக் 1984ம் ஆண்டிலிருந்து ரோட்டரி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். முன்பெல்லாம் ரோட்டரி என்றால் மேட்டுக் குடியினரின் சங்கம் என்று தான் நினைத்திருந்தேன். ரோட்டரி அமைப்பினரின் தொண்டினைப் பார்த்த பிறகு எண்ணத்தை மாற்றிக் கொண்டு அவர்களோடு இணைந்துவிட்டேன்.

முன்பு ரோட்டரி சங்கங்கள் தங்களது சங்க நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடும். இப்போது காலம் மாறிவிட்டது. உறுப்பினர் சேர்க்கை போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டுகிறோம். மாவட்ட ரோட்டரி அமைப்பில் இப்போது மொத்தம் 4,400 பேர் உறுப்பினர்கள். இதை ஆண்டு இறுதிக்குள் 5,000மாக உயர்த்திவிடுவோம் என்கிறார்.

D 3011ல் 267 பெண்கள் இருக்கிறார்கள். ரோட்டரியில் கணவன் உறுப்பினராக இருந்தால், அவரது மனைவியையும், மனைவி உறுப்பினராக இருந்தால் கணவரையும் உறுப்பினராக்குவது தீவிரமான பணியாகும். அத்துடன் ஐந்து புதிய ரோட்டரி சங்கங்களையும் உருவாக்கத் தீவிர ஆர்வும் காட்டி வருகிறார்.

TRFவிற்கு 100 சதவீத பங்களிப்பை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் 10 டாலராவது அளித்து உதவ வேண்டும். கடந்த ஆண்டு 17 உறுப்பினர்கள் மட்டுமே அளித்துள்ளனர், என்கிறார்.

மாவட்ட திட்டப் பணிகளில் லூக், அதிக ஆர்வம் காட்டி வருகிறார். ஸ்நேக வீடு என்ற திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் ரோட்டரி சார்பில் புதிதாக 300 வீடுகளைக் கட்டித் தரவுள்ளார். அத்துடன், முடிக்கப்படாத 700 வீடுகள் கட்டி முடிக்கப்படுகின்றன. வீடுகள் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.3.5 லட்சம் வரையில் கட்டப்படுகின்றன. இதுவரை 118 வீடுகள் கட்டப்பட்டுவிட்டன.

# உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெய்ஸ்ரீ

## பத்து லட்சம் ஆளுநர்

AV பதி, கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி சங்கம் D 3201



“ பத்து லட்சம் மட்டும்” என்ற இணைத் தலைப்பை அறிவித்துள்ளார் AV பதி. இந்த இலக்கு வித்தியாசமானது. பத்து லட்சம் மரக்கன்றுகள் நடுதல், 10 லட்சம் லிட்டர் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், பசித்த 10 லட்சம் பேருக்கு உணவு அளிப்பது, 10 லட்சம் அவுன்ஸ் ரத்தம் தானம் பெறுவது, ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு 10 லட்சம் டாலர் நன்கொடை அளித்தல்... இப்படி எல்லாமே பத்து லட்சம்தான்!

பதி ரோட்டரி சங்க நடவடிக்கையில் ஊறியவர். காரணம், அவரது தந்தை ராமசுப்பிரமணியன் உதகமண்டல ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர், தாயார் விமலா மணி உதகமண்டலம் இன்னர் வீல் சங்கத்தின் முன்னாள் தலைவர். 2000ம் ஆண்டிலிருந்து ரோட்டரி உறுப்பினராக இருப்பவர்.

AV பதி நகைச்சுவை உணர்வுள்ள ரோட்டேரியன். சுவையான நிகழ்ச்சிகளை நடத்துவதில் இளைய தலைமுறையுடன் சேர்ந்து செயல்படுபவர். அதே சமயம் சீரியஸாகவும் பணியாற்றுவார். அருகில் உள்ள கிராமப்புறத்திலிருந்து வந்த தம்பதி இதய நோய் பாதித்த தங்களது குழந்தையைக் காப்பாற்றும்படி வேண்டினர். அப்போது, ரோட்டரியின் “இதயத்துக்கு உதவும் இதயம்” என்ற திட்டத்தை அறிந்திருந்த AV பதி ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்த வானொலி நிகழ்ச்சியில் பேசியபோது இதை சுட்டிக் காட்டினார். அதற்குப் பலன் கிடைத்தது. குழந்தைக்கு GKNM மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.

ஒரு குழந்தையைக் காப்பாற்றும் பணியில் முயற்சி செய்த வாய்ப்பை வாழ்நாளில் பெருமையாகக் கருதுகிறேன் என்றார், ஆரம்பத்தில் “அந்தக் குழந்தை மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறாள், ஒரு வாரத்துக்கு மேல் பிழைக்க மாட்டாள்” என்று டாக்டர்கள் கூறினர். நண்பர்கள், உறவினர்களின் உத வியோடு ரூ.60 ஆயிரம் வரை திரட்டினேன். மருத்துவர்களும் தங்களது பங்குக்கு உதவி செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக கடவுள் கண் திறந்தார். ஜெனீஃபர் என்ற அந்தக் குழந்தை குணமடைந், இப்போது அவளுக்கு 19 வயது. ஆரோக்கியமாக இருக்கிறாள் என்றார்.

ரோட்டராக்ட் அமைப்பைச் சேர்ந்த இளைஞர்களை ரோட்டரி சங்கத்திலும் இணைய வேண்டும் என்பதில் AV பதி உறுதியுடன் இருக்கிறார். அதற்கு “இடைவெளி சங்கங்கள்” (Space Clubs) என புதிய சிந்தனையை உருவாக்கினார். இந்த சங்கம் ரோட்டராக்ட், ரோட்டரி சங்கங்களுக்கும் பாலமாக இருக்கும். இளைஞர்கள் ரோட்டரி சங்கத்தில் இணைய இது எளிதில் உதவுவது தான் இதன் நோக்கம் என்றார் AV பதி.

புதிதாக ரோட்டரி சங்கம் அமைவதற்கு 25 உறுப்பினர்களுக்கு மேல் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். புதிதாக மூன்று ரோட்டரி சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றின் உறுப்பினர்கள் புதிய புதிய சிந்தனையை உள்ளவர்கள் என்பதால் வெற்றிகரமாக செயல்படுகிறார்கள். அனைவரும் அதில் சமம் என்பது இன்னொரு முக்கியமான விஷயம் கோவையிலும் கொச்சியிலும் மாற்றுத் திறனாளிகளுக்காக இரு சிறப்புப் பூங்காக்களை அமைக்க வேண்டும் என்பது AV பதியின் நோக்கம். இவரது மனைவி திருமதி வீணா இன்னர்வீல் D 320 தலைவராக இருக்கிறார்.

## உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதே நோக்கம்

EK உமர், மருத்துவர், நுளம்பூர் ரோட்டரி D 3202

RC நுளம்பூர், தலைவர் EK உமர் மாவட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் ஆர்வம் காட்டி வருகிறார். தற்போது 5000 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 10 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்பதும், TRFக்கு 5 லட்சம் டாலர் திரட்டுவது இலக்காகும்.

நுளம்பூரில் பேச இயலாத, காது கேளாதவர்களுக்கான சிறப்புப் பள்ளியின் தலைவராக இருக்கிறார். இத்தகைய குறைபாடுகளை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவதற்கான மருத்துவ மையத்தை அமைப்பதில் தீவிரம் காட்டி வருகிறார்.

மருத்துவர் என்ற முறையில் மக்கள் தங்களது உடல் நலத்தைத் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் டாக்டர் உமர்.

குழந்தைகள் எளிதில் பாதிக்கப் படுகிறார்கள். அவர்கள் மீது அதிகமான அக்கறை செலுத்த வேண்டும். உரிய சிகிச்சையையும் அளிக்க வேண்டும் என்கிறார்.

டாக்டர் உமர், இந்திய மருத்துவ சங்கத்தின் (Indian Medical Association) மாநிலத் தலைவராகவும் இருக்கிறார். இவரது மனைவியும் இதே சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார்.



## உடல் நலமே பிரதானம்

**விநய் பாட்டியா,** பட்டயக் கணக்காளர், RC ஃபரீதாபாத் NIT, D 3011



விநய் பாட்டியா 1993ம் ஆண்டு முதல் ரோட்டராக்ட் இளைஞர் அமைப்பில் இருந்து, ரோட்டேரியனாக உயர்ந்தவர். ரோட்டராக்ட் அமைப்பில் இருந்தபோது, ஹிமாசலப் பிரதேசம் டல்ஹவுசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரோட்டரி இளைய தலைவர் விருது பெற்றதைப் பெருமையாகக் கருதுகிறார். அதைப் போல் நட்புறவுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் பிரேசில் நாட்டுக்குப் பயணம் செய்ததை நினைவுகூர்ந்து பெருமைப்படுகிறார்.

மருத்துவ முகாம்களை நடத்துவது என்றால் விநய் பாட்டியா உற்சாகமாக ஈடுபடுவார். நோயினால் வழி தெரியாமல் தவிக்கும் பலருக்கு உதவுவது மன நிறைவு தருகிறது. இதையொட்டி, மத்திய அரசு, இந்திய எலும்பியல் சங்கம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, தேசிய அளவில் கட்டணமில்லா எண்ணை உருவாக்குவதில் பெருமிதம் கொள்கிறார். இது நாடு முழுவதும் உள்ள கிளப் கால் (club foot) உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப் பெரிதும் உதவும்.

மாவட்ட அமைப்பின் வளர்ச்சிக்காக அவர் சில திட்டங்களை மேற்கொண்டுள்ளார். தடுப்பணைகள் கட்டுவது, டயாலிசிஸ் மையம் அமைப்பது, மார்பக ஊடுகதிர் படமெடுத்தலுக்கான (Mammography) வேன்கள் தருவிப்பது ஆகியவை இவரது நோக்கம். இவை அனைத்தும் உலகளாவிய மானியத்தில் மேற்கொள்ளப்படும்.

ரோட்டரி அமைப்பின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 15 சதவீதம் அதிகரிப்பதும் இன்னொரு அனைத்துப் பெண்கள் ரோட்டரி அமைப்பை உருவாக்குவதும் பாட்டியாவின் குறிக்கோள். TRF கணிசமான நிதியை அளிப்பதில் நம்பிக்கையோடு இருக்கும் விநய் பாட்டியா, அண்மையில் ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன் இணைந்து நடத்தப்பட்ட மகா விருந்து (The Million Dollar Dinner) மகத்தான வெற்றி பெற்றது. அதன் மூலம் 25 லட்சம் டாலர் கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டுள்ளது என்கிறார்.

## சங்கங்களை வலுப்படுத்துவோம்

CR **சந்திரபாப்,** பட்டயக் கணக்காளர், RC ராணிப்பேட்டை, D 3231



சந்திரபாப்பின் குடும்பம் ரோட்டரி அமைப்பைச் சேர்ந்தவர்கள். அவரது தந்தை 1965ம் ஆண்டு ராணிப்பேட்டை ரோட்டரி சங்கத் தலைவராக இருந்தார். தாயார் இன்னர் வீல் (D 323) முன்னாள் தலைவர். சந்திரபாப்பின் மனைவி சுஜாதாவும் ரோட்டரி இ-சங்கத்தின் முன்னாள் தலைவர். சகோதரி இன்னர் வீல் சங்கத்தின் உறுப்பினர். சகோதரர்கள், குழந்தைகள், உறவினர்கள் என பலரும் ரோட்டரி பணிகளில் ஈடுபடுபவர்கள்.

இன்டராக்ட் மற்றும் ரோட்டராக்ட் அமைப்புகளில் இளம் வயதில் இருந்த சந்திரபாபு 1989ம் ஆண்டு ரோட்டரி உறுப்பினர் ஆனார். இவர் மாவட்டத்தின் ரோட்டரி சங்கங்களை வலுப்படுத்துவதில் கவனமாக இருக்கிறார். எங்களது பகுதி வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர் என பெரிதாக விரிந்துள்ளது. ரோட்டரி அமைப்பினரின் ஆர்வம் நீடிக்க, எல்லா சங்கங்களையும் பெரிய பணிகளில் ஈடுபடுத்த ஆர்வம் காட்டுகிறேன் என்கிறார்.

எல்லா சங்கங்களும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக் கொண்டு, அதன் வளர்ச்சியில் கவனம் செலுத்துகின்றன. ரோட்டரியில் ஊறிப் போன சந்திரபாப்பின் ரோட்டரி குடும்பத்தினரும் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுத்துகிறேன். ரோட்டரி சங்கத்தில் உறுப்பினர் எண்ணிக்கையில் 20 சதவீதம் அதிகரிக்கச் செய்வது அவரது நோக்கம். உறுப்பினர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில், ரோட்டரியில் இந்த ஆண்டு சேரும் பெண்கள்; சங்கத்திற்கு செலுத்தவேண்டிய சந்தாவை செலுத்த வேண்டாம் என்று அறிவித்துள்ளார்.

புதிதாக 100 ரோட்டராக்ட், மற்றும் இன்டராக்ட் அமைப்புகளை ஏற்படுத்துதல், மேலும் பல மகிழ்ச்சி கிராமங்களை உருவாக்குதல், மாவட்டத்தில் குறைந்த செலவில் 100 தங்குமிடங்களை அமைத்தல் ஆகிய திட்டங்களை வைத்திருக்கிறார்.

ரோட்டரி சங்கங்களின் துணையோடு குழந்தைகள் பாதுகாப்பு, சாலைப் பாதுகாப்பு, எழுத்தறிவு ஆகியவற்றில் கின்னஸ் ரெகார்டு சாதனை நிகழ்த்த உத்தேசித்துள்ளார். இவர் சார்ந்த மாவட்டம் 5 உலகளாவிய மானிய உதவிகளை இந்த ஆண்டு பெற்றுள்ளது. குழந்தை மரணத்தைத் தடுப்பதற்காக மாநில மக்கள் நல்வாழ்வுத் துறையுடனும் ஜெர்மனி ரோட்டரி சங்கத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர் காக்கும் சாதனங்கள், போதிய வசதிகள், உபகரணங்களை அமைக்கப் பாடுபட்டு வருகிறோம். இதையடுத்து தாய் சேய் நலத்துக்காக கிராமப்புற அங்கன்வாடிகளின் செவிலியர்களுக்கு உரிய பயிற்சியையும் அளிக்கிறோம் என்றார். TRFக்கு 10லட்சம் டாலர் திரட்டித் தருவதில் உறுதியாக இருக்கிறார் இவர்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!




Get Rotary's free Club Locator app and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


**RI Exchange Rate - Oct 2018**

**$1 = ₹72**

Rotary

## Rotary at a glance

| | |
|---|---|
| Rotarians | : 12,12,798 |
| Clubs | : 35,768 |
| Districts | : 538 |
| Rotaractors | : 1,82,666 |
| Clubs | : 7,942 |
| Interactors | : 5,29,552 |
| Clubs | : 23,024 |
| RCC members | : 2,29,057 |
| RCC | : 9,959 |

## Membership Summary

As on September 1, 2018

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 113 | 4,702 | 220 | 24 | 231 | 172 |
| 2982 | 69 | 3,088 | 151 | 62 | 112 | 46 |
| 3000 | 128 | 5,166 | 453 | 191 | 671 | 195 |
| 3011 | 81 | 3,477 | 741 | 44 | 111 | 25 |
| 3012 | 86 | 3,581 | 752 | 35 | 130 | 56 |
| 3020 | 78 | 4,013 | 230 | 27 | 466 | 351 |
| 3030 | 90 | 4,836 | 583 | 55 | 307 | 164 |
| 3040 | 96 | 2,138 | 234 | 26 | 124 | 140 |
| 3053 | 71 | 3,087 | 551 | 8 | 56 | 95 |
| 3054 | 129 | 5,993 | 994 | 52 | 319 | 470 |
| 3060 | 101 | 4,261 | 520 | 58 | 123 | 138 |
| 3070 | 103 | 3,050 | 318 | 37 | 158 | 57 |
| 3080 | 78 | 3,276 | 232 | 54 | 216 | 108 |
| 3090 | 76 | 1,993 | 52 | 21 | 37 | 122 |
| 3100 | 74 | 1,771 | 94 | 1 | 73 | 146 |
| 3110 | 115 | 3,897 | 326 | 18 | 49 | 104 |
| 3120 | 75 | 3,239 | 394 | 9 | 61 | 52 |
| 3131 | 129 | 5,379 | 1,186 | 72 | 285 | 90 |
| 3132 | 97 | 3,685 | 358 | 37 | 212 | 150 |
| 3141 | 90 | 5,320 | 1,212 | 100 | 255 | 83 |
| 3142 | 94 | 3,397 | 608 | 65 | 202 | 65 |
| 3150 | 98 | 3,563 | 341 | 49 | 235 | 109 |
| 3160 | 71 | 2,430 | 126 | 16 | 48 | 81 |
| 3170 | 125 | 5,523 | 542 | 40 | 310 | 161 |
| 3181 | 73 | 3,256 | 275 | 22 | 181 | 108 |
| 3182 | 83 | 3,170 | 229 | 15 | 275 | 95 |
| 3190 | 131 | 4,994 | 635 | 104 | 359 | 51 |
| 3201 | 141 | 5,295 | 331 | 83 | 133 | 49 |
| 3202 | 129 | 4,873 | 237 | 57 | 436 | 46 |
| 3211 | 139 | 4,450 | 275 | 4 | 89 | 124 |
| 3212 | 98 | 4,087 | 377 | 60 | 280 | 142 |
| 3231 | 78 | 3,181 | 251 | 17 | 203 | 239 |
| 3232 | 111 | 4,607 | 698 | 104 | 325 | 80 |
| 3240 | 88 | 3,018 | 344 | 31 | 151 | 154 |
| 3250 | 99 | 3,910 | 681 | 42 | 209 | 183 |
| 3261 | 71 | 2,591 | 342 | 2 | 102 | 43 |
| 3262 | 90 | 3,433 | 424 | 35 | 73 | 75 |
| 3291 | 146 | 3,719 | 695 | 81 | 133 | 598 |
| **India Total** | **3,744** | **1,45,449** | **17,012** | **1,758** | **7,740** | **5,167** |
| 3220 | 66 | 1,864 | 251 | 71 | 201 | 76 |
| 3271 | 82 | 1,490 | 267 | 40 | 16 | 13 |
| 3272 | 162 | 2,897 | 409 | 38 | 37 | 38 |
| 3281 | 206 | 5,642 | 815 | 122 | 93 | 188 |
| 3282 | 143 | 4,079 | 445 | 85 | 48 | 41 |
| 3292 | 119 | 4,540 | 677 | 119 | 119 | 109 |
| **S Asia Total** | **4,522** | **1,65,961** | **19,876** | **2,233** | **8,254** | **5,632** |

*Source: RI South Asia Office*

# கதக்
# கலாசாரங்களின் சங்கமம்

சீதா ரத்னாகர்



நான் சிறிய குழந்தையாக இருந்தபோது, என் வீட்டுக்கு பிரபல கதக் நாட்டியக் கலைஞரும் நாட்டிய ஆசிரியருமான கோபிகிருஷ்ணா வந்தது நினைவுக்கு வருகிறது. அக்காலத்தில் "ஜனக் ஜனக் பாயில் பாஜே" என்ற வெற்றிப் படத்தின் கலைஞர்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்தவர் அவர்தான். அவரே திரைப்படத்தில் தோன்றி நாட்டியமாடி அசத்தியிருக்கிறார்.

அதே போல் 1960ம் ஆண்டில் வெளியான "மொஹல்-இ-ஆஸம்" என்ற சரித்திரப் படத்தில் இடம் பெற்ற கதக் நாட்டியம் நினைவுக்கு வருகிறது. கதக் நாட்டியத்தில் இடம்பெறும் அழகான ஆடை அலங்காரங்கள், அபிநயங்கள், முத்திரைகள், கண்களில் ததும்பும் ரசங்கள், கால் விரலில் நின்றபடியே சுழன்று ஆடும் அற்புதம் ஆகியவை இன்னும் மனத்தில் நிழலாடுகின்றன. அதையடுத்து, எனக்கு கதக் மீதான ஆர்வம் பலமடங்கு அதிகரித்தது. பண்டிட் பிர்ஜு மகராஜ், குமுதினி லக்கியா, உமா சர்மா, ராணி கர்ணா, ஷோவன் நாரயண், மறைந்த பண்டிட் துர்காலால் என பல நாட்டிய மேதைகளின் அற்புதமான நிகழ்ச்சிகளைக் காணும் நல்ல வாய்ப்பு கிடைத்தது.

கதக் நாட்டியத்தின் உள்ளார்ந்த அழகு ஒரு தாஜ்மகாலின் வெவ்வேறு கோணங்களைக் காண்பது போல ரசிக்கத் தக்கது. அந்த நாட்டியத்தில் உள்ள மிக நுட்பங்களும் சீரான ஜதிகளும் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்ட நுட்பமான கலைவண்ணத்தைப் போல் இருந்தன.

17ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிந்தி சூஃபி கவிஞர் ஷா ஆஸாத் ரிஸ்வி (Shah Asad Rizvi), கதக் என்பது அற்புதமான கதையை விவரிப்பது போன்ற நாட்டியக் கலை. அதில் உதடுகளே கவி பாடும். கற்பனைகள் ஜொலிக்கும். ஆத்மாவையே தொட்டுவிடும் என்கிறார்.

இந்தியாவில் ஒவ்வொரு சாஸ்திரீய நாட்டியமும் தனித்துவம் வாய்ந்தவை. கதக் என்ற சொல் சமஸ்கிருத சொல்லான கதா அதாவது கதை என்பதிலிருந்து வந்தது



*கதக் நாட்டியத்தின் உள்ளார்ந்த அழகு ஒரு தாஜ்மகாலின் வெவ்வேறு கோணங்களைக் காண்பது போல ரசிக்கத் தக்கது.*

என்கிறார்கள். அதாவது கிரேக்க மேடை நாடக பாணியைப் போல கதை சொல்வது தான் கதக். கதாசிரியர்களும், கவிஞர்களும் புராணம், இதிகாசம் ஆகியவற்றிலிருந்து ஏதாவது கதைகளை கவிதை, நாட்டியம், இசை வடிவில் எடுத்துச் சொல்வதுதான்.

கதக் நாட்டியம் பக்தியைப் பரப்புவதற்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பெருமையைக் கதை வடிவில் கூறும் கலை நிகழ்ச்சியாகத் தொடங்கி, தொடர்ந்து வளர்ந்தது. 16, 17ம் நூற்றாண்டுகளில் அது மெல்ல மெல்ல மாற்றம் பெற்று, மொஹலாயர் காலத்துக்கு ஏற்ப வடிவம் பெற்றது. பாரசீக மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் கதைகளும் இதில் இடம்பெற்றன. பிரிட்டிஷ் ஆட்சியில், நாட்டின் மற்ற பாரம்பரியக் கலைகளைப் போலவே கதக் மங்கத் தொடங்கியது. சுதந்திரம் பெற்ற பிறகே இந்து முஸ்லிம் பண்பாடுகள் இணைந்த வடிவத்துடன் எழுச்சி பெற்றது.

கதக் நாட்டியம் வாரணாசியில் தோன்றி லக்னோ, ஜெய்ப்பூர் ஆகிய வட மாநிலங்களில் பரவியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பனாரஸ் கரானா என்ற வகை நாட்டியமே மிகத் தொன்மையானது என்றும் சொல்கிறார்கள். புகழ்மிக்க நாட்டியக் குடும்பத்தில் பிறந்த ஜானகி பிரசாத் என்பவரின் நாட்டியத்திலிருந்து கதக் நாட்டியத்தின் முக்கிய அம்சங்கள் உருவாக்கப்பட்டன என்கிறார்கள்.

லக்னோ பாரம்பரிய நாட்டிய வடிவம் அலகாபாத் அருகில் ஹண்டியா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரி என்ற பக்தரால் உருவாக்கினார். ஸ்ரீ கிருஷ்ணன் அவரது கனவில் தோன்றி நாட்டியக் கலையை வளர்க்கும்படி கேட்டுக் கொண்டதாகவும் அதனால், ஈஸ்வரி தனது வழித்தோன்றல்களுக்கு

நாட்டியத்தைக் கற்றுத் தந்ததாகவும் கூறப்படுகிறது. ஈஸ்வரியின் வழித்தோன்றல்கள் ஆறு தலை முறைகளாக அதை வளர்த்து வந்துள்ளனர்.

பிந்தாதின் மகராஜ் என்பவரும் அவரது சகோதரர் காலிகா பிரசாத் என்பவரும் கதக் நாட்டியத்துக்குப் புத்துயிர் கொடுத்து பரப்பினர்.

ஜெய்ப்பூரைச் சேர்ந்த பானுஜி என்ற சிவ தாண்டவ நாட்டியக் கலைஞர் பிருந்தாவனம் சென்று கிருஷ்ணனை தரிசித்த போது ஏதோ உள்ளுணர்வினால் தூண்டப்பட்டார். தனது பேரன்கள் லாலுஜி, கானுஜியுடன் ஜெய்ப்பூர் திரும்பிய பிறகு கதக் நாட்டியத்தில் பயிற்சி தரத் தொடங்கினார். அவர் வடிவமைத்து வழங்கிய ஜெய்ப்பூர் கதக் நாட்டிய வகைகளின் மூலக்கரு பாகவதத்திலிருந்து எடுக்கப்பட்டவை. ராதை-கிருஷ்ணனின் காதலை ஜீவாத்மா, பரமாத்மா ஆகியவற்றின் உறவாகச் சித்திரிக்கப்பட்டன.

மொகலாயர் காலத்தில் கதக் நாட்டியம் அரசவையில் உயர் குடி மக்களின் பொழுதுபோக்குக் கலையாக மாறியது. பக்திக்குப் பதிலாக சாதாரண நிகழ்வுககளே இதற்கான கதைக் கரு. இதில் கதைக்கருவுக்கு முக்கியம் குறைந்தது. தத்காரஸ் (Tatkars), தக்தஸ் (Tukdas) எனப்படும் காலால் நுட்பமாக நாட்டியம் நிகழ்த்துவது போன்ற நுணுக்கங்கள் முதன்மை பெற்றன.

அதன் பின் பல்வேறு கலாசாரங்களின் தாக்கங்கள் கதக் நாட்டியத்தை மாற்றின. சுழன்று ஆடுவது, ஜொலிக்கும் ஆடை அலங்காரங்கள், முகத்திரை அணிவது ஆகியவை இடம்பெற்றன. ஆனால், காலனி ஆதிக்கத்தில் ஆட்டக்காரிகளுக்கான கலை என்று ஒதுக்கப்பட்டது. இதனால் கதக் கலை மங்கியது. சுதந்திரத்துக்குப் பிறகு நாடு முழுதும் பிரபலமடைந்தது.

நவீன வடிவம் பெற்ற கதக் நாட்டியம் மேடையில் மூன்று கட்டமாக நிகழ்த்தப்படுகிறது. முதலில் வந்தனா (vandana) எனப்படும் வணக்கம். இதில் இறை வணக்கம், குரு வணக்கம், இசைக்கலைஞர்களை வாழ்த்துதல் ஆகியவை இடம்பெறும். அடுத்த கட்டம், தாத் (Thath) எனப்படும் கண்களில் பாவங்களை வெளிப்படுத்தி, கற்பனைத் திறனைக் காட்டுவதில் தொடங்கும். மெல்ல மெல்ல கைகள் அபிநயம் பிடிக்கும். படிப்படியாக உடல் முழுவதும் நாட்டியத் திறமையைக் காட்டும். முழுமையான நாட்டியம் நிகழ்த்தப்பட்டு கடைசி கணத்தில் நாட்டியக் கலைஞர் சிலை போல் உறைந்திருப்பார். சில சமயம் நாட்டியக் கலைஞர் அரங்கில் உள்ள ரசிகர்களுடன் உரையாடவது போல நடனம் அமையும். இது படந்த் (Padhant) எனப்படும்.

மூன்றாவது கட்டத்தில் தத்கார் (Tatkar) எனப்படும் கால்களால் நடிக்கும் அற்புதம்.

அப்போது நடனக் கலைஞர் கால்களில் அணிந்திருக்கும் சலங்கையின் மணிகள் ஒவ்வொன்றும் தபலா இசைக்கு ஏற்ப ஒலி எழுப்பும். மிகச் சிறந்த தேர்ச்சி பெற்ற கலைஞர்கள்இதில் தங்களது திறமையைக் காட்டி வெற்றி பெறுவர்.

சிறு அசைவில் தொடங்கி மிகப் பிரம்மாண்டமானதாக நிகழ்த்தப்படுவதுதான் கதக் நாட்டியத்தின் தனித்துவம் வாய்ந்த சிறப்பு ஆகும். இதில் நாட்டியக் கலைஞர் மேடை முழுவதும் சுழன்று சுழன்று சுற்றி ஆடி நிறைவு செய்வார். கலைஞரின் ஆடை அலங்காரங்களின் தோற்றமும் மிகவும் வசீகரிக்கும். இவை எல்லாம் ரசிகர்களின் பாராட்டு மழையில் கலைஞர்களை நனைக்கும்.

கதக் நாட்டியத்தில் ஊறிப் போன உலகப் புகழ் பெற்ற பாலி சந்திரா, இந்தப் பாரம்பரியம் மிக்க நாட்டியக் கலைக்குப் புதிய நுட்பங்களை அறிமுகம் செய்வது குறித்து ஆராய்ந்து வருகிறேன் என்கிறார். இவர் 25 ஆண்டுகளாக உலகம் முழுவதும் கதக் நாட்டியக் கலையை நிகழ்த்தி வருவதுடன் பெங்களூரு, துபாய், ஸ்விட்சர்லாந்து ஆகிய இடங்களில் உள்ள குருகுல் நாட்டியப் பள்ளியையும் நடத்தி வருகிறார். பாலி சந்திரா ஒரு சமூக ஆர்வலரும் கூட என்பது குறிப்பிடத் தக்கது.

மன அழுத்தம், குழந்தைகள் மீதான வன்முறை, பார்க்கின்ஸன் நோய் (Parkinson), மறதி நோய் (Alzheimer) ஆகியவற்றால் நேரும் பாதிப்புகளுக்கு நாட்டியக் கலை



*கதக் நிபுணர்*
*பண்டிட் பிர்ஜு மகாராஜ்*

எந்த வகையில் தீர்வு அளிக்கும் என்பது குறித்து எனது நாட்டியக் குழுவினர் ஆராய்ந்து வருகிறார்கள். இத்தகைய விஷயங்களில் விழிப்பு ஏற்படுத்துவதற்குக் கதக் நாட்டியத்தில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அதற்கேற்ப சில மாற்றங்களைச் செய்து வழங்கியபோது நல்ல வரவேற்பும் கிடைக்கிறது என்றார் அவர்.

புது தில்லியில் உள்ள சங்கீத நாடக அகாடமியின் ஓர் அங்கமான கதக் கேந்திரா முழுக்க முழுக்க கதக் நாட்டியத்தைக் கற்பிக்கும் நிறுவனமாகும். அத்துடன், ஹிந்துஸ்தானி வாய்ப்பாட்டு பயிற்சியும் வழங்கி வருகிறது. 1955ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனத்தின் தலைவராக லக்னோ நாட்டியப் பாரம்பரியத்தைச் சார்ந்த குரு பண்டிட் ஷம்பு மகராஜ் இருந்திருக்கிறார்.

பாவத்தை (bhava) நிகழ்த்துவதில் பிரபலமானவர் குரு ஷம்பு மகராஜ். இவர் நாட்டியத்தில் தும்ரிகள் (thumris) மற்றும் பஜனைகள் (bhajans) ஆகியவற்றைச் சேர்த்தார்.

குமுதினி லக்கியா, தமயந்தி ஜோஷி, கோபி கிருஷ்ணா, பாரதி குப்தா, மாயா ராவ், சித்தாரா தேவி ஆகிய புகழ்பெற்ற கதக் கலைஞர்கள் இவரிடம் நாட்டியம் பயின்றனர். 1970ம் ஆண்டு, அவருக்குப் பிறகு அவரது மருமகன் பிர்ஜு மகராஜ் தனது பாணியில் பயிற்சி அளிக்கிறார். அவர் 1998ம் ஆண்டு வரையில் அதன் தலைவராக இருந்து வந்தார். கோயில்களிலும் சிறிய அரங்குகளிலும் குடியிருந்த கதக் நாட்டியத்தை பெரிய நவீனகால அரங்கத்திற்குக் கொண்டு சென்று விரிவான தளத்தை அமைத்துத் தந்தார். தனிக் கலைஞரின் நாட்டியமாக இருந்த கதக் நாட்டியத்தைப் பல்வேறு கலாசாரத்தையும் ஈர்க்கும் குழு நாட்டியமாக மாற்றினார்.

அம்ஜத் அலியின் இசையோடு கிருஷ்ணகுமார் வடிவமைத்த தாஜ் கி கஹானி (Taj ki Kahani), தாகர் சகோதரர்களின் இசையில் பிர்ஜு மகராஜ் வழங்கிய ஷான்-இ-ஆவுத் (Shan&e&Audh), ஒதட்ச்ணூச் குச்ட்ஞடச்தி (குமார சம்பவா), தாலியா (Dalia) ஆகியவையும் கோவர்த்தன் லீலா (Govardhan Leela), மாக்கன் சோரி (Makhan Chori),



பாக் பாரா (Phag Bhara) ஆகியவை குறிப்பிடத் தக்க கதக் நாட்டியங்கள்.

பிர்ஜு மகராஜ் கதக் கேந்திரா கலைஞர்களைக் கொண்டு இத்தகைய நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கி உலக அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தார்.

இந்தக் காலத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள கலையுணர்வை, நுட்பம் மிக்க நாட்டியத்தை மீண்டும் கொண்டு வரும் சூழ்நிலையை உருவாக்க விரும்புகிறேன். கலை நம்மை மேம்படுத்த வேண்டும் உயர்த்த வேண்டும். கதக் கலை அதைத் தொடர்ந்து செய்து வருகிறது என்கிறார்.

இந்த நாட்டியக் கலை பாரம் பரியத்தை விட்டுக்கொடுக்காமல், காலத்துக்கு ஏற்ப வடிவத்தைப் பெற்று வருகிறது. ராதாகிருஷ்ண புராணக் கதை தொடங்கி, காளிதாசரின் காவியம், சூஃபி பாடல்கள், தும்ரிகள், நவீன கால எழுத்தாளர்களின் படைப்புகள் என காலத்துக்கு ஏற்ப எல்லாவற்றையும் வழங்கி வருகிறது.

கதக் தொடர்ந்து வாழும். அவை இறந்துவிட்டால், நாம் எங்கே இருப்போம்? எதற்காக இருக்கிறோம்? என்கிறார் சூ மோங்க் கிட். சரிதானே?

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# மிதிவண்டி வீராங்கணைக்கு ரோட்டரி ஆதரவு

கிரண் ஜெஹரா

பெண் குழந்தையைக் காப்போம், பெண் குழந்தைக்கு கற்பிப்போம் பிரச்சாரத்துக்காக விழிப்புணர்வை எழுப்பிக்கொண்டே சோம்நாத் என்ற ஊரிலிருந்து (குஜராத்) காட்மாண்டு நேபாளம் வரைக்கும் 40 நாட்களில் 5,000 கிமீ சைக்கிள் பயணத்தை மேற்கொண்ட சுனிதா சொக்கனைப் (Sunitha Choken) பற்றி பேசுகையில் ராய்கர் ஸ்டீல் சிட்டி Rtn. ஓம் பிரகாஷ் மோடி, 'ப்ராண்ட் தூதராக இருந்தால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்' என்று பெருமிதப்படுகிறார். ரேவாரி மெயின் ரோட்டரி சங்கம், D 3011ன் கவுரவ உறுப்பினரான சுனிதாவுக்கு, அவருடைய பயணத்தில் பல ரோட்டரி சங்கங்கள் வரவேற்று உற்சாகப்படுத்தினர். இந்த பயணம், அவர் கடந்த வருடம் கன்னியாகுமரியிலிருந்து லே மாவட்டம் கார்டுங்கலா வரைக்குமான 4600 கிமீ வெற்றிகரமான பயணத்துக்கு அடுத்த இரண்டாவது தனியான சைக்கிள் பயணமாக இருந்தது.

சுனிதா சைக்கிள் வீராங்கணையாக அறியப்படுவதற்கு முன்னர், மலை ஏறும் வீரராக தனது திறனை காண்பித்தார். 2011ல், 25 வயதில் அவர், ஹரியானா மாநிலத்திலிருந்து, எவெரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இளம் பெண்மணி என்ற சாதனையை புரிந்தார். இருப்பினும், அவருடைய சைக்கிள் பயணம் அவரை நாடு முழுவதுமாக பிரபலம் அடையச் செய்தது. கிஷோர்புரா எனும் ராஜஸ்தான் மாநில ஆல்வார் மாவட்டத்தின் கிராமத்தில் அவர் பள்ளியில் படிக்கையில், மலையேறுதலில் தனது ஆர்வத்தை வளர்த்து வந்தார். அதைப்பற்றி அவர் கூறுகையில், என்னுடைய பள்ளி மலையில் அமைந்திருந்ததால், எனக்கு மலை ஏற்றத்தில் ஆர்வம் ஏற்பட்டது.



*சுனிதா சொக்கன்*

இவர், இன்றளவும் கல்வியில் வெகுவாக பின் தங்கியுள்ள நாட்டுப்புற இடையர் குலமான குஜ்ஜார் இனத்தை சார்ந்தவர். “என்னுடைய சமுதாயத்தில் பால்ய விவாகம் என்பது இன்னமும் நடைமுறையில் உள்ள வழக்கமாக உள்ளது. ஆக இந்த நடைமுறையை நீக்க வேண்டி நான் ஏதாவது செய்ய வேண்டும் என முடிவு செய்தேன்'' என்கிறார் சுனிதா. சுனிதாவின் இளம்பருவத்தில், இரு மாத பச்சிளம் குழந்தை ஒன்றுக்கு பால்ய விவாகம் செய்யப்பட நிகழ்வு அவருடைய மனத்தை மிகவும் பாதித்துவிட்டது. “அந்த பெண் குழந்தையை ஒரு அலங்கரிக்கப்பட்ட தட்டில் வைத்து, அக்னி குண்டத்தினை சுற்ற வைத்து, ஒரு ஆண் குழந்தையோடு மனம் முடித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வானது என்னுடைய மனதில் இன்னமும் பசுமையாக நினைவில் உள்ளது'' என்று வேதனைப்படுகிறார் சுனிதா.

2016ல் பெண்கள் சக்தி விருதுவினால் (நாரி சக்தி புரஸ்கார்) கவுரவிக்கப்பட்ட இவர், பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக, தனது சமுதாயம் மற்றும் உறவினர்களோடு பல தடவை போராட வேண்டியிருந்தது. பால்ய விவாகங்களை நிறுத்த காவல் துறையை நாடினால் “ சமுதாயம், என்னை மற்றும் என்னுடைய குடும்பத்தை இவ்வாறான வைபவங்களுக்கு அழைக்காது மேலும் இரகசியமாக நடத்தி விடுகின்றனர். அதனால் நான் ஆரம்பநிலை பள்ளிகளுக்கு சென்று, பெற்றோர்களையும் சந்திக்க ஆரம்பித்தேன். நான் அவர்களிடம்,

பெண்களுக்கு கல்வியறிவு கொடுக்கச் சொல்லி, அவர்கள் எந்த அளவுக்கு சாதிக்கமுடியும் என்பதைப் பற்றி பேசி வருகிறேன். என்னுடைய உதாரண த்தையும் முன் வைக்கிறேன்.

இந்த பயணத்தின் மூலமாக சிறுமிகளுக்கு அவர் ஒரு செய்தியை பகிர்ந்து கொள்ள விரும்புகிறார் "உங்கள் ஒவ்வொருவரிடமும் சிறப்பான சக்தி இருப்பதால், நீங்கள் கனவை காணுங்கள் மேலும், அவற்றை நனவாக்கும் தைரியத்தை கொண்டிருங்கள்'' எவெரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக தொட்ட பிறகு ரேவாரி மெயின் ரோட்டரி சங்கத்தின் ஒரு கூட்டத்தில் இவர் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். "என்னுடைய இரண்டாவது சைக்கிள் பயணத்துக்கு ஒரு மாதம் முன்னர் என்னை கவுரவ உறுப்பினராக சேர்க்கப்பட்டேன்,'' என்று உற்சாகமாக கூறுகிறார் சுனிதா. அவருடைய முதல் பயணத்தில் பசுமை இந்தியா என்ற பிரச்சாரமாக இருந்தது. அந்த பயணத்தில் அவர், பல்வேறு நகரங்களில் 200க்கு மேலான செடிகளை நட்டார். அந்த பயணம், அவரை கன்னியாகுமரியிலிருந்து



*சுனிதா சொக்கன் RC ராய்கர் ஸ்டீல் சிட்டி உறுப்பினர்களுடன்.*
*கீழே: நேபால் பசுபதிநாத் கோவில் வளாகத்தில்.*




கார்டுங்கிலாவுக்கு தனியாக பயணித்த பெண் சாதனையாளர் என ஆக்கியது.

எனக்கு ரோட்டரியை பற்றி அவ்வளவாக ஏதும் தெரியாது. என்கிறார் சுனிதா. இருப்பினும், அப்போதே, தருமபுரி மற்றும் பெருங்குடியின் மூன்று ரோட்டரி சங்கங்கள் அவருடைய பயணத்தைக் பற்றி அறிந்து அவருக்கு உதவ முன்வந்தன. "அவர்கள் என்னோடு மிகவும் இதமாகவும், என்னுடைய நோக்கத்துக்கு ஆதரவாகவும் இருந்தது என்னை வெகுவாக கவர்ந்தது, நான் அவர்களை அறிந்திருக்கவில்லை, அவர்கள் தாமாகவே, எனக்கு உதவ முன் வந்தனர்.'' ரேவாரி மெயின் சங்கம் என்னுடைய பயணத்தை கொடி அசைத்து துவக்கி வைத்த போது "என் மீது இவ்வளவு கவனம் செலுத்து வார்கள் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. என்னை அவர்களது குழந்தை போலவே அன்போடு கவனித்துக்கொண்டார்கள்''

இவருக்கு, ரோட்டரி மீது ஒரு சிறப்பான பற்று ஏற்பட்டுள்ளதைப் பற்றி அவர் கூறுகையில் "சில வேளைகளில், என்னுடைய இறுதி இலக்குக்கு 20 கிமீ முன்னாலே, ரோட்டரி நண்பர்கள், என்னை வாழ்த்துவதற்கு குழுமியிருப்பார்கள். அவர்களுடைய இல்லங்களில், எனக்கு அருமையான வீட்டில் தயாரித்த உணவை பரிமாறுவதோடு, என்னுடைய, துணிகளை இரவோடு இரவாகவே சலவையும் செய்து, என்னுடைய சைக்கிளை பழுது பார்த்தல் உள்ளிட்ட அனைத்தையும் நான் கேட்காது அவர்களாகவே செய்து தருவது என்னை மிகவும் பரவசத்தில் ஆழ்த்திவிடும். அவர்களின் முதல் சந்திப்பில், அவர்கள் இந்த சேவையெல்லாம் அளிப்பது நம்மை மிகவும் உற்சாகம் அளிக்க வைக்கிறது. இவருடைய இதயத்தில், ரோட்டரியின் சேவை மனதில் பதிந்தது, அவர்கள் 2001ல் குஜராத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பிரமாண்டமான நிவாரண பணி, நான் நிலநடுக்கத்துக்கு பின்னர் அமைக்கப்பட்ட ரோட்டரி கிராமம் மற்றும் பள்ளிக்கு விஜயம் செயதேன், ரோட்டரி நண்பர்கள் மிக அற்புதமான பணியை செய்த்துள்ளார்கள்.

இவரை வரவேற்றும் ரோட்டரி சங்கத்தின் இடவமைவுக்கு ஏற்றவாறு, இவருடைய பயணத் தடங்களை அவ்வப்போது மாற்ற வேண்டியிருந்தது. இந்த தடவை, இவர் தனது பயணத்தில், ரோட்டரி நண்பர்களோடு இணைந்து, ஏறக்குறைய 7000 செடிகளை நட்டிருக்கிறார். "ரோட்டரியின் சக்தி இந்த பயணத்தை நான் வெற்றிகரமாக நிறைவேற்ற உதவியது. என்னால் பெண் குழந்தையைக் காப்போம், பெண் குழந்தைக்கு கற்பிப்போம் மற்றும் பசுமை இந்தியா திட்டங்களுக்கு பிரச்சாரம் செய்ய முடிந்தது.■

# பார்வையற்றோருக்கும் கல்விக் கண் தரும் பூங்கா!

ஜெய்ஸ்ரீ

கேரள மாநிலம் மலைப் பகுதி கிராமத்தில் உள்ளது மங்கடா பூங்கா. இது மற்ற பூங்காக்களைப் போல அல்ல. புதுமையான பூங்கா. இங்கேயும் சிறுவர்கள் விளையாடலாம். அதே சமயம் கணிதத்தையும் விளையாட்டாகக் கற்றுத் தேர்ச்சி பெறலாம். என்ன வியப்பாக இருக்கிறதா? சுவரில் அபாகஸ் உபகரணங்கள் இடம்பெற்றுள்ளன. சுற்றுச் சுவரில் வடிவியல் மற்றும் கணித சமன்பாடுகள் (Equations) விடைகள், உலக வரைபடம், இந்திய வரைபடம் முதல் உள்ளூர் மலப்புரம் வரைபடங்கள் சுவரில் புடைப்பாக பொறிக்கப்பட்டுள்ளன. எல்லாமே பார்வையற்றோர் தடவிப் பார்த்துப் புரிந்து கொள்ளும் “ப்ரெய்லி” (Braille) முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சரியாகச் சொல்லப் போனால், தொடுவுணர்ச்சியில் கற்பிக்கும் பூங்கா (Tactile Pedagogy park) இது. அதாவது, இந்தப் பூங்காவில் பாடத்தைத் தொட்டுத் தடவி புரிந்து கற்றுக் கொள்ளலாம். பார்வையற்றோருக்காகத் தனியாக மஞ்சேரி ரோட்டரி சங்கம் (D 3202) உருவாக்கியுள்ளது.

“பார்வையற்றவர்கள் ஏன் இந்தப் பூங்காவின் இதமான காற்றையும் பூக்களின் வாசத்தையும் பறவைகளின் இன்னிசையையும் அனுபவிக்கும்போது, ஊஞ்சலில் ஆடிக் கொண்டே கணிதம், புவியியல் எல்லாம் கற்க ஏன் கற்றுக் கொள்ள வழி செய்யக் கூடாது?” என்ற சிந்தனையின் விளைவே இந்தப் பூங்கா என்கிறார் ரோட்டரி சங்கத் தலைவர் டாக்டர் MJ சுஜித். இந்தச்

*IPDG PM சிவசங்கரன் டேக்டைல் பெடகோஜி பூங்காவை திறந்து வைக்கிறார். RC மஞ்சேரி தலைவர் Dr MJ சுஜித்தும் உடன் உள்ளார்.*



சிறப்புப் பூங்காவைப் பற்றி அவர் விவரிக்கிறார்.

நகரில் உள்ள பார்வையற்றோர்க்கான சிறப்புப் பள்ளியின் ஆசிரியர்களுடன் கல்வி கற்பது குறித்து ரோட்டரி சங்கத்தினர் நடத்திய மும்முரமான விவாதங்களுக்குப் பின்னர் உருவானதுதான் இந்தப் பூங்கா. அந்தப் பள்ளியை நடத்தி வருபவர் முன்னாள் ராணுவ வீரர் சந்திரசேகரன் நாயர். ஒரு போரில் நாயர் குண்டு வெடிப்பில் சிக்கி, பார்வை இழந்தார். அவருக்கு ராணுவம் சிறப்புப் பயிற்சி அளித்தது. பணியிலிருந்து விடுபட்டு ஊர் திரும்பியதும் பார்வையற்றோர் சிறப்புப் பள்ளியைத் தொடங்கினார். இப்போது 83 பேர் படிக்கிறார்கள்.

நாயர் பார்வையற்றோர் எளிதில் படிப்பதற்காக புதிய சிந்தனைகள், வழிவகைகளைக் காண முயல்பவர். இது குறித்து விவாதித்தபோது, சிறுவர்கள் விளையாட்டோடு கல்வி கற்றுக் கொள்ளும் வகையில் சிறப்புப் பூங்கா அமைக்கும் திட்டம் உருவானது.

இந்தப் பூங்காவை அப்துல்லா என்ற கட்டடக் கலை வல்லுநர்





வடிவமைத்துள்ளார். எங்களைப் பொறுத்தவரையில் குழந்தைகள் இந்தப் பூங்காவை முழுமையாக ரசித்து அனுபவிக்க வேண்டும். கற்கவும் வேண்டும். உலகையே தங்களது தொடு உணர்ச்சியின் மூலம் காண வேண்டும் என்பதுதான் என்கிறார் சங்கத் தலைவர்.

இந்தப் பூங்காவின் கட்டுமானப் பணிகளை MS சேஷன் என்பவரது தலைமையிலான தனிக் குழு கண்காணித்து புதிய சிந்தனைகளைச் செயல்படுத்தி வந்தது. இதற்கு மொத்தம் ரூ.4.5 லட்சம் செலவானது. ரோட்டரி உறுப்பினர்கள் நன்கொடையிலும், சில தாராள மனம் கொண்டவர்கள் அளித்த நன்கொடையிலும் நிறைவேறியுள்ளது.

பார்வையற்றோர் பள்ளியின் முதல்வர் யாஷிர் இந்தச் சிந்தனைப் பூங்கா குறித்து பெரும் மகிழ்வோடு கூறுகிறார். சிறுவர்கள் தினமும் பூங்காவுக்குச் சென்று வகுப்புகளுக்கு வருவதால், மாணவர்கள் எல்லா வற்றையும் எளிதாகக் கற்றுக் கொள்ள முடிகிறது. இதனால், ஆசிரியர்கள் வகுப்பறையில் பாடத்தை நடத்தும் போது, மாணவர்கள் அனுபவித்துக் கற்கிறார்கள் என்றார்.

பார்வை இல்லாவிட்டாலும் சிறுவர்களின் கனவு விரிவானது தான். 9வது படிக்கும் ஹாரூண் கரீம் பார்வைக் குறைபாடு உள்ளவர். தான் ஒரு கம்ப்யூட்டர் என்ஜினீயராக வேண்டும் என்று மகத்தான கனவு கொண்டிருக்கிறார்.

பள்ளியின் திட்ட தொடர்பாளர் பாரத் தாஸ் விரல்கள் கணிப்பொறியில் விளையாடுவதைப் பார்க்கலாம். தனக்கென யு டியூப் அலைவரிசையை (YouTube channel) வைத்திருக்கிறார். அவரைப் போல் ஒவ்வொரு குழந்தையும் திறமைசாலிகள். அவர்களது அறிவை மேம்படுத்த நாங்கள் மேற்கொண்டுள்ள எளிய பணியில் ரோட்டரி இணைந்து வழிகாட்டியுள்ளது.

இந்தப் பூங்காவை மாவட்ட ஆளுநர் PM சிவசங்கரன் கடந்த ஜூன் மாதம் திறந்துவைத்தார். இத்திட்டம் புதுமையானது என்று கேரள மாநில கல்வி ஆராய்ச்சி கவுன்சில் அங்கீகரித்துள்ளது. மாநில கல்வி மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம் இந்தப் பூங்காவை மாநிலத்தின் சிறந்த மூன்று புதுமையான பயிற்சி முறைகளில் ஒன்று என்று அறிவித்துள்ளது என்று தாஸ் கூறினார்.

இந்தப் பள்ளிக்கு ரோட்டரி சங்கம் ஏற்கெனவே மின்சாரக் கம்பிகளையும் குடிநீர் வசதிகளையும் வழங்கியுள்ளது. TRF, RC கனடா ஆர்லாண்டோ ஆகியவற்றின் நிதியுதவியில் சென்னை IIT நிறுவனம் வடிவமைத்த கணிப்பொறிகளையும் ஒலி நூலகத்தையும் (Audio library) அளித்துள்ளது.

இவை தவிர, நீச்சல் குளம் அமைக்கப்பட இருக்கிறது. அத்துடன் குழந்தைகளுக்கு கிண்டில் கையடக்கக் கணினிகள் (Kindle tabs) அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.■

# காக்கினாடாவில் ரோட்டராக்டர்கள், ரோட்டரி தலைவர்கள் ஆகிறார்கள்

V முத்துக்குமரன்

ரோட்டராடக்டர்கள், தண்ணீருக்குள் வாத்து நுழைவது போல ரோட்டரியன்கள் கடமை புரிகிறார்கள் என்ற வழக்கமாக உலவும் கருத்துக்கு மாறாக, RC காக்கினாடா, D 3020, அதன் (IPP) சோடவர்பு மூர்த்தி தலைமையிலான குழு, கடந்த ஆண்டின் பிளாட்டினம் ஜுபிளி விழாவை ஆண்டு முழுதும் கொண்டாடியது.

அதுமட்டுமல்ல, இந்த சங்கம் கடந்த 75 வருடங்களாக இரண்டு மாவட்ட கவர்னர்களை உருவாக்கி 10 சங்கங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் காக்கினாடா மக்களுக்கு அதிக உதவி கிடைத்த வகையில் அமைந்தது PDG டிக்கு என்கிற லக்கராஜு சத்யநாராயண் கூறுகிறார். ஒரு சரித்திர நிகழ்வாக ரோட்டரி இயக்கத்தின் கோல்டன் ஜுபிளி அனுசரிப்பையும் எமது கிளப்பின் பிளாட்டினம் ஜுபிளி கொண்டாட்டத்தையும் பல திட்டங்களுடன் 2017 ஆண்டு ஜூலை முதல் கைக்கொண்டோம்.

சங்கத்தில் 66 உறுப்பினர்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை புரிந்துள்ளனர். இவர்களில் நாற்பது பேரை, கௌரவிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கடந்த கால நினைவுகள் மற்றும் ரோட்டரி உறுப்பினராக இருக்கும் போது மறக்கமுடியாத தருணங்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். PDG ரவிவட்லமனி மற்றும் அவரது துணைவியார் ராஜலஷ்மி ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக பங்கு கொண்டனர்.

மாவட்டத்தில் TRFக்கு வழங்குவதில் இரண்டாவதாக திகழும் நிலையில், RRFC அவினாஷ் போட்டார் தலைமையில் பவுன்டேஷன் கருத்தரங்கு நடத்தப்பட்டது. 700 பேர் இதில் பதிவு செய்ததன் மூலம், எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு பெரிய ஊக்கம் தந்ததனால் இது ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது.

கல்லூரி மாணவர்களுக்காக ஆளுமை மேம்பாடு மற்றும் வேலை



வாய்ப்பு வழிநடத்தல் பயிற்சி, உலக போலியோ தினம் அனுசரிப்பு தொடர்பாக பிளாஷ் மாப் (flash mob) மற்றும் சங்கங்களுக்கிடையேயான ஒரு டென்னிஸ் விளையாட்டுப் போட்டி ஆகியவை இதர நிகழ்ச்சிகளாகும். ரோட்டராக்ட்டின் 50வது ஆண்டு அனுசரிப்பு தொடர்பாக நடத்தப்பட்ட ஒரு நிகழ்வில் கடந்த கால DRR களையும் சங்கம் கௌரவித்தது.

2014-15ம் ஆண்டில் ரூ.2 கோடி செலவில் ஒரு சுடுகாடு ஏற்படுத்தப் பட்டது சங்கத்தின் சாதனைத் திட்டங்களில் ஒன்றாகும். இது காக்கினாடாவின் மூன்று சங்கங்களின் கூட்டு முயற்சியாகும் என்கிறார் டிக்கு. சங்கம் தத்து எடுத்துக் கொண்ட நேதாஜி முனிசிபல் பள்ளி, விளையாட்டுப் பொருள்கள், பெஞ்சுகள், டெஸ்க்குகள், கை அலம்பும் மையம் போன்ற வசதிகளை "மகிழ்ச்சிப் பள்ளி" திட்டத்தின் கீழ் நன்கொடையாக பெற்று பெரும் பயன் அடைந்தது.

*இந்த சங்கம் கடந்த 75 வருடங்களாக இரண்டு மாவட்ட கவர்னர்களை உருவாக்கி 10 சங்கங்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் காக்கினாடா மக்களுக்கு அதிக உதவி கிடைத்த வகையில் அமைந்தது.*

PDG 'டிக்கு' லக்கராஜு சத்யநாராயண்

### ஒரு நூதன ஹேட்ரிக்

கடந்த கால தலைவர் மூர்த்தி மட்டுமின்றி, இரண்டு முன்னாள் ரோட்டராக்டர்களான Y ஜகன் மற்றும் V பகவான் ஆகியோர் தற்போதைய ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டும் தலைமை ஏற்று நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ■

# பள்ளியை மேம்படுத்திய ரோட்டரி

ரோட்டரி செய்திக் குழு

உடுப்பியில் விஸ்வஜனனீனா அறக்கட்டளை (Vishwajaneena Trust) மாற்றுத் திறனாளிகளுக் காக நடத்திவரும் சுமேதா என்ற பள்ளியில் 2,800 பேர் மன வளர்ச்சி குறைந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் அவர்களில் 1,300 பேர் 14 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு திறன் பயிற்சி தரப்பட வேண்டும்.

நூறு குழந்தைகளுக்காக 2007ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் போதிய வசதிகள் இல்லாததால், 50 பேர் மட்டுமே தங்கவைக்கப்பட்டுள்ளனர். அந்தக் கிராமத்தில் மேலும் தங்களது குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளும்படி ஏராளமானோரிடமிருந்து வந்த வேண்டுகோளை அடுத்து, உடுப்பி ரோட்டரி சங்கத்தினர் (D 3182) போக்குவரத்து, பயிற்சி அளிப்பதற்கான வசதிகள் (Teaching Aides), மேசை நாற்காலிகள், உடலியல் உபகரணங்கள் (Physio Care equipment), கம்ப்யூட்டர்கள் வழங்குவதற்காக கோரிக்கையை TRFக்கு விடுத்தனர்.

இந்தக் கிராமத்தினர் பெரும்பாலும் விவசாயிகள். குழந்தைகளை நீண்ட தூரம் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுப்ப அவர்களிடம் போதிய வசதி இல்லை. அதனால் இந்தப் பள்ளிதான் தங்களது குழந்தைகளை தயார்ப்படுத்த வேண்டும் என்று உடுப்பி ரோட்டரி சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ராமச்சந்திர உபாத்யாயா கூறினார்.




DG *அபிநந்தன ஷெட்டி பேருந்தின் சாவியை விஷ்வஜணின அறக்கட்டளை தலைவர் விஷ்வப்ரசன்ன தீர்த்த சுவாமிகளிடம் கொடுக்கிறார்.* IPDG G N *ப்ரகாஷ் அவர்களும் உடன் உள்ளார்.*

அமெரிக்கா, பென்சில்வேனியா வில் உள்ள சென்ட்ரல் செஸ்டர் கவுண்ட்டி ரோட்டரி சங்கம் (D 7450), TRF ஆகியவற்றின் உலகளாவிய நிதியுதவியில் இப்பள்ளிக்கு இரு பேருந்துகள், போதிய மேசை நாற்காலிகள், உடலியல் உபகரணங்கள், சிகிச்சை உள்ளிட்டவற்றுக்கான இதர உபகரணங்கள், கம்ப்யூட்டர்கள் மொத்தம் ரூ.30 லட்சம் செலவில் வாங்கி அளிக்கப்பட்டன.

உடுப்பியைப் பூர்விகமாகக் கொண்டு தற்போது வெளிநாட்டில் உள்ள சங்கத்தைச் சேர்ந்த வசந்த் பிரபு மற்றும் மாவட்ட ஆளுநர் அபிநந்தன் ஷெட்டி ஆகியோர் இந்த சாதனங்கள், உபகரணங்களை அறங்காவல் குழுத் தலைவர் விஸ்வபிரசன்ன தீர்த்த சுவாமிஜியிடம் அளித்தனர்.■



**RC மத்திய சிதம்பரம் — D 2981**

கோடிப்பள்ளம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மொத்தம் ரூ.8,200 செலவில் சிற்றுண்டி சிறு பெட்டிகள் வழங்கப்பட்டன. மொத்தம் ரூ.75 ஆயிரம் செலவில் அங்குள்ள நந்தனார் அரசு பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களும், காச நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

**RC விழுப்புரம் — D 2982**

கோண்டாங்கி கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாத்திரங்கள், எரிவாயு அடுப்புகள், படுக்கை விரிப்புகள், சிறுவர்களின் கல்விக்காக நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில்கள் வழங்கப்பட்டன.






**RC மன்மாடு — D 3030**

டோன்கான் கிராமத்தில் உள்ள பள்ளி மாணவர்களைச் சேர்ந்த 80 சிறுவர்களுக்கு சீருடைகள், ஷூக்கள் ஆகியவற்றை மாவட்ட ஆளுநர் ராஜீவ் சர்மா வழங்கினார்.

**RC பெரியகுளம் — D 3000**

JA மகளிர் கல்லூரியில் ரத்த தான முகாம் நடத்தப்பட்டது. அதில் மாணவர்கள் ஏராளமானோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரத்தம் அங்குள்ள அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.



# சங்க சேவைகள்

**RC சூரத் ரவுன்டவுன் — D 3060**

32 ஏழைப் பெண்களுக்கு அழகுக்கலையில் பயிற்சி பெற ஏற்பாடு செய்தது. இந்த உதவி பெண்களுக்கு ஒரு வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொள்ள பயன்படும்.



**RC கோரயா — D 3070**

கோராயா அருகில் சன் தேசியன் கிராமத்தில் மாணவர்கள் கை கழுவுவதற்கான வசதிகள் செய்து தரப்பட்டன. கைகளைச் சுத்தமாக வைத்திருப்பது, தூய்மைப் பராமரிப்பு ஆகியவை குறித்து மாணவர்களிடையே செயல் விளக்கம் நிகழ்த்தப்பட்டது.



**RC பத்ராசலம் — D 3150**

நகரில் உள்ள தடாகுடி மையம் பள்ளியில் உள்ள நூலகத்துக்கு மொத்தம் ரூ.14 ஆயிரம் மதிப்பில் 500 கம்ப்யூட்டர் புத்தகங்கள் வழங்கப்பட்டன. ரோட்டரி சங்கத் தலைவர் S சைதன்யா உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**RC அல்லகட்டா சதாப்தி — D 3160**

நகரில் உள்ள பள்ளிக்கு மகிழ்ச்சிப் பள்ளித் திட்டத்தின் கீழ் நாற்காலிகள், மேசைகள் உள்ளிட்ட மரச்சாமான்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிகழ்ச்சியில் பள்ளியின் ஆசிரியர்கள் ரோட்டரி அமைப்பினரைப் பாராட்டினர்.







**RC புத்தூர் — D 3181**

1998ம் ஆண்டு நிறுவப்பட்ட ரோட்டரி கேம்ப்கோ ரத்த வங்கி பொன் விழாவை ஒட்டி, ரூ.85 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தம்பா நூன் ரோட்டரி சங்கம் (D 6890), TRF ஆகியவற்றின் உலகளாவிய நிதியில் செல் பிரிப்பு மையம் நிறுவப்பட்டது.



**RC ஷிமோகா மிட் டவுன் — D 3182**

சூகூர் கிராமத்தில் சாலைப் பாதுகாப்பு, விபத்து தடுப்பு குறித்தும் தலைக்கவசம், கார்களில் பெல்ட் அணிந்து கொள்வதன் அவசியத்தையும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரணியை அங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நடத்தினர்.



**RC பெங்களூர் தென்மேற்கு — D 3190**

பள்ளிகளில் மாணவர்களின் நலனுக்காக கண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. 12 ஆயிரம் சிறுவர்கள் பங்கேற்ற முகாம்களில் கண்களில் உள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டவர்கள் மேலும் தொடர் பரிசோதனை, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முகாமில் பலருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.




**RC மத்திய பெரும்பாவூர் — D 3201**

பெரும்பாவூர், காலாடி காவல் நிலையங்களைச் சேர்ந்த போக்குவரத்து போலீசாருக்கு மழைக் கோட்டுகள் வழங்கப்பட்டன. ரோட்டரி சங்கத் தலைவர் Dr P பிரசன்னன் இதற்கான திட்டத்தைத்தொடங்கி வைத்தார்.



**RID — 3211**

லியோ மேல்நிலைப் பள்ளியில் கைகளைக் கழுவுதல், குறித்த திட்டத்தைக் கேரள நிதியமைச்சர் Dr தாமஸ் ஐக் தொடங்கிவைத்தார். மாவட்ட ஆளுநர் EK லூக், மண்டல கைகழுவும் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் R ரகுநாத், மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாமஸ் வவனிகுன்னல் ஆகியோர் பங்கேற்றனர்.



**RC காட்பாடி — D 3231**

காங்கேய நல்லூர் கிராம அரசு மகளிர் பள்ளி மாணவியருக்கு ரோட்டரி அமைப்பினர் சூரிய ஒளி விளக்குகளை வழங்கினர், அவர்களுக்கு பற்கள் பரிசோதனை முகாமும் நடத்தப்பட்டது.



# சங்க சேவைகள்

**RC சென்னப்பட்னா — D 3232**
போரூர் பஞ்சாயத்து பள்ளியில் சங்கம் ஒரு கைக்கழுவும் வசதியை அமைத்துள்ளது. மேலும் அங்கு படிக்கும் 700 மாணவர்களுக்கு சுகாதாரம் குறித்து கற்றுத்தரப்பட்டது.



**RC மால்டா — D 3240**
மால்டா மாவட்டம் கோனாபரி, பார்போட்டா கிராமங்களில் புகையிலை தொழிற்சாலையில் பணி புரியும் 300 பெண் களுக்கு மாசுத் தடுப்பு முகமூடிகள், மால்டா நகரிக் உன்யான் சமிதி அமைப்புடன் இணைந்து முகமூடிகள் விநியோகிக்கப்பட்டன.






**RC மத்திய தன்பாத் — D 3250**
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு ஆஷ்ராய் திட்டத்தின் கீழ் ரோட்டரி உறுப்பினர்கள் தார்ப்பாய்கள், பிளாஸ்டிக் ஷீட்கள், ஆடைகள், உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை வழங்கினர்.



**RC தெற்கு ஜபல்பூர் — D 3261**
பச்பேடி கிராமத் நடுநிலைப் பள்ளியின் 100 சிறுவர் களுக்கு படிப்புக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. ரோட்டரி சங்கத்தின் மாதாந்திரத் திட்டங்களின் கீழ் மாணவர்களுக்குப் பேனா, பென்சில், புத்தகங்கள், நோட்டுகள், வழங்கப்பட்டன.



**RC போர்ட் ப்ளேர் — D 3291**
வெளிச்சத்துக்கு வராத வீரர்களைச் சிறப்பிப்பதற்காக நடத்தப்படும் திட்டத்தின் அம்சமாக அந்தமான் தீவின் முதல் பெண் ஆட்டோ டிரைவர்களான லட்சுமி மற்றும் சஹானாராவுக்கு ரோட்டரி சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. ரோட்டரி சங்கத் தலைவர் ராஜேஷ் ஆனந்த் அவர்களைச் சிறப்பித்துப் பாராட்டினார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்,
வடிவமைப்பு: L குணசேகரன்

# புயலுக்குள் வாழலாம்...

பரத் மற்றும் ஷலன் சவூர்

இதைப் படிக்கிற எல்லோரும் மனத்தைத் தளர்ச்சியாக வைத்திருங்கள் ஆன்மாவுக்குள் ஊடுருவுகிற சமாசாரம் இது. மனம் தளர்ந்துள்ள கணவனை மனைவி தேற்றுகிற மாதிரி. எதையாவது இழந்து வரும் கணவனிடம் மனைவி ஆறுதலாக, கவலைப்படாதீர்கள். நமக்கும் பணம் கிடைக்கும் என்பாரே அது மாதிரி. வாழ்க்கையில் எதுவும் நிச்சயம் இல்லை என்றாலும் இத்தகைய மன நிலை நம் மனத்திலும் பதிய வேண்டும். இந்த உணர்வு நமக்கு உத்வேகம் தரும். தக்க தருணத்தில் நமக்கு உதவும் நிலையாகும். மோசமான நிலையில் கைகொடுப்பதும் அதுவே. மன அமைதியின் மூலம் ஏற்படும் இந்த நிலைதான் சிறந்தது.

**சலனமின்றி இருங்கள்:** வாழ்க்கையில் ஏதாவது சோதனை வந்தால், வேலையில் மேலதிகாரியிடம் கண்டனத்தைப் பெறுதல், பணக் கஷ்டத்தில் தவித்தல், முன்னேற்றம் தடைப்படுதல், நம்பிய யாராவது கைவிடுதல் போன்ற நிலைகள் ஏற்பட்டால், அமைதியாக இருங்கள் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். பதற்றம், சோகம், கவலையென்று மூழ்கிவிடாதீர்கள். புத்தரைப் போன்ற நிலையை அடையுங்கள். அதுதான் ஆத்மாவுக்குள் ஊடுருவி பலன் தரும். உணர்ச்சிகள் வடிந்த பிறகு உள்ளம் தெம்பாக இருக்கும். ஆகையால், உங்களையே நீங்கள் வருத்திக் கொள்ளும் காரியம் எதையுமே செய்ய வேண்டியதில்லை.

ஆற்றாமையை வெளிப்படுத்திய பிறகும் அதன் காரணமான வெறுப்பு, விரக்தி எல்லாம் நமக்குள் தங்கியிருக்கும். நம்மீதே வெறுப்பும் நீடிக்கும். இத்தகைய எதிர்மறைச் சிந்தனைகளை உடனடியாக முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். ஏதாவது சோர்வு நேர்ந்தால், நான் அப்படி இருந்திருந்தால் இப்படி வந்திருக்காது. இதைச் செய்திருந்தால்... அப்படி நேர்ந்திருக்காது என்றெல்லாம் புலம்புவது வீண். அத்தகைய போக்கினைக் கைவிட்டாக வேண்டும்.

கடந்த காலம் எது எப்படி என்று யாரும் விவரிக்க முடியாது. இப்போது என்ன, இன்று என்ன என்பதுதான் புத்திசாலித்தனம். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே அதனால், நிலைமைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளுங்கள் என்கிறார் ஆன்மஞானி. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நினையுங்கள். அதையும் அமைதியாக எண்ணுங்கள். அப்போது எந்தப் புயலும் உங்கள் மனத்தை அசைக்காது. எதிலும் சிக்க மாட்டீர்கள். அமைதியாக இருக்கும்போது, எந்தச் சூழலும் அழகாகவே அமைந்துவிடும். புரிந்தும் புரியாததுமான சூழ்நிலை, எது நடக்குமோ எப்படி நடக்குமோ என்று தெரியாத நிலை ஆகியவற்றில் கூட நமக்கு அழகான நிலைதான் உருவாகும். நடப்பவை எல்லாமே மாற்றத்துக்கானவை, தடுமாறுவோம், விழுவோம், எழுவோம், இவை எல்லாவற்றிலும் நாம் ஓர் அங்கம் என்ற நிலை அமையும். அமைதியான மனத்துடன் உள்ளுக்குள் இசைமயமான நிலையுடன் போதுமான அடிகளை எடுத்து வைப்போம்.

**உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்:** அதைப் போல் நாம் நமது எண்ணத்தையும் உயர்த்திப் பிடித்து வைக்கவேண்டும். நமது பார்வைகள் அற்பத்தனத்தில் செல்லாமால் உயர்வாகவே இருக்க வேண்டும். அதற்கேற்ப பழகிக் கொள்ள வேண்டும். நேரமில்லாமல் போகக் கூடும். ஆனால், நமக்கு போதிய நேரம் வெகுமதியாகக் கிடைத்துள்ளது. நம்மைப் புதுப்பித்துக் கொள், நமக்குள் உற்சாகம் ஏற்படுத்திக் கொள்ள, உத்வேகத்தை அடைவதற்கு அந்த நேரம் பரிசாக அமைந்துள்ளது. சத்துள்ள உணவைச் சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழுங்கள். தேவையான அளவுக்கு உடற்பயிற்சியை மேற்கொள்ளுங்கள். நிறைய புத்தகங்களைப் படியுங்கள். தூண்டுதல் அளிக்கும் உரைகளைக் கேளுங்கள். மனத்தளவில் உயருங்கள். தினமும் தியானம் பழகுங்கள். எல்லாம்



நமக்குள் அமைதியை ஆழமாகப் பதிய வைப்பதற்குத்தான்.

நம்மை நாமே கவனித்துக் கொள்வதில் அழகான உறுதியான, பாதுகாப்பான தளர்நிலை ஆற்றலும் (resilient energy) ஒளியும் உள்ளது. அது இருளை விலக்கி ஒளி வீசச் செய்வது. உண்மையில், உலகில் உள்ள 95 சதவீத மக்கள் நல்ல மனம் படைத்த வர்கள் தான். ஆனால், 5 சதவீதம் தீய உள்ளம் கொண்டவர்கள் தான் தலைப்புச் செய்திகள் ஆகிறார்கள். சில மாற்றங்களைச் செய்ய வேண்டி யிருக்கும். அந்த மாற்றங்கள் உங்களது வாழ்க்கையைப் பிரகாச மாக்கும். வளமான எதிர் காலத்தையும் முன்கூட்டியே அறிவிக்கும். இதை நம்புங்கள். எதையெல்லாம் செய்ய முடியாது என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களோ அவையெல்லாம் சாத்தியமாகும். முன்பு நீங்களே கவனித்திருக்காத உங்களால் இயலக்கூடிய திறனை நீங்களை அறிவீர்கள். புதிய ஆற்றல் எழுச்சி பெறும். உங்களுக்குள் புதைந்து கிடக்கும் நுண்ணறிவு வெளிப்படும். தளர்நிலையின் மந்திரசக்தி இதுதான்.

**உங்களை நீங்களே வெல்லுங்கள்:**
உங்களுக்குள்ளேயே இருந்தபடி தடங்கல் செய்வது உங்களது ஆணவம் தான். உங்களது புரிதலை மறு அளவீடு செய்துவிட்டால், யார் துணையும் இல்லாமல் செயல்படுபவன் என்பது போல் உங்களைப் பற்றி நீங்களே அறிந்துகொள்வீர்கள். சில சமயம் உங்களது நண்பர்களில் சிலர் இரக்கமில்லாதவர்கள், பொறுப்பில்லா தவர்கள், ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்துக் கொண்டவர்கள் இருக்கக் கூடும்,

அத்தகையவர்களில் சிலர் நம்மை முழுமையாக ஏற்றுக் கொண்டு, நமது அமைதிக்கு உதவுபவர்களாகவும் இருப்பர். நம்மை முழுமையாக ஏற்று, அமைதியையும் ஆதரவையும் அளிப்போர் இருந்தால், வலிமையானவர்கள் ஆவோம். சோகம், கோபம், வருத்தம், விரக்தி, ஆதரவில்லாமை ஆகிய உணர்வுகளை நசுக்கிவிடுவோம். ஒழுங்கில்லாத எண்ணங்களை அவ்வப்போது தடுக்கவும் வேண்டும். காரணம், அவைதான் நம்மை விரக் தியில் தள்ளி விடுபவை. எதிர்மறைச் சிந்தனைகள் தோன்றிவிட்டால், யோசி த்து முறியடித்துவிடுங்கள்.

புயல் நம் வாழ்க்கையைச் சீர் குலைக்க வருவதில்லை. பாதையில் வழியை அமைத்துத் தர வருகிறது என்று ஞானி ஒருவர் கூறினார். ஆனால், பனி விலகிய பிறகு, நம் முன்னே பாதை முடிவில்லாமல் பளிச்சிடுவதைப் பார்க்கலாம்.

(கட்டுரை ஆசிரியர்கள் வாழ்வியல் Fitness for Life, Be Simply Spiritual, You Are Naturally Divine போன்ற நூல்களை எழுதியவர்கள். உடற்பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள். உடல் நலம் குறித்த Savurfaire என்ற பெயரில் வலைப்பூ நடத்துகிறார்கள்.)

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி



Wordsworld

# மடல்களில் பயணித்து...

சந்தியா ராவ்

*கடிதங்களைக் கைகளால் எழுதும் பழக்கம் போய்விட்டது. அதைப் பற்றியெல்லாம் இப்போது புத்தகங்களில்தான் படிக்க வேண்டியுள்ளது.*

அமெரிக்க வரலாற்று ஆசிரியை ஆட்ரீ ட்ரஸ்கி (Audrey Truschke) இந்தியாவில் அண்மையில் பயணம் செய்து கொண்டிருந்தார். ரோட்டரி நியூஸ் செய்தி மடலைப் படிப்போருக்கு அவரது பெயர் புதியதல்ல. அவர் எழுதிய அவுரங்கசீப்: “மனிதனும் மர்மமும்” (Aurangzeb: The Man and the Myth) என்ற நூலைப் பற்றிய கட்டுரை ஜூன் மாத இதழில் வெளியாகியிருக்கிறது.

ஹைதராபாதில் அவர் ஆகஸ்ட் மாதம் ஒரு நிகழ்ச்சியில் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவருக்கு ஆட்சேபம் தெரிவித்து, சிலர் ஹைதராபாத் போலீசாருக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அவை அச்சுறுத்தலாக இருந்ததால், அவர் நிகழ்த்துவதாக இருந்த உரை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. இது குறித்து தனது ஃபேஸ் புக் சமூக வலைதளத்திலும் பதிவு செய்திருக்கிறார் ட்ரஸ்கி. தெற்கில் இருந்த சுல்தான்கள் மீது அவுரங்கசீப் 1680ம் ஆண்டு நடத்திய தாக்குதல் குறித்தும், இந்தியாவில் பவுத்தம் முடிவுக்கு வந்ததற்கான காரணங்கள் குறித்தும் ஹைதராபாதில் பேசுவதாக இருந்தேன் என்று அவர் கூறிய பேட்டி தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகஸ்ட் 9ம் தேதி இதழில் வெளியாகியுள்ளது.

இது கவலைக்குரிய நிகழ்வு. அதே சமயம் அச்சுறுத்தல்கள், போலிச் செய்திகள், புகார்கள் ஆகியவற்றை அளிப்பதற்கு இடையில் கடிதங்களும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

ஒரு சுவையான புத்தகத்தை அண்மையில் படித்தேன். அதன் தலைப்பைச் சொல்லி முடிப்பதற்கு நேரமாகிவிடும். அதன் ஆங்கிலத் தலைப்பு The Guernsey Literary Potato Peel Pie Society. அதைத் தமிழில் செ ால்லப் போனால், கிட்டத்தட்ட தி குர்ன்ஸி இலக்கியமும் உருளைக்கிழங்கு உரித்தலும் என்று அமையும். நூலை எழுதியவர்கள் மேரி ஆன் ஷஃபெர் மற்றும் ஆன்னி பர்ரோஸ் என்ற இருவர்.

இந்தப் புத்தகத்தைப் ப்ளூம்ஸ்பர்ரி பதிப்பகம் 2008ம் ஆண்டு வெளியிட்டது. அதன் மறுமதிப்பு அண்மையில் வெளியாகியுள்ளது. அதை நெட்ஃப்ளெக்ஸ் இணையத்தில் திரைப்படமாகத்தான் பார்த்தேன். இந்த நூலைப் பற்றி ஒரு நண்பர் மூலம் ஏற்கெனவே அறிந்திருந்தேன். பிறகு, ஆர்வம் ஏற்பட்டதால், புத்தகத்தை வாங்கிப் படித்தேன். தலைப்பு நினைவில் வைத்துக் கொள்ள முடியாத அளவு நீளமாகவும் ஈர்க்கும் வகையிலும் இல்லை என்பதே உண்மை. அதனாலோ என்னவோ இதைப் படிக்கும் ஆர்வம் ஆரம்பத்தில் ஏற்படவில்லை.

குர்ன்ஸி என்பது இங்கிலாந்து கால்வாயில் அமைந்த ஒரு தீவு. நார்மா ண்டி கரையில் அமைந்துள்ளது. அங்கே பிரபலமான உல்லாச விடுதி உள்ளது.

இரண்டாம் உலகப் போரின்போது, ஜெர்மானியர்கள் அந்தக் கால்வாயைப் படையெடுத்து ஆக்கிரமித்தனர். அந்தப் படையெடுப்புக்கு முன்பு குர்ன்ஸியில் வசித்த மக்கள் தங்களது குழந்தைகளைப் பாதுகாப்பாக வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தனர். போர் முடிந்த பிறகு அந்தச் சிறுவர்கள் மீண்டும் தங்களது குடும்பத்தினருடன் சேரவில்லை. லண்டன் மீது நாஜிகள் குண்டு தாக்குதல் நடத்த வந்தபோது, அங்கே தங்க வைக்கப்பட்டிருந்த அந்தச் சிறுவர்கள் பாதுகாப்புக்காக உள்ளூர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவ்வாறு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்ட படங்கள் கிடைத்துள்ளன. ஆனால், அந்த மாதிரி சம்பவங்களின்போது குழந்தைகளைப் பிரிந்த பெற்றோர், பெற்றோரைப் பிரிந்த குழந்தைகளின் வேதனையான மன நிலையைச் சித்திரிப்பதாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

மிச்சேல் மகோரியன் (Michelle Magorian) எழுதிய குட்நைட் திரு. டாம் (Goodnight Mr Tom) என்ற புத்தகம் அப்படி பிரிவினால் தவித்த குடும்பங்களின் உணர்வுகளைச் சித்திரிக்கிறது.

குர்ன்ஸி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஜெர்மானியர்கள் கருதினர். அவர்கள் போர் முடிந்த பிறகும் தங்கியிருந்தது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதை மக்கள் சகித்துக் கொண்டனர். ஷஃபெர் குர்ன்ஸிக்குச் சென்றிருந்தார். அப்போது பனிமூட்டம் காரணமாக விமான நிலையம் மூடப்பட்டதால், அவர் அங்கேயே தொடர்ந்து சில காலம் தங்க வேண்டிவந்தது. அவர் அந்த இடத்தைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தார். அதனால் ஈர்க்கப்பட்டதால் புத்தகம் எழுதுவதற்கு ஆர்வப்பட்டார்.

வரலாற்றுக் குறிப்புகள் கொண்ட நாவலை அவர் எழுதுவதற்கு அதில் இடம்பெற்ற கதாபாத்திரங்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொண்ட கடிதங்களே பெரிதும் பயன்பட்டன. பெண் எழுத்தாளர் ஜூலியட் அஸ்தான், அவரது பதிப்பாளர் சிட்னி ஸ்டார்க், பன்றிகளை வைத்திருக்கும் விவசாயி டாஸே ஆடம்ஸ் போல பல பாத் திரங்கள் இடம்பெற்றுள்ளன.

குர்ன்ஸிக்கு மேரி ஆன் ஷஃபெர் சென்று இருபது ஆண்டுகள்






ஓடிவிட்டன. தற்போது ஷஃபெர் உயிருடன் இல்லை. அவரது மறைவுக்குப் பிறகே அந்த நாவல் வெளியிடப்பட்டது. அந்தப் பணியை அவரது மருமகள் ஆன்னி பர்ரோஸ் பூர்த்தி செய்துள்ளார். பர்ரோஸும் நல்ல எழுத்தாளர். அவர் தனது அத்தையின் நாவலைச் செப்பனிட்டார். ஷஃபெர் உயிருடன் இருந்தபோது, தனது நாவல் 13 நாடுகளில் வெளியாகும் என்பதை அறிந்திருந்தார்.

தி கார்டியன் (The Guardian) இதழில் 2008ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் தேதி ஸ்டீவ் டேவிஸ் இந்த நூலைப் பற்றி எழுதியுள்ளார்.

தி குர்ன்ஸி இலக்கியமும் உருளைக்கிழங்கு உரித்தலும் (The Guernsey Literary Potato Peel Pie Society) நாவல், மிகக் கொடூரமான காலத்திற்கு இட்டுச் செல்கிறது. ஷஃபெர் படைத்துள்ள கதாபாத்திரங்கள் அப்பாவிகள். தீய எண்ணங்கள் ஊடுருவவில்லை. அதுதான் மானுடத்தைக் காப்பாற்றியது என்று குறிப்பிட்டுள்ளார்.

குர்ன்ஸியில் அப்போது வாழ்ந்தவர்கள் யாரும் இப்போது உயிருடன் இருக்க மாட்டார்கள். ஷஃபெர் எழுதிய இந்தக் கதையைப் படிக்கும்போது, பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர் ஜேன் ஆஸ்டின்தான் எழுதியிருக்கிறாரோ என்று சந்தேகம் ஏற்படும். அந்த அளவுக்கு நேர்த்தியாக எழுதியிருக்கிறார் என்றும் ஸ்டீவ் டேவிஸ் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் அந்தக் காலத்தில் எப்படி இருந்தனவோ அவற்றை அப்படியே கண்முன் எடுத்துக் காட்டும் ஆற்றலை அவர் கொண்டிருக்கிறார். அது மட்டுமின்றி, அந்தக் காலத்துப் பண்பாட்டையும் அழகாக எடுத்துக் காட்டுவதைப் படிக்கும்போது புத்தகத்தின் மீது மிகுந்த மதிப்பு ஏற்படுகிறது. கடிதங்களை வைத்து இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய பண்பாட்டில் கைகளால் எழுதப்படும் கடிதங்கள் விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் ஆகும். அந்தக் காலத்திய ஒவ்வொரு புத்தகமும் மதிப்பு கொண்டது. வசீகரிக்கக் கூடியது என்கிறார் ஸ்டீவ் டேவிஸ்.

ஆனால், கடிதங்கள் மட்டுமே நாவல் ஆகிவிடாது. அவை நாளேடுகளின் செய்தி நறுக்குகள், டயரிக் குறிப்புகள் போல் ஏதாவது ஒரு வகை ஆவணங்களாகவும் இருக்கும். கடிதங்களை வைத்து புனைகதைகளும், கட்டுரைத் தொகுப்புகளும் வெளியாகியுள்ளன.

சின்னஞ் சிறுவனாக இருந்தபோது நான் படித்ததில் ஒன்று ஜேன் வெப்ஸ்டர் எழுதிய டாடி-லாங்-லெக்ஸ் (Daddy-Long Legs) என்பது குறிப்பிடத் தக்கது. 1912ம் ஆண்டு எழுதப்பட்டது. இப்போதும் சுவையானது. அதை இளம் பெண் போன்ற புத்தகம் ('girlie' book) என்று குறிப்பிடுகிறார்கள். அதைப் போல் அந்த நாவலில் எழுதப்பட்ட டியர் எனிமி (Dear Enemy) நாவலும் அதைப் போலத்தான். ஆனால், தொடர்ச்சியாக 1875-1926ம் ஆண்டுகளில் வாழ்ந்த ரெய்னர் மரியா ரில்கி (Rainer Maria Rilke) எழுதிய லெட்டர்ஸ் டு எ யங் போயட் (Letters to a Young Poet) என்ற நாவல் புனை கதை அல்ல. பத்து உண்மையாகவே எழுதப்பட்ட கடிதங்களின் தொகுப்பு. மத்திய ஐரோப்பிய நாடோடி இனமான போயிமியன்-ஆஸ்திரியன் என்ற இனத்தைச் சேர்ந்த கவிஞர் ஒருவர் பிரான்ஸ் ஸேவியர் கப்பஸ் (Franz Xaver Kappus) என்ற இளம் கவிஞருக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பாகும். அந்தப் படைப்புகள் எக்காலத்துக்கும் பொருந்துவனவாக இருப்பதைத்தான் ரில்கி குறிப்பிடுகிறார்.




கப்பூஸின் கடிதத்துக்குப் பதில் போடும்போது, ரில்கி 28 வயது இளைஞர் என்பதை மறக்கக் கூடாது. அவர் தனது முதல் கடிதத்தில் என்ன கூறுகிறார்?

உங்களது கவிதைகள் நன்றாக இருக்கின்றனவா என்று நீங்களே உங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். அதைப் பதிப்பாளர்களுக்கு அனுப்புகிறீர்கள். இதர கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். பதிப்பாளர்கள் அதைச் சில சமயம் நிராகரிக்கும்போது மனத்துக்குச் சங்கடமாகத்தான் இருக்கும். நீங்கள் கேட்பதால் இந்த அறிவுரையைக் கூறுகிறேன். எல்லாவற்றையும் நிறுத்தி வையுங்கள். இப்போது எதையும் செய்ய வேண்டாம். யாரும் உங்களக்கு உதவவோ வழிகாட்டவோ மாட்டார்கள். இதற்கான உண்மையான விடையைக் காண்பதற்கு நீங்கள் உங்களுக் குள்ளேயே தேடிக் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகிறார்.

அவர் தனது நான்காவது கடிதத்தில், உங்களது குரலைக் கேட்க விரும்புகிறேன் நண்பரே. உங்கள் மனத்தில் தீர்க்கப்படாத குறை என்ன என்று அறிவதில் பொறுமை காப்பேன். வெளிநாட்டு மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைப் போல், பூட்டிய அறைகளைப் போல் இருக்கும் கேள்விகளை நீங்களே நேசிக்கத் தொடங்குங்கள். விடைகளைக் காணவேண்டும் என்று இப்போது முயற்சி செய்யாதீர்கள். அவை உங்களுக்குக் கிடைக்காது. நிலைக்காது. ஒவ்வொன்றையும் அனுபவியுங்கள். அப்போது தெரியும் என்கிறார். இப்படி அது அற்புதமான உணர்வையும் அழகான உள்ளுணர்வையும் வெளிப்படுத்துகிறார் இது போதாதா அவர் சிறந்த கவிஞர் என்பதற்கு!

தேடுங்கள், தோண்டுங்கள் கடிதங்களை உங்களை வியப்பில் ஆழ்த்தும். ஆத்மாவைத் தொடும். அவற்றை மூழ்கி, மூழ்கித் தேடிக் கொண்டேயிருங்கள்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்



# வெற்றிகரமான சங்கங்களுக்கு சிறந்த வழிமுறைகள்

ஆதேஷ் சிக்ச்சி

ரோட்டரி என்றால் சேவை என்று பொருள், மற்றும் நமது நான்கு-வழிச் சோதனை நம் செயல்கள் தேவையானவர்களுக்கு சென்று சேர வேண்டுமென காட்டுகிறது. நாங்கள், நவி மும்பை ரோட்டரி சங்கத்தை சேர்ந்தவர்கள், இதை நமது பெரும் பாலான செயல்களிலும் நிகழ்வுகளிலும் செய்து காட்டியுள்ளோம். சிலவற்றை குறிப்பிட வேண்டுமென்றால்;

### மலர்ச்செண்டுகள்/பரிசுப் பொருட் களுக்கு பதிலாக சாப்பாட்டு கூப்பன்

எந்த விருந்தினர்களுக்கும் மலர்ச் செண்டுகளோ/பரிசுப்பொருட்களோ கிடையாது. இதற்குப் பதிலாக சிறப்பு விருந்தினரால் கையெழுத்திடப்பட்ட இலவச மதிய உணவுக் கூப்பன்களை கொண்டு அவரது சார்பில் சங்கம் தேவையானவர்களுக்கு உணவு அளிக்கும். இந்த கூப்பன்களை சங்கம் ஆண்டு முழுவது சேகரித்து வைத்திருந்து ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்கும்.

### பசுமை நிதி

நமக்கான வளாகம் நம்மிடம் உள்ளது. புதிய மரக்கன்றுகளை நடுவதற்கு பதிலாக, ஏற்கனவே வழங்கியவரின் பெயரைத் தாங்கி நின்றிருக்கும் மரங்களோடு பிறவற்றையும் சேர்த்து பராமரிக்க உறுதி கொண்டுள்ளோம். விமரிசையாக பிறந்தநாள்/ஆண்டுவிழா போன்றவற்றிற்கு செலவிடாமல், அந்த நிதியை மரங்களை பராமரிக்க பயன்படுத்துகிறோம். மூன்று வருடங்கள் மட்டுமே வாழும் அல்லது புகைப்படங்களில் மட்டும் எஞ்சும் 100 மரக்கன்றுகளை நடுவதை விட, வளர்க்கப்படும் அல்லது பராமரிக்கப்படும் ஒரு மரம் பெரியது. அருகிலிருக்கும் சங்கங்களின் தலைவர்களின் பெயர்களில் ஒவ்வொரு மரக்கன்றுகளை நடுவதோடு, அச்சங்கத்தினர் நிகழ்ச்சிகள் நடத்திக்கொள்ள மிகுதியான விடுதி வாடைகைகளை தவிர்க்க நமது வளாகத்தையும் அவர்களுக்கு இரவல் தருகிறோம். பிற சங்கங்களை இணைத்து நிகழ்ச்சிகளை நடத்தி செலவை குறைப்பதையும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஒவ்வொரு சதுர அடிக்கும் தொண்டை அதிகப்படுத்துவதே எங்கள் நோக்கம். ஆதலால் கூடுதலாக ரோட்டரி ஹாலில் மருத்துவ மையம், பசுமைத் தோட்டம், யோகா வகுப்புகள் ஆகியவற்றை நாங்கள் நடத்துகிறோம்.

### குடும்பமும் உறுப்பினரும் ஒரே இடத்தில்

ஒரு ரோட்டரியனின் குடும்பத்தை உறுப்பினர்களாக ஏற்க அவர்களின் பங்களிப்பை எதிர்பார்க்கிறோம். இந்த ரோட்டரியன்களை வரவேற்புரை, வாழ்த்துப் பாடல், தொகுத்து வழங்க, நன்றியுரை வழங்க ஆகியவற்றைச் செய்யக் கோருவோம். இதன் வழியே குடும்பத்தின் அழுத்தத்தால் உள்ள வந்த ரோட்டரியன்களை நீக்க முடிகிறது.

### ஊருடன் ஒத்து வாழ்

சாதாரண மனிதரிலிருந்து நம்மை வேறு படுத்தி காட்டும் இந்த ''சூட்-டை'' கலாச் சாரத்தை தவிர்த்து, சங்கம் தொடர்பான செயல்களுக்கு ரோட்டரி டீசர்ட்டை அணிய கேட்டுக்கொள்கிறோம்.

### செய்யாததை செய்

பெரும்பாலான சேவை பணியாளர்கள் காவலர்கள், பேருந்து ஓட்டுனர் போன்றவர்கள் (தூசிமிகுந்த, இரைச் சலான மற்றும் வெப்பமான) கடினமான சூழ்நிலைகளில் பணிபுரிகிறார்கள். ரோட்டரி குறியீட்டுடன் காவல் நிலை யங்களுக்கு ஏசி மற்றும் மின்விசிறி வழங்குவது போன்ற சிறப்பு திட்டங்களை குறித்து வைத்துள்ளது. ரோட்டரி சங்கத்தின் சக்கரம் சங்கம் மற்றும் உறுப்பினர்களின் கூட்டு உழைப்பால்தான் முன்னகர முடியும். சங்கங்கள் சக்கரத்தின் கம்பிகள், உறுப்பினர்கள் அதன் அச்சாணி.

### போரை வெல்ல களத்தில் இரு

சங்கங்கள் அவர்கள் திட்டங்களின் நீடிப்புத்தன்மையை சோதித்து, அவர்களின் சேவைகள் தேவையான வர்களுக்குத் தான் சென்று சேர்கிறதா என உறுதி செய்ய வேண்டும். நிதிகளை தேவையானவற்றை வழங்கிவிட்டு நமது பணி நிறைவடைந்ததாக இருந்துவிடுவது எளிது. ஆனால் உறுப்பினர்கள் அவர்கள் சேவை செய்யும் இடங்களுக்கு அடிக்கடி சென்று நடக்கும் வேலையை சரிபார்க்க வேண்டும்.

### அவர்கள் தொடங்கி வைக்கட்டும்

குறைந்தபட்ச சேவைத் திட்டங்களுக்கான அழுத்தம் உறுப்பினர்களால் வழங்கப் பட்டுள்ள நிதியுடன் ஒத்துப்போக வேண்டும். உண்மையிலேயே தேவையானவர்களை நோக்கி நாம் செல்லவேண்டும். சங்க இயக்குனர்களை அவர்கள் சேவை திட்டங்களின் விழாவின் போது அவர்கள் தலைமை தாங்குமளவுக்கு முதலிலிருந்தே இதில் ஈடுபடுத்த வேண்டும். மரியாதையுடன் கூடிய பொறுப்பு உங்கள் குழுக்களின்/ இயக்குனர்களின் முழு செயல்திறனையும் வெளிக்கொணர வைப்பது. ஒரு வெற்றிகரமான சங்கத்திற்கு தேவையான அடிப்படை திட்டங்கள் இவை. ஆர்வமற்ற/தகுதியற்ற ஒருவரை விட தகுதியுள்ள ஒருவரை இணை இயக்குனராக நியமிக்க வேண்டும்.

IPP ராஜீவ் மணியர், தலைவர் ஆனந்த துருவ் ஆகியோரின் துணை யுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய தோடு, இனி வரும் ஆண்டுகளில் இதைத் தொடரவும் நினைக்கிறோம்.

*எழுதியவர் RC நவி மும்பை D 3142 வின் 2019-20 தலைவர் ஆவார்.*

# நவநாகரிகமான சென்னை மனிதன்!

TCA ஸ்ரீநிவாச ராகவன்

சென்னையில் கடந்த மாதம் ஒரு சாதாரண நிகழ்ச்சியில் பங்கேற்றேன். அது என் வீட்டிலோ ஏன் என் ஊரிலோ நடந்தது அல்ல. என்னைப் பொறுத்தவரையில் தில்லி, மும்பை ஆகிய இடங்களை விட, சென்னையில் நேர்த்தியாக வாழ்வதற்குப் பல வழிகள் உள்ளன.

நான் தில்லியில் 1958ம் ஆண்டு மே 7ம் தேதி முதல் வசித்து வந்திருக்கிறேன். அறுபது வருடங்கள் ஆகிவிட்டன. அமிதாப் பச்சன் தில்லியைப் பற்றி ஒரு ஹிந்தி திரைப்படத்தில், I can talk Delhi, I can walk Delhi, because Delhi Sir is a very phunny (funny) city (நான் தில்லியைப் பேசுவேன். தில்லியில் நடப்பேன். காரணம், தில்லி சார் ரொம்ப தமாஷான நகர்) என்று ஆங்கிலத்தில் பேசுவார்.

தில்லியில் ஆடை அணிவது விநோதமானது. பெண்கள் மட்டும் அலங்காரமாக ஆடைகள் அணிவார்கள் என்பதில்லை. அமெரிக்காவின் அந்நாளைய பாதுகாப்பு ஆலோசகர் காலின் பாவெல் ஆண்கள் கூட தோகைகளை விரித்திருக்கும் மயிலைப் போல் அடைகள் அணிவார்கள் என்று தில்லி வாசிகளை வருணிப்பார்.

தில்லி விஷயத்தில் எனக்கும் என் மனைவிக்கும் எப்போதும் கருத்து வேறுபாடு உண்டு. நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது வெள்ளைச் சட்டையும் சாம்பல் நிற பேண்ட்டும் சீருடைகள். கல்லூரியில் படித்தபோது நான் விடுதியில் தங்கியிருந்தேன். பெரிதாக ஆடைகளை மாற்றவில்லை. வேலை கிடைத்தபோது நான் சாதாரண ஆடைகளைத்தான் அணிந்துவந்தேன். கடந்த அறுபது ஆண்டுகளாக வெள்ளை நிறக் கதர்ச் சட்டையைத்தான் அணிகிறேன்.

வேலை கிடைத்த பிறகு எனக்கும் ஒரு காதலி கிடைத்தாள். எனது ஆடைகளைப் பற்றி ஏதாவது சொல்வாளே என்பதால் அவளை நீண்ட தூரத்துக்கு அழைத்துச் செல்லாமல் இருந்தேன். இருந்தாலும், எனது ஆடைகள் ஒரே மாதிரி இருக்கின்றன என்றும் அழகாக இல்லை என்றும் கூறினாள். அவள் என்னை ஷூக்களை அணியும்படி வற்புறுத்தினாள். நீயும் அணிந்துகொண்டால், நான் அணிகிறேன் என்று கூறினேன். இப்படி தொணதொணத்த பிறகு சில வாரங்கள் கழித்து இரு நவீன சட்டைகளை எனக்கு வாங்கி வந்திருந்தாள். ஒன்று மஞ்சள் நிறம், மற்றது நீல நிறம். நான் அவற்றை அணிந்தே தீர வேண்டும் என்று நச்சரித்தாள். இந்தக் கண்றாவியையெல்லாம் சகித்துக் கொண்டதால் சமாதானம் ஏற்பட்டது. ஓராண்டு கழித்து, கடைசியில் அவள் இந்த விஷயத்தில் அலுத்துப் போய்விட்டாள். நான் பழையபடியே மாறிவிட்டேன்.


*வேலை கிடைத்த பிறகு எனக்கும் ஒரு காதலி கிடைத்தாள். எனது ஆடைகளைப் பற்றி ஏதாவது சொல்வாளே என்பதால் அவளை நீண்ட தூரத்துக்கு அழைத்துச் செல்லாமல் இருந்தேன்.*


சென்னையில் நடந்த நிகழ்ச்சியைப் போல் ரொம்ப நாளாக எதிலுமே கலந்து கொண்டதில்லை. உண்மையில் மனத்தளவில் நான் சென்னை ஆசாமிதான். அந்த நிகழ்ச்சியில் பெண்கள் அழகழகாக விதவிதமான ஆடைகளுடன் வந்திருந்தனர். ஆண்களோ ஏதோ அலுவலகம் செல்வது போல் ஆடைகள் அணிந்து வந்திருந்தனர். அந்த நிகழ்ச்சி வேறு காலை 8 மணிக்கு நடைபெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

நானும் அது மாதிரிதான் சாம்பல் பேண்ட், வெள்ளைச் சட்டை அணிந்திருந்தேன். தில்லியில் எல்லாம் வெள்ளைச் சட்டை அணிந்து வெளியே போனால், சுற்றுச்சூழல் மாசினால் அது பழுப்புச் சட்டை ஆகிவிடும். அந்த நிகழ்ச்சியிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசம் காண்பது தில்லிவாசிகளின் கண்களுக்கு அரிதானது; பின்னாடியிருந்து பார்த்தால், ஆண், பெண் வித்தியாசத்தைக் காண முடியாது.

அங்கேயெல்லாம் ஆண்கள் எப்போதாவது ஓரிரு முறை மட்டுமே அணிந்து கொள்ளும் பைஜாமா ஜிப்பாவுக்கு மட்டும் ரூ.20 ஆயிரம் செலவு செய்வார்கள். சென்னையில் அப்படியெல்லாம் கிடையாது என நினைக்கிறேன். ஒரு காலத்தில் இடுப்பில் வெள்ளை வேட்டியும் மார்பில் சட்டை கூடாமலும் இருந்த மக்கள் என் நினைவுக்கு வருகிறார்கள். அதெல்லாம் குளிர்சாதனப் பெட்டிகள் (ஏசி) அதிகமாக வராத காலம். இப்போது ஜிப்பா, வெள்ளைச் சட்டையெல்லாம் நவீன உடை (fashion) ஆகிவருகிறது.■






LATIM

COLOUR COATED STEEL

# Coloured steel that stands the test of time








LATIM's high quality galvanized / galvalume colour coated steel coils available in various designs, thickness, size & colours can be used for various applications - Roofings, Claddings, Crimping, Furnitures, False Ceilings, Shutter Doors, Vehicle Bodies, Decorative Container & Trunks, etc. **Ideal for Interior and Exterior Applications.**



**Colour coating Plant at Umbergaon, Gujarat**

- **Colour coated roofing sheet in various profiles design available on special request**
- **Available in various thickness, sizes and colours.**

LATIM GROUP

**Corporate Office :** 401, Navkar Plaza, 4th Floor, Bajaj Road, Vile Parle (West), Mumbai - 400056.
Tel : (022) 26202290, 26203399, 26203434, 26201166

**Works :** Industrial Plot No. 270, 271, GIDC, Umbergaon, Valsad. Gujarat - 396171

• E-mail : sales@latimsourcing.com • Web : www.latimprofile.com

Signature Advertising



# Open air bliss

As the sky darkens with rain-bearing clouds, this man is enjoying natural fresh air at a field in Kolkata.

Picture: Rtn Rakesh Bhatia

ADVT

# SIGNATURE PROJECTS
## OF ROTARY DISTRICT 3012

Rotary District 3012 | BE THE INSPIRATION R.I. THEME 2018-19



**Subhash Jain AKS**
District Governor 2018-19

## ROTARY VARDAN BLOOD BANK




RUN BY :
- RC SAHIBABAD
- RC GHAZIABAD GREATER
- RC GHAZIABAD INDUSTRIAL TOWN



## ROTARY PATHLAB & DIAGNOSTIC CENTRE
RUN BY RC DELHI VIKAS




## ROTARY CHARITABLE DIALYSIS CENTRE
RUN BY RC DELHI SHAHDRA




## ROTARY NOIDA BLOOD BANK
RUN BY RC NOIDA








## AKS & Major Donors *Dinner*

**Sunday, 9th September 2018**
**Hotel Radisson Blu,** Kaushambi Ghaziabad




